மங்கையர் மலர்

ஜூலை '87 விலை ரூ. 3.



'காஞ்சிபுரம் பட்டுப்புடவை'யென கண்டுபிடிப்பது எப்படி?


1வது வாரம்
2வது வாரம்
3வது வாரம்
4வது வாரம்
5வது வாரம்
6வது வாரம்
இதோ!
6 வாரங்களுக்குள்
உங்கள் எழில்வண்ணம்
மேலோங்குகிறது
க்ளியர்•டோன்
எழில்வண்ண திட்டம்
இதுவன்றோ சமயம், க்ளியர்-டோன் எழில் வண்ணத்தை
நீங்களும் கண்டுகொள்வதற்கு?
Clear·tone
the perfect fairness cream



என் வரைக்கும் தண்ணீர் வருமா?

* சென்னை திருவான்மியூரில் தண்ணீருக்காக நின்றிருந்த 'கியூ'வின் ஒரு பகுதிதான் இது. குடங்களின் அணி வரிசை ஒரு கிலோ மீட்டர் நீளம் இருக்கும். 'இன்னும் எத்தனை நாளைக்கு இந்த அவல நிலை?' என யோசிக்கிறாரோ போட்டோவிலுள்ள கடைசிப் பெண்மணி?

* 'ஞானபூமி' பத்திரிகையை 'விடியோ கேசட்'டாகப் புதிய முயற்சியாகத் தயாரித்துள்ளார் ஆசிரியர் மணியன். காலைக் கதிரவன் உதயத்துடன் தொடங்கும் விடியோ காளிகாம்பாளின் குங்குமார்ச்சனையோடு முடிகிறது. தெய்வீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள பெண்களுக்குப் பிடிக்கும்.





புதிய வகையில் ஒரு சோஃபா வந்திருக்கிறது இப்போது. நம்முடைய சௌகரியப்படி எப்படி உட்கார்ந்தாலும் இது அதற்குத் தகுந்தாற்போலமாறும்வடிவமைப்பு கொண்டது. 'பீன் பேக்' என அழைக்கப்படும் இதை 'சிங்கு' நிறுவனத்தினர் தமிழ்நாட்டிற்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.



ராஜீவால் மாம்பழத்துக்கு யோகம்!

இது மாம்பழ சீஸன்! திரும்பிய பக்கமெல்லாம் வண்டி வண்டியாக மாம்பழந்தான். இந்தத் தடவை விளைச்சல் அதிகமா?

"ஆமாம், சாதாரணமாக ஒரு பருதியில் ஆயிரம் பழங்கள் பழுக்குமென்றால், இந்தத் தடவை நாற்பதாயிரம் பழங்கள் பழுத்திருக்கு. அதுதான் மாம்பழக் குவிப்புக்குக் காரணம்" என்கிறார் இந்த வியாபாரத்தில் நீண்ட வருடங்களாக அனுபவம் பெற்றிருக்கும் அப்துல் கபூர்.

"இந்தத் திடீர் விளைச்சலுக்கு என்ன காரணம்?"

"போன வருடம் மாம்பழங்களுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை இருந்ததுதான் காரணம்!" என்கிறார்.

மாம்பழ வியாபாரத்தையே தொழிலாகக் கொண்டு, இன்ஜினியரிங், சார்டர்ட் அக்கவுண்டண்ட் படித்த தன் ஏழு மகன்களையும் கூட இந்த வியாபாரத்திலேயே ஈடுபடுத்தி இருக்கிறார். சென்னையில் தோட்டக்கலை சங்க இடத்தில் இந்த முறை பெரிய ஸ்டால் ஒன்றைத் திறந்து விற்பனை செய்கிறார்கள் இவர்கள்.



அப்துல் கபூர்

மாம்பழத்தைப் போலவே சுவையான செய்திகள் பல —

* சென்ற வருடம் ராஜீவ் காந்தி பாகிஸ்தான் அதிபர் ஜியாவிற்கு வாழ்த்து அனுப்பும் வகையில் மாம்பழக் கூடையை அனுப்பினார். அது முதல் வெளிநாட்டு நண்பர்களுக்கு 'வாழ்த்தாக 'மாம்பழக் கூடை' அனுப்புவது ஒரு ஃபேஷனாகி விட்டது. நாங்கள் அங்கிருக்கும் நேரத்திலேயே சிங்கப்பூருக்கு இரண்டு 'கூடைகள்' 'பொக்கே' போனது.

* மாம்பழத்தில் ருமானி, கிளிமூக்கு, பதாமி, ரசாலா, காலாபேட், பங்கனபள்ளி எனப் பல வகைகள் இருந்தாலும் உயர்ந்த ரகம் 'அல்போன்ஸா' தானாம்.

* வெளிநாடுகளில் மற்ற நாடுகளின் மாம்பழங்களைவிட இந்திய 'அல்போன்ஸா' மாம்பழங்களையே அதிகம் விரும்புகிறார்களாம். மாம்பழம் என்பதைவிட அல்போன்ஸா என்றால்தான் தெரியுமாம் சினர்களுக்கு. நல்ல அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகிறதாம் இந்த மாம்பழங்கள்.

ஏ. ஜி. சன்சின் மற்றொரு பாகஸ்தர் சையது சகிர் அஹமது சொன்ன இன்னொரு தகவல் —

"சில வியாபாரிகள் முன்பெல்லாம் பழங்களைப் புகைபோட்டுப் பழுக்க வைப்பார்கள். இப்போது ஒரு வகை கெமிகலை உபயோகித்து காய் வாட்டான பழங்களை பழுக்க வைக்கிறார்கள். மாம்பழங்களை சாப்பிடுவதால் 'டயரியா' வருகிறது என்றால் 'ஈ' தவிர இதுவும் ஒரு காரணம்.

அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. போட்டி வியாபாரத்தில் குறுகிய நேரத்தில் பணம் சம்பாதித்தாக வேண்டும். மரத்தில் பழுக்க விட்டு எடுப்பதற்கு நேரம் இருப்பதில்லை..."

"உங்க பழங்களும் அப்படித்தானோ..?"

"இல்லை. நாங்கள் மொத்த வியாபாரிகளிடம் வாங்குறதில்லை. தோட்டத்தையே குத்தகை எடுத்துப் பழுத்த நிலையில்தான் எடுக்கிறோம். எங்களிடம் அல்போன்ஸா தான் அதிகம். அதிக பழங்களை 'பல்ப்' போன்ற டப்பி உணவாக மாற்றி விடுகிறோம். வெளிநாட்டு ஏற்றுமதியே எங்களிடம் அதிகமாதலால் நாங்கள் அரைவெட்டுக் காய்களைப் பறிக்க வேண்டிய அவசியமில்லை..."

"எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்...?"

"இந்த வருடம் ஸ்டால் போட்டோம். அடுத்த வருடம் பெரிய மாம்பழக் கண்காட்சியே நடத்த வேண்டுமென்பது எங்களுடைய ஆசை..."

பேட்டி: டி. ஆர். ரமேஷ்
புகைப்படங்கள்: பிரஸ் போட்டோ பீரோ

உற்சாக ஆரவாரம் வேண்டும்!



* மெரீனா மைதானம். என்றும் கண்டிராத ரஸிகர் கூட்டம். போலீஸ்காரர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வரிசையாக நின்ற நிலை. பெண்கள் கிரிக்கெட் பந்தயத்துக்கு இத்தனை கூட்டமா? பத்திரிகைக்காரர்களே மூக்கின் மேல் விரல் வைத்த காட்சி!

லக்ஷ்மி தேவி நினைவுப் பெண்கள் கிரிக்கெட் போட்டி இறுதி ஆட்டத்தில் மகாராஷ்டிர அணியினரும் தமிழக அணியினரும் ஆடிய ஆட்டத்தைக் காணத்தான் ரஸிகர்கள் பெருமளவில் கூடியிருந்தார்கள். காப்டன் சுதாஷாவின் தலைமையில் தமிழகக் குழு வெற்றிவாகை சூடிய போது ரஸிகர்கள் இருபுறமும் வரிசையாக நின்று தமிழக ஆட்டக்காரர்களுக்குக் கரகோஷமிட்டு வாழ்த்தினர். 'பெண்கள் கிரிக்கெட்டா' என்று 'உச்சு' கொட்டும் ஸ்ரீகாந்த் இந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டார். டெஸ்ட் ஆட்டக்காரர் ஸ்ரீகாந்த் பரிசு வழங்கியதோடு தமிழக அணியினரையும் பாராட்டி நாலு வார்த்தைகள் பேசியிருக்கிறார் என்றால் பெண்கள் கிரிக்கெட் இன்று வெகு வேகமாகப் பிராபல்யமாகிக் கொண்டு வருவதில் அதிசயமில்லை!

* லக்ஷ்மி தேவி நினைவு கிரிக்கெட் போட்டியில் நான்கு அர்ஜுன விருது பெற்ற இந்திய டெஸ்ட் ஆட்டக்காரிகள் கலந்து கொண்டது தனிச் சிறப்பு. சந்த்யா அகர்வால், எடுல்ஜி டயானா, சாந்தா ரங்கசாமி, சுபாங்கி குல்கர்னி ஆகிய நால்வருமே ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்தனர்.



* தமிழக காப்டன் சுதாவுடன் சக ஆட்டக்காரிகள்.

சந்த்யா அகர்வால் உலக ரிகார்டு கண்டவர்களில் காவஸ்கரைப் போலப் பெண்கள் கிரிக்கெட்டில் அதிக ரன் எடுத்த பெண்மணி என்ற புகழைப் பெற்றவர். இங்கிலாந்தில் 190 ரன்கள் சந்த்யா அகர்வால் எடுத்த இமாலய சாதனையைக் காவஸ்கரோடு ஒப்பிட்டுச்சொன்னாலும் அவர், "என்னை காவஸ்கரோடு ஒப்பிட்டுப் பார்த்தால், என் சாதனை சிறு துரும்புக்குச் சமம்" என்று அடக்கத்தோடு பதில் சொல்கிறார்.

சந்த்யா அகர்வாலின் 190 ரன்கள் கிடைத்த நிகழ்ச்சி அவரது நினைவை விட்டு என்றும் மறக்க இயலாத ஒன்று. இங்கிலாந்து கோஷ்டி 350 ரன்கள் எடுத்து இந்தியக் குழுவைக் குறைந்த எண்ணிக்கையில் பலரை அவுட்டாக்கிய தருணம்-டிரஸ்ஸிங் அறையிலிருந்து காப்டன் 'Follow on' ஆகாதபடி சந்த்யா அகர்வாலுக்கு எச்சரிக்கை வேறு விடுத்திருந்தார்! பிளாக்பூல் டெஸ்டில் சந்த்யா அகர்வால் எடுத்த 134 ரன்கள் நம்பிக்கைத் துளிரை உண்டு பண்ணியது. மணிமாலாவும் சந்த்யா அகர்வாலும் அன்று ஆடி 121 ரன்கள் எடுத்ததும், மறு நாள் மூன்று விக்கெட்டுகள் சரிந்து கடைசி பாட்ஸ்வுமன் சுஜாதா ஸ்ரீதர் நின்று ஆடி, சந்த்யா அகர்வால் இமாலய சாதனை செய்ய ஒத்துழைத்தார்!

இந்தோர் மேற்கத்திய ரயில்வேயில் உதவி ரிஸர்வேஷன் அதிகாரியாகப் பணியாற்றும் சந்த்யா அகர்வாலுக்கு வயது இருபத்தைந்து: இந்தோர் சர்வகலா சாலை பி. ஏ. பட்டதாரி. இவரது பயிற்சியாளர்கள் மதுகர் பட்கி, கோபால் டாரே ஆகியோர். முதல் டெஸ்ட் பிரவேசம் 1984 இல் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கெதிராக. கிரிக்கெட் தவிர சந்த்யா அகர்வாலுக்கு பாட்மிண்டனும், டேபிள் டென்னிஸும் ஆடத் தெரியுமாம்.

"பெண்கள் கிரிக்கெட் பிராபல்யமடைய என்ன செய்ய வேண்டும்?"

"பெண்கள் கிரிக்கெட் அணியினருக்கு நிறைய போட்டிகள் ஏற்படுத்தினால் நிச்சயம் பெண்கள் கிரிக்கெட் பிராபல்யமடையும்" என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் சந்த்யா அகர்வால்.

* "இந்தியாவுக்கு வந்திருந்த இங்கிலாந்து குழுவினருக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் வசதியும் உபசரிப்பும் கொடுத்தோம். ஆனால் எங்கள் இங்கிலாந்து பயணத்தில் உணவு விஷயத்திலோ, தங்குமிட வசதிகளிலோ எந்தவிதக் கருத்தும் இங்கிலாந்து அணியைச் சேர்ந்தவர்கள் கவனம் செலுத்தவில்லை! என்று குறைப்பட்டார் எடுல்ஜி டயானா.

பம்பாயில் நெய்ஹிண்ட் கல்லூரியில் பயின்றவள் டயானா எடுல்ஜி. 1975 இல் பூனாவில் ஆஸ்திரேலியக் குழுவுக்கெதிராக டெஸ்ட் ஆடும்வாய்ப்பைப் பெற்றார்.

மேற்கிந்தியத் தீவுக் குழுவுக்கும் இந்திய அணிக்கும் நடைபெற்ற டெஸ்ட் பந்தயங்களில் பாட்னாவில் நடைபெற்ற பந்தயமே இந்தியாவுக்கு வெற்றியை ஈட்டித் தந்தது. இந்தியக் குழு 25 ரன்களுக்கு ஐந்து விக்கெட்டுகளை இழந்துவிட்ட நிலை. ஆச்ன் இட்டாச் சார்யாவும் எடுல்ஜி டயானாவும் சேர்ந்து ஆடி இந்தியாவுக்கு வெற்றி தேடித் தந்தது அதிசயிக்க வைத்த நிகழ்ச்சி.

பெண்கள் கிரிக்கெட்டில்நூறு விக்கெட்டுகளுக்கு மேல் எடுத்த ஒரே பெண் எடுல்ஜி டயானாதான். இப்பொழுது அவரது ரிகார்டு 114. எடுல்ஜி டயானாவின் எதிர்கால ஆசை: "இருநூறு டெஸ்ட் விக்கெட்டுகளை எடுத்துத் தன்னிகரற்று விளங்க வேண்டும்!" கிரிக்கெட்டைத்தவிர எடுல்ஜி டயானாவுக்குக் கூடைப் பந்தாட்டமும் டேபிள் டென்னிஸும் தெரிந்த விளையாட்டுக்கள்!

* அர்ஜுனா விருது பெற்ற சுபாங்கி குல்

கர்னி மகாராஷ்டிரக் குழுவுக்கு ஆடி வருபவர். இங்கிலாந்தில் இவரது 118 ரன்கள் குறிப்பிடத்தக்க சாதனை. பூனா பெர்குஸன் கல்லூரி பி. ஏ. பட்டதாரி.

"இங்கிலாந்து பயணத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்ன?"

"மெரீனா மைதானத்தில் நிறையப் பேர் பெண்கள் கிரிக்கெட்டைப் பார்த்து ரஸிக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்து டெஸ்ட் பந்தயங்களின் போது ரஸிகர்கள் கூட்டம் மிகக் குறைவு. கைதட்டலோ, உற்சாக ஆரவாரமோ அங்கு எங்களுக்குக் கிடைக்கவில்லை!" என்று குறைப்பட்டார் சுபாங்கி குல்கர்னி.

பூனாவில் சுபாங்கி குல்கர்னி கனில் காவஸ்கரோடும் ராஜு மேத்தாவுடனும் பார்ட்னராகப் பணிபுரியும் நிறுவனம் "Sunny Sports Boutique." விளையாட்டுக் கலைப் பொருள்களை இந்தியா முழுதும் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

"பெண்கள் கிரிக்கெட் பந்தயம் பிராபல்யமாக்க என்னென்ன செய்யலாம்?"

"பெரிய பந்தயங்களாகத் தேசிய விளையாட்டுப் போட்டியும் இண்டர் ஜோனல் பந்தயங்களும் மட்டுமே உள்ளன. மூன்று நாள் ரஞ்சித் கோப்பைப் பந்தயத்தைப் போலப் பெண்களுக்கும் கிரிக்கெட் பந்தயத்தை உருவாக்கினால் மூன்று நாள் பெண்கள் கிரிக்கெட் பந்தயம் ரஸிகர்களைப் பெரிதும் கவரும்!" என்கிறார் சுபாங்கி குல்கர்னி.

* பெங்களூர் குழுவின் காப்டன் சாந்தா ரங்கசாமி. அர்ஜுன விருது பெற்ற ஆட்டக்காரி. டன் டன்னாக ரன்களைக் குவிக்கும் வல்லமை பெற்றவர். நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய, இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுக் குழுக்களுக்கெதிராக ஆடி இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தவர். கர்நாடக அணி செமி ஃபைனலில் தோற்று விட்டதால் இறுதி நாளன்று சாந்தா ரங்கசாமியின் பேட்டி கிடைக்கவில்லை. பல பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி காண முடியாமல் ஏமாந்தார்கள்.

— பி. எஸ். எம்.

ஆவன ஏற்பீரோ

பொது மக்களின் நலனுக்காக 'ரேஷன்' கடைகளை அரசு நியமித்திருக்கிறது. முக்கியப் பொருள்களைக் குறைந்த விலையில் கொடுக்கிற கடமை 'ரேஷனைச்' சேர்ந்தது. ஆனால் எவ்வளவு ரேஷன் கடைகளில் நியாயமானப் பங்கீடு நடக்கிறது?

ஆண்கள் வேலைக்குப் போய்விடுவதால், கூட்டத்தில் நின்று ரேஷன் சாமான்களை வாங்கும் பொறுப்பு குடும்பத் தலைவிகளைச் சேருகிறது. வேலைக்காரியை அண்டினால், 'போம்மா, மணிக்கணக்கா யாரு க்யூவிலே நின்னு வாங்கறது. எனக்கு நாலு வீட்டு வேலை தங்கிடும்' என்கிறாள்.

வீட்டு வேலையை அவசரம், அவசரமாய் முடித்துவிட்டு ரேஷன் க்யூவில் நின்றால் கூட பில் போடுபவரின் அருகில் போவதற்குள், 'ஸ்டாக் தீர்ந்து விட்டது. போய்விடுங்கள்' என்று இரக்கமில்லாமல் கூறிவிடுகிறார்கள். எந்த சாமான் எப்போது வரும் என்று கடைக்காரர்களுக்கே தெரியாதாம். இதற்காகத் தினமும் யாராவது கடைக்குப் போய், என்ன சாமான் கொடுக்கிறார்கள் என்று பார்த்து வர வேண்டும்.

ரேஷனில் எந்த சாமான் வந்தாலும் எல்லா செக்டர்களுக்கும் சேர்த்து ஒரு தினத்தில் போடுகிறார்கள். இதனால் கூட்டம் எக்கச்சக்கம். அளவும் சரியாக இருப்பதில்லை, தரமும் (கோதுமை, அரிசி போன்றவை) சுமார்தான்.

1. குறிப்பிட்ட தேதியில் சாமான்கள் ரேஷனில் வரும் என்று மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.
2. எடையில் திருப்தி இல்லையென்றால் சரி பார்க்க உபயோகிப்பாளருக்குச் சலுகை உண்டு.

மேலும் பொது மக்களில் சிலரை ஒரு குழுவாக நியமித்து ரேஷன் சரியாக இயங்க வழிவகுக்கலாம் என்று உபயோகிப்பாளர் பாதுகாப்புச் சங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் பொது மக்களுக்கு அந்த அளவிற்கு சிரத்தை இல்லை. க்யூவில் மணிக்கணக்காக நிற்கும் பொறுமை இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் இருக்கவில்லை.

இந்தப் பிரச்னையை நூற்றுக் கணக்கான குடும்பத் தலைவிகளின் பொதுப் பிரச்னையாகக் கருதி சம்பந்தபட்டவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— இந்திரா கோபாலன்



திருமணம் பற்றி பெனசிர்!



தூக்கிலிடப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோவின் மகள் பெனசிர். இவர் தான் இப்போது பாகிஸ்தானில் மக்கள் கட்சித் தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்.

பாகிஸ்தான் அதிபர் ஜியாவுக்கு எதிராக இவர் செயல்பட்டு வருவதால் இவரைப் பாகிஸ்தான் அரசாங்கம் பல முறை ஜெயிலில் அடைத்தது. ஆனாலும் மக்கள் இவரை விடுவிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அரசைக் கேட்டுக் கொண்டார்கள். பல வெளிநாடுகளும் கேட்டுக் கொண்டன. இப்போது இவர் பாகிஸ்தான் அரசால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். விடுதலையானதும் பாகிஸ்தான் பத்திரிகைகளுக்கு இவர் பேட்டி கொடுத்துள்ளார்.

''ஜெயிலில் என்னை மிகவும் மட்டமான அறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். கொசு, கரப்பான் பூச்சி, பல்லி போன்றவை என்னுடன் அந்த அறையில் வாசம் செய்தன. சில சமயம் அவை என்னைக் கடித்ததும் உண்டு. கொசுத் தொந்தரவுக்கு அடிக்கடி உள்ளாகித் தவித்தேன்.

என் குடும்பத்தைச் சார்ந்த யாரும் அரசியலில் எனக்குத் துணையில்லை. ஆனால் ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் தரும் உற்சாகம்தான் எனக்கு டானிக்.

ஜெயிலில்இருப்பதுஎனக்குக்கஷ்டமாகத் தெரியவில்லை. பல கைதிகளுடன் பேச முடியாவிட்டாலும் அவர்களுடைய முகத்தையாவது பார்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் வீட்டுக் காவலில் தனிமையில் இருக்கும் போதுதான் நான் யாரையும் பார்க்க முடியவில்லையே என வருத்தப்படுகிறேன்.

எனக்குத் திருமணம் என்று சிலர் வதந்தியைப் பரப்பி வருகிறார்கள். இது சுத்தப் பொய். என் வாழ்க்கை முழுவதையும் அரசியலுக்கு அர்ப்பணித்து விட்டேன். சினிமா நாடகம் போன்றவைகளைப் பார்க்கக் கூட எனக்கு நேரமில்லை. பாகிஸ்தானியர்களின் வாழ்வுதான் எனக்கு முக்கியம். என் திருமணம் எனக்கு முக்கியமல்ல. திருமணம் செய்து கொள்ளும் நிலையிலும் நான் இல்லை.''



இவளுடைய பெயர் பாக்கியம்மா. பதினெட்டு வயதாகிறது. இவளுக்கு இரண்டு கைகளும் இல்லை. ஆனால் எல்லாப் பெண்களைப் போலவும் இவள் வேலை செய்கிறாள். எப்படி? கையால் செய்ய வேண்டியதையெல்லாம் தன் காலால் செய்கிறாள்.

கால் கட்டை விரலுக்கும், அதற்கு அடுத்துள்ள பெரிய விரலுக்கும் நடுவில் பென்னை வைத்துக் கொண்டு எழுதுகிறாள். எஸ். எஸ். எல். ஸி. தேறிவிட்டாள் பாக்கியம்மா. படிப்பில் மட்டும் கட்டியல்ல. கால் வேலைகளிலும் (கைவேலைப்பாடுகள்) இவள் கட்டிதான். காலில் துடைப்பத்தை வைத்துக் கொண்டு பெருக்குவது, இரண்டு கால்களாலும் பூ பின்னுவது எல்லாம் இவளுக்குச் சர்வ சாதாரணம்.

ஏழ்மையின் காரணமாகக் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியவில்லையே என்பதுதான் இவள் வருத்தம்.

— ஹரிதன்

இன்னிக்குத் தேதி 5. மார்க் லிஸ்ட் வருது. வத்ஸ்லா ஸ்கூலுக்குப் போயிருக்கான். யக்ஞராமன் வக்கீல் வீட்டுப் பூணூலுக்கு முகூர்த்தம் வச்சுக் கொடுக்கக் கிளம்பினார்.

"கோமு! எனக்குச் சாப்பாடு இன்னிக்கு வக்கீல் வீட்டுல. உனக்கும் வத்ஸ்லாக்கும் தான். நான் சீக்கிரமே வந்துடறேன்."


தயங்கி நின்ற கோமுவை மெல்ல வாத்ஸல்யமாக பார்த்தார்.

அந்த ஒன்பதுகஜப் புடைவையில் அவள் வித்தின் சகதர்மிணி ஆறு கஜம் கட்டிக்கிறதாவது?"

கோமு ஒப்புக் கொள்ளவில்லை.

"வத்ஸ்லா மார்க் நல்லபடியா வாங்கணுமே! எனக்குக் கவலையா இருக்கு..."

அவளின் அதீத கவலை அந்த சிவந்த முகத்தை வாடிய தாமரையாகக் குவித்திருந்தது. மெல்ல பக்கத்தில் வந்து முன்னுச்சியை மெல்ல ஒதுக்கினார். குழந்தையின் முகத்தை நிமிர்த்துவது போல் நிமிர்த்தினார்.



தர்மத்துக்கு

அம்பாளாகத்தான் இருந்தாள் —

"ஆறுகஜம் கட்டிக்கோயேன். உன் மெல்லிசு உடம்புக்கும் கஷ்டமாக இருக்காது. உனக்குளென்ன வயசாச்சு? இருபதிலே வத்ஸ்லா பொறந்தான். இப்ப... 36. உன் வயசு பொண்களுக்கு இப்ப கல்யாணம் கூட ஆக மாட்டேங்குது...." என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கார்.

உன் மனசுக்குள் அவளை ஆறு கஜத்தில் முன் கொசுவம் வைத்துக் கட்டிப் பார்க்கணும்னு ஆசை அவருக்கு உண்டு. அதை வெளியே சொல்ல சங்கோஜம். 'ஒரு வேத

'இவள் என் மனைவி. என் சகல செளபாக்கியங்களுக்குமான லட்சுமி. மாசு மருவற்ற இவள் கிடைக்க நான் எத்தனை கொடுத்து வச்சிருக்கணும்...'

ஆழமான, பாசமான காதல் இது.

"பைத்தியமே... உன் பிள்ளையின் மார்க்கை பற்றியா கவலைப்படறே... 80% கட்டாயம் வரும். குழந்தைக்குப் பாயசம் பண்ணி இலையில் விடு... கோமு... எனக்கும் ஒரு டம்ளர் எடுத்து வை. சாயந்திரம் வெளியே போகலாம். வக்கீல் கணிசமாகப் பணம் தருவார். உனக்கு நல்லதா புடைவையே இல்லை.



எதுக்கு வெளிச்சம்?

சுமங்கலி

கொழந்தைக்கு ஒரு பாண்ட் தைக்கணும். நல்லதா நாலு ரவிக்கை துணி எடுக்கணும்.''

இத்தனை பிரியமான புருஷன் கிடைத்திருக்கிறரே. பட்டாட்டமா மனசைத் தடவி மெத்துனு வச்சிக்கிறரே... புதுப் புடைவை எதுக்கு? அந்தப் பணத்துக்கு ஒரு இரண்டு மாசம் ஆழாக்கு பசும்பால் வாங்கி ராத்திரி அவருக்குக் கொடுக்கணும். தொண்டையும் நாக்கும் வரள மந்திரம் சொல்கிறர்.

சின்ன முகத்தை லேசாக அசைத்துச் சிரித்துக் கொண்டே வாசல் வரை வந்து வழி அனுப்பினுள்.

மார்க் லிஸ்ட் வந்த சாக்கில் கலத்துக்குப் பருப்பு, தயிர் பச்சடி, சேமியா பாயசம், ரசம், பொரித்த அப்பளம்...

விளக்கி ஏற்றி, ஸ்வாமி படங்களுக்குப் பூ வைத்து, பண்ணியவற்றை வைத்துநைவேத்தியம் பண்ணி முடிப்பதற்கும் வத்ஸ வரவும் சரியாக இருந்தது. மார்க் புத்தகத்தை ஸ்வாமி படத்தில் வைத்துச் சூடத்தைக் காட்டி நிமிர்ந்தாள். பிள்ளை சந்தோஷத்துடன் குனிந்து நமஸ்காரம் பண்ணினன்.

''தீர்க்காயுசோடு நோய் நொடியில்லாமல்

ஓகோன்னு ஒசந்து வாழணும்'' — தொண்டை கரகரத்துக் கண்கள் நீரோட்டம் காட்டின.

1200 க்கு 1001 மார்க்...

''அ...ப்...பா... எத்தனை மார்க் வாங்கியிருக்கான் குழந்தை! தன் கண்ணே பட்டுவிடுமோ?'

மெல்ல அவனைக் கிழக்குப் பார்த்து நிற்க வைத்து திருஷ்டி சுற்றிப் போட்டாள். சந்தோஷத் திணறலில் அன்றைய பொழுது கழிந்தது.

மறுநாள் காலையிலேயே வத்சுவின் சிநேகிதன் முரளி வந்துவிட்டான்.

மௌபரிஸ் சாலையில் ஒரு ட்ரஸ்ட் ஆயிரம் மார்க்குகளுக்கு மேல் வாங்கிய ஏழைப் பையன்களுக்கு இலவசமாக இரண்டு செட் துணிகள், ரூ. 250 பணம் கொடுப்பதாக முரளி முதல் நாளே சொல்லியிருந்தான்.

பழைய மாம்பலம் குப்பைய செட்டி தெருவின் ஒரு வீட்டின் பின் போர்ஷனில் அவர்கள் குடித்தனம்.

வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்த பிள்ளை, அத்தனை தூரம் போகணுமே. ஒரு அஞ்சு ரூபா கையில் கொடுத்தனுப்பலாமே என்று பெட்டியைத் திறந்தாள் கோமதி.

அந்தப் பழைய ட்ரங்க் பெட்டிதான் அவளின் காட்ரெஜ் அலமாரி. பெட்டியைத் திறந்து அதில் இருந்த பெருங்காய டப்பாவை எடுத்து அதில் இருந்த கவரை எடுத்துப் பிரித்தாள்.

மக்கிய கவரின் அடி பிய்ந்து கொள்ள பொத்தென்று சில ரசீதுகள், சில ரூபாய்த் தாள்கள், ஒரு போட்டோ இத்யாதி விழ... வேகமாக வந்து சட்டென்று குனிந்து அந்தப் போட்டோவை எடுத்தான் வத்ஸ.

அழகான ஒரு வாலிபன், சுருண்ட மேடிட்ட கிராப்பும், நீண்ட கண்களுமாய் கண்களின் முடிவில் காதுக்கும் நடுவே பெரிய மச்சத்துடன் சிரித்துக் கொண்டிருந்தான்.

''யாரும்மா இது?''

போட்டோவைக் கையில் வாங்கிக் கொண்ட கோமதியின் கண்கள் கொஞ்ச நேரம் அதிலே அப்படியே லயித்து நின்றது.

''அம்மா... ஏம்மா பேச மாட்டேங்கறே? யாரு இது?''

> **காலையில் வெறும் வயிற்றில் ஊற வைத்த வெந்தயத்தைச் சாப்பிட்டு விட்டு எவ்வளவு நேரம் வெயிலில் நின்று வேலை செய்தாலும் நீர்க்குத்தல் வரவே வராது!**
>
> — சந்திரா.

''இது யார் தெரியுமா? எங்கம்மாவோட அக்கா பிள்ளை... என் ஒன்றுவிட்ட உடன் பிறந்தான். இவன் என்னைவிட ஏழெட்டு வயது பெரியவன். உனக்கு மாமா முறை. தஞ்சாவூரில் பெரிய வக்கீல் என் அத்திம்பேர். என் பெரியம்மா இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டாலும் பெரிய பணக்காரா. கல்யாணத்துக்கு முந்தி நாங்க திருவையாறிலே இருந்தோம்... என் அம்மாவுக்கு ரொம்ப சொத்து சுகம் இல்லை... நாங்க 4 பேர் கூடப் பிறந்தவா. அவாவா கஷ்டம் அவாவாளுக்குன்னு ஆயிடுத்து.

''என் கல்யாணம் முடிந்து நான் மதராஸுக்குக் குடித்தனம் வந்த புதுசு. அப்ப எங்க அண்ணா.... அதான் இந்த போட்டோவில் இருக்கானே... அவன் சட்டம் படிக்கறதுக்காக மெட்ராஸ் வந்திருந்தான். வந்த புதிசிலே ஒரு வருஷம் நம்ம வீட்டிலேதான் தங்கிப் படிச்சான். அப்புறம்... லீவுக்குப் போனவன் திரும்பவும் ஹாஸ்டலில் சேர்ந்திருந்தான்.

யார் என்ன சொன்னாளோ வரவேயில்லை. அவன் சாப்பிட்ட தட்டும் டம்ளரும் கூட இங்கேதான் இருக்கு. ஊருக்குப் போனவன் போறப்ப அரிசி மூட்டை போட்டுண்டு வர்றேன்னு சொன்னான்.


''அப்ப கூட நான் சொன்னேன். உன் ஒருத்தனுக்கு சாதம் போட்டு நான் குறைஞ்சு போக மாட்டேன். கூடப் பிறந்தவள் கிட்ட இது என்ன பேச்சுன்னேன்.

அப்பாவுக்கு இருக்கற பாரி மனசு யாருக்கும் கிடையாது. அவனிடம் அத்தனை பிரியம் அப்பாவுக்கு. என்னைவிட பார்த்துப் பார்த்து சட்டையெல்லாம் கூடத் தோய்ச்சுப் போட்டிருக்கார். ஊருக்குப் போயிட்டு வந்தவன் அப்படிப்பட்டவர் வீட்டுப் பக்கமே தலை வைச்சுப் படுக்கலை... யார் என்ன சொல்லிக் கொடுத்தாளோ...? ஏழைத் தங்கை அவனிடமிருந்து எத்தனை ரூபாய் சுருட்டிப்பேன்னு பயந்தானோ வரவேயில்லை... அவன் இங்கே இருந்த போது எனக்கு அறுபது ரூபாய் கொடுத்து ஒரு புடைவை வாங்கித் தந்திருந்தான். நீ கேட்பியே, ஏம்மா இந்தப் புடைவை உனக்கு எத்தனை நல்லாயிருக்கு? கட்டிக்க மாட்டேங்கறேளேன்னு. இந்தப் புடைவை எங்கண்ணா வாங்கிக் கொடுத்ததுதான். அடிக்கடி கட்டிண்டா கிழிஞ்சு போயிடும்னு இந்தப் புடைவை மடிப்பிலே வைத்து கவரில் பத்திரப்படுத்தி... ராசியான புடைவைன்னு வைப்பேன்.

அதுக்கப்புறம் கல்யாணம்னு இரண்டு வருஷம் கழிச்சுப் பத்திரிகை அனுப்பினான். மனசு கேட்கல. வெள்ளியில் சின்ன குத்து விளக்கு வாங்கிண்டு நானும் அப்பாவும் போயிட்டு வந்தோம்.

''பெரிய இடம். பொண்ணு காலேஜிலே படிச்சவள். அதுக்கப்புறம் ஒரு தடவை

பட்டர்ஃபிளை வழங்கும்
ஸ்டாண்டர்ட் பிரஷர் குக்கர்



இலவசம்!
சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் 18 G ல் ஆன ஒரு அன்னக்குத்தி மற்றும் கரண்டி.

10 வருட உத்திரவாதம்

ஸ்டாண்டர்ட் பிரஷர் குக்கர் - சமையல் உபகரணங்கள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள பட்டர்ஃபிளை நிறுவனத்தினரின் மற்றுமொரு புதிய படைப்பு. நல்ல தரமான ''ஸ்டாண்டர்ட்'' பிரஷர் குக்கரை உங்களுக்கு வழங்க எங்களது 40 ஆண்டு கால அனுபவத்தை அர்ப்பணித்திருக்கிறோம். அவை ஒவ்வொன்றும் தரத்தில் தலைசிறந்த உலோகக் கலவையினால் தயாரிக்கப்பட்டு அதிக உறுதியும் கனமும் கொண்டவை. உங்களுக்கு வாழ்நாள் முழுவதும் உழைப்பவை.

முழுப் பாதுகாப்பிற்கு தனித்தன்மை வாய்ந்த "காஸ்கெட் ரிலீஸ் சிஸ்டம்" பொருத்தப் பட்டுள்ளது. துரித சமையல். எனவே, எரிபொருள் மற்றும் நேரம் மிச்சம்.

ஒவ்வொரு ஸ்டாண்டர்ட் பிரஷர் குக்கரும் உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் கடுமையான தரக் கட்டுப்பாடு பரிசோதனைக்குப் பின்பே வெளிவருகிறது.

7.5, 10 & 12 லிட்டர்களில் உள்ளன.

பிரஷர் பான்களும் 2 அளவுகளில் உள்ளன.

தயாரிப்பாளர்கள் :-
கங்காதரம் எண்டர்பிரைசஸ்,
272, அண்ணாசாலை,
(கோ-ஆப்டெக்ஸ் வானவில் சமீபம்)
தேனாம்பேட்டை, சென்னை-600 018.
போன் :- 454186, 412091, 418171

ஸ்டாண்டர்ட் பிரஷர் குக்கர்
சமையலறையில் ஒரு சிறந்த சாதனம்
உங்கள் பணத்திற்கு சிறந்த மதிப்பு.

Concept/M

பார்த்தசாரதி கோவிலுக்குப் போயிட்டு வர்றப்ப மாம்பலம் வர்றதுக்காக ஐஸ் ஹவுஸ் பஸ் ஸ்டாண்டிலே நின்னு கொண்டிருந்தேன். அப்ப பார்த்தேன். அப்ப நான் உன்னை உண்டாகியிருந்தேன். அவனைப் பார்த்தவுடன் வாய் கொள்ளாமல் பேசி, வீட்டுக்கு வான்னு வருந்தி விருந்துக்குக் கூப்பிட்டேன். அவன் வரவேயில்லை.

"பிள்ளையுண்டாகியிருந்தாளே... என்ன குழந்தை பிறந்ததோ.. போய்ப் பார்ப்போமென்று அவனுக்கு இல்லை. தரித்திரம் பிடித்த தங்கைப் பெண் தன் பிள்ளையைக் கைக்குள் போட்டுண்டுடுவாளோன்னு எங்க பெரியம்மா அவனை இங்கே வரவே விடலை. அவனைதான் - அவன் மாமியார் திரும்பி பெரியம்மாவிடம் வரவிடாமல் மடக்கிப் போட்டான்.

பெயர் நாகநாதன். நான் நாகண்ணுஎன்று ஆசையாக் கூப்பிடுவேன். ஆச்சு. அதெல்லாம் பெரிய கதை. அவனைப் பார்த்துப் பதினெட்டு வருஷமாச்சு. பெரிய ஆபிஸரா இருக்கான்னு சொன்னு உங்க அப்பா. அவன் பெண்டாட்டி சொத்தெல்லாம் அவனுக்கு வந்துடுத்தாம். ஏழைத் தங்கை வந்தால் கையேந்தி ஒட்டுப் புல்லாட்டமா ஒட்டிண்டிடுவேனோன்னு பயந்துட்டான். முதல்ல நான் நம்பல. ஆனால் ஊரிலேருந்து வந்த ராஜிதான் அத்தனையையும் சொல்லி ஒரு பாட்டம் அழுதா.

வத்ஸலா...

அண்ணனோ... அக்காளோ... தங்கையோ...

காசு பணத்தால,... சுவர் எழுப்பி உசரமாப் போயிட்டா... அங்க நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாது..."

"நிஜமான பாசத்தைக் கூட காசு கல்லைப் போட்டுக் கணக்குப் பார்ப்பா... போன வருஷம் அப்பா பார்த்தாளாம். அடையாளமே தெரியலை. தலையெல்லாம் நரைச்சுப் போய் டி. பி. பேஷண்ட்டாமா ஆயிட்டானும்...

என் மனசு கேட்கலை... எங்க இருக்கானோ."

கண்ணில் நீர் தளும்பப் பேசி முடித்த கோமுவின் கண்களில் பழைய கனவுகள் கப்பல் விட்ட நேரத்தில்,

"வத்ஸலா" முரளியின் குரல் உசுப்பி நினைவுக்கு எழுப்ப... "ஓ.கே அம்மா... நீ அழாதேம்மா... பழசையெல்லாம் மறந்துடும்மா... இந்த உலகத்திலே மனுஷாள்லாம் மனிதாபிமானத்தை மூணு வட்டிக்கு அடகு வச்சுட்டு.. முதல மீட்க முடியாமல் முழுக அடிச்சுட்டவா... ப்ளீஸ்... அம்மா... நான் உன் பிள்ளை, கடைசி மட்டும் உறுதுணையா இருப்பேன்... அம்மா.... முரளி வந்தாச்சு... கிளம்பறேன்."

அம்மா வாசலுக்கு வந்து வழியனுப்ப அவன் கிளம்பினான்.

முரளியிடம் பேசிக் கொண்டே வந்து மனசை இலேசாக்கிக் கொண்ட போது அவனுக்கு இந்த உலகம் நசுங்கிய அலுமினியத் தட்டாய்ப் பல்லை இளித்தது.

முரளி முதலிலேயே பெயர் கொடுத்திருந்ததால் அவன் கியூவில் முதலில் இருந்தான்.

அவன் முறை வந்து வாங்கிக் கொண்டு... "வத்ஸலா, நான் வெளியே நிக்கறேன். நீ வாங்கிண்டு வா..." என்று பொட்டலத்தை மார்பில் அழுந்தப் பிடித்துக் கொண்டு வெளியே வந்து உட்கார்ந்து கொண்டான்.

மாணவனும் மாணவியுமாய் ஒரு 20, 25 பேர் தேறலாம்... அவனுக்குப் பின்னால் இரண்டு மூன்று பேர்...

தகப்பன் பெயர் சொல்லி,

உத்தியோகம் சொல்லி,

கைகாட்டி விட்டவர் கையெழுத்திட்டு... ஏழ்மையை ஊர்ஜிதம் பண்ணி, மார்க்கு பார்த்து... தர்மத்துக்கு வெளிச்சம் வேண்டியிருந்தது.

அந்த ஏ.ஸி. ரூமின் நடுவே நீண்ட மேஜை பக்கத்திலே இரண்டு பேர் ஒரு டவாலி கட்டிய சேவகன் பொட்டலங்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். எதிரே ஒரு புகைப்படம்.

தேக்கு மரச்சட்டத்தில் 3 க்கு 2 இல் நாகநாதன் சிரித்துக் கொண்டிருந்தான். நாகநாதன் டிரஸ்ட் பளபளத்து மின்னிக் கொண்டிருந்தது.

பக்கத்தில் மாலையை சார்த்திக் கொண்டு தெய்வமாகிவிட்ட அவர் மனைவியின் படம் சுற்றிலும் விளக்கு சர ஒளியில்...

க்யூவில் நின்ற நேரத்தில் காதில் பட்ட தகவல் மனத்தை நெருட உள்ளே நுழைந்தவன் சட்டென்று நிமிர... பொட்டில் அடிபட்டாற் போன்ற வலியில் முகம் சுளித்தான்.

அவன் மாமன் நாகநாதன்.

அன்று காலையில் அவனுக்கு அறிமுகமானவன். அதே போட்டோ பதிப்பு நீண்ட கண்களின் ஓரத்தில் அடர்ந்த மச்சம் சந்தேகத்திற்கிடமின்றி அவனைக் காட்டிக் கொடுத்தது.

மனத்தில் கசப்பு வழிந்தது.

சொந்த சகோதரி...

மூக்கை சுற்றிப் பிடித்த உறவில்லை.

ஒரு வருடம் என் தாயின் கைசோற்றைச்

தேங்காய்த்துவையலுக்குத்தேவையான சாமான்களைத் தாளித்தெடுக்கும் போது சிறிது தனியாவையும் சேர்த்து வறுத்து அரைத்தால் துவையல் மணமாயிருக்கும்.

— விசாலாட்சி

சாப்பிட்டு உடம்பை வளர்த்தவன். அந்த உப்புக்கு விலையாக அவளைத் தவருக எடை போட்டவன்.

மரத்தின் கிளைகளாய், விழுதுகளாய்... ஊன்றத் துடிக்கும் உறவினர் குழந்தைகள், பெரியவர்கள் என்று தடுமாறும் சொந்தங்கள் காத்திருக்க, உபகாரம் என்ற ஒன்றைச் செய்யப் பயப்பட்டு ஒதுங்கி... பின் இத்தனை ஆடம்பர அலங்கார அடுக்கு விளக்கு தர்மம் எதற்காக? நாகநாதன் டிரஸ்ட் எதற்காக? இது ஒரு வியாபாரத் தந்திரம்?

ஐந்தாயிரம் தானம் பண்ணிவிட்டுப் பத்தாயிரத்துக்குக் கணக்கு எழுத... கோயிலில் வெளிச்சத்திற்காக ட்யூப்லைட் வாங்கி நேர்த்திக் கடன் முடித்து, அதிலே சிவப்பு எழுத்துக்களில் தன் பெயரைப் போட்டுக் கொள்ளும் சின்னத்தனம் ஏன்?

என் தாய் இவனுக்குப் போட்ட சோற்றுக்கு இவனிடம் நான் உபகாரம் வாங்கினால் அது என் தாய்க்கு இழுக்கு...

'என் குழந்தையைப் பார்க்க அவன் வருவான் என்று எத்தனை நாள் நான் எதிர் பார்த்தேன் தெரியுமா?'

தாயின் பவித்திரமான வார்த்தைகள் நெஞ்சை ஆக்கிரமிக்க... சட்டென்று அங்கிருந்து விலகி வெளியே வந்த ஸ்ரீவத்ஸனைப் பார்த்துத் திடுக்கிட்ட முரளி அவனை உசுப்ப....

காலம் ஓடியது...

எந்தச் சிந்தனையும் இன்றி... இரவும் பகலுமாக மாறி மாறி ஓடியது.

கல்லூரிப் படிப்பு இயலாமல் நின்று போய்... காமெர்ஸும் அக்கவுண்டன்ஸியும் உறைந்து ஒதுங்க... தகப்பனுடன் முழு

---

* தங்கள் வாசகரின் 'ஐடியா' ப்படி, இரவு தூங்கும்போது கைகால்களில், நல்லெண்ணெய் பூசிக் கொண்டு தான் தூங்கினேன். கொசுத் தொல்லையின்றி நன்கு தூங்கினேன். ஆனால், காலையில் எழுந்து பார்த்தால் காலெல்லாம் இரத்தம். எனிநன்கு என் கால்களைப் பதம் பார்த்து விட்டது.

பின் குறிப்பு:-

நல்லெண்ணெய்க்குப் பதில் வேப்பெண்ணெயையோ, வேப்பஞ் சாறையோ பூசிக் கொண்டால் மேற்கண்ட எந்தத் தொந்தரவும் இருக்காது என டாக்டர் கூறினர்.

— செ. நா. சீனிவாசன்.

மூச்சில் வேதம் பயில உட்கார்ந்து அத்தனையும் சரளமாகக் கற்று வித்தாகி... முளையாகி, பயிராகி மரமாக, அதிர்ஷ்டம் ஓசையின்றி வந்து, மெல்ல வீட்டுக் கதவைத் தட்டியது. வக்கீல் சௌந்தரராஜன் மூலம் அதிர்ஷ்டம் அசைந்து வந்தது.

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகர பிள்ளையாரும், நடராஜரும், நியூயார்க் நகர பெருமாளும் தாய்நாட்டில் இல்லாத எந்த ஒன்றைத் தேடி அங்கே குடியேறினார்கள் என்று ஆராய முடியாமல், அகண்டத்தின் அதிபதிக்கு சகஸ்ரநாமம் செய்து சேவை செய்யும் பாக்கியம் யக்ஞராமனை அணைத்துக் கொள்ள,

கோமதியும், ஸ்ரீவத்ஸனும் அங்கே போனதுதான் நிஜமானது.

அயோத்தியா மண்டபமே கும்பல் தாங்காமல் திணறிக் கொண்டிருந்தது. கதாகாலட்சேபம் முடிந்து மங்களம் பாடிய ஸ்ரீவத்ஸன் தன்னை மறந்து ஒரு வினாடி செயலிழந்து. 'ஸ்ரீராமா! உன் திருவிளையாடல் என்னே! இப்படி ஒரு நிஜத்துக்காகத்தான் எத்தனையோ இடர்ப்பாடுகளைச் சந்திக்க வைத்தாயோ!'

பொன்னிறத்தில் ஸ்ரீமந்நாராயணனை ப்ரவசனம் செய்தாற்போன்ற திருப்தியில் மெல்லக் கூட்டம் கலையலாயிற்று.

"இத்தனை சுத்தமா ப்ரவாகமா இந்த ப்ரவசனம் பண்ண பூர்வஜன்மத்துல பகவானை தேனால அபிஷேகம் பண்ணியிருக்கணும்!"

"பத்து நாளும் ஓடிப் போச்சே... எத்தனை தரம் கேட்டாலும் அலுக்காம மதுரமா இப்படி ஒரு குரலா!"

"அந்தப் புள்ளையாண்டானுக்கு அடுத்த மாசம் கல்யாணமாம். அதற்குத்தான் அமெரிக்காலேந்து அவா குடும்பமே வந்திருக்கு...

"பெண் யார் தெரியுமோ... நம்ம முரளி தெரியாது. அதான் ஸ்ரீவத்ஸன் அவரோட நண்பனின் தங்கையிடம் அந்த நாள்லேந்து சிநேகம். ஒத்தை பைசா செலவழிக்காமல் கல்யாணம் அத்தனையும் இவாளே செஞ்சுக்கறாளாம். பொண்ணு கொடுத்துவச்சிருக்கா. பசு சம்ரக்ஷணை, ஏழைப் பெண்கள் கல்யாணம், ஏன்று சங்கரமடத்துக்கு ரூபாய் பத்தாயிரம் கொடுத்தாராமே!"

"உனக்கு எப்படித் தெரியும்...?"

"முரளிதான் சொன்னான்... வெளியில் யாருக்கும் தெரியாது..."

"கொடுக்கற மனசுக்கும் வாங்கற மனசுக்கும் மட்டும் தெரிஞ்சாப் போறும் தர்மத்துக்கு என்னத்துக்கு வெளிச்சம் போடணும்...?"

இப்படி எத்தனைப் பேச்சுக்கள்...?

ஸ்ரீவத்ஸன் மங்களம் பாட... அனைவரின் மனதும் நெகிழ்ந்து நிறைந்தது.

பலப்பரீட்சை இல்லை வாழ்க்கை!



இன்றைய 'டென்ஷன்' நிறைந்த வாழ்க்கையில் தங்களுக்குள் சண்டை வராத கணவன்—மனைவியே இல்லை எனலாம். அவர்களுக்குச் சில யோசனைகள்.

திருமணம் வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே கிடைக்கக் கூடிய ஆனந்தமான அனுபவம். ஆயிரம் ஆயிரம் ஆசைகளுடன் ஒருவருக்கொருவர் மாலையிடுகிறார்கள். இரு மணம் முடிந்து ஒரு குழந்தை பிறப்பதற்குள், கற்பனையெல்லாம் சிதற வாழ்க்கை வாடி வதங்குவது ஏன்?

இதற்கெல்லாம் யார் காரணம், எது காரணம், யார் மாற வேண்டும் என்ற பட்டிமன்றமெல்லாம் இல்லாமல் சில சின்னச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்தினால் பல பெரிய தகராறுகளைத் தவிர்க்கலாம்.

தொணதொணத்துத்தொந்திரவுசெய்யாதீர்கள்

''அதையேன் செய்யவில்லை.'' ''இதையேன் வாங்கவில்லை,'' ''நீங்கள் இப்படித்தான் எப்போதும் சோம்பேறி'' — இந்த மாதிரித் தொண தொணப்புக்களைப் பெண்கள் மட்டும்தான் செய்கிறார்கள் என்றில்லை.

பல ஆண்கள், ''இந்த டேபிளை இங்கே போடாதே,'' ''கொத்தவரங்காயை இன்னும் சின்னதாக நறுக்கு'' ''வீட்டைச் சுத்தமாகவே வைத்துக் கொள்வதில்லை. ஒரு பெண்ணுக்கு இது தெரிய வேண்டாமா!'' என்றும் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.

இவை சின்னச் சின்ன விஷயங்கள்தான். பெரும்பாலும் உப்புப் பெறுதவைதான். இருந்தாலும், நாளாக ஆக, வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே ஆட்டிவிடக் கூடிய அளவிற்கு மனத்திற்குள் வெறுப்பு ஊன்றி விட இதுவே காரணமாகி விடலாம். இந்த மாதிரி பேச்சுக்களைப் பிடிக்காத கணவனே மனைவியோ, மனது நொந்து மற்றவருடன் பேசுவதையே குறைத்துக் கொண்டு இயந்திரமாகி விடுவார். அதனால் ஒருபோதும் உங்கள் துணையைத் தொணதொணக்காதீர்கள்.

''உன்னைவிட எனக்கு எல்லாம் தெரியும்'' என்ற ஆளுமையைத் தவிருங்கள்

ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, மற்றவரின் தனித்தன்மையை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வீட்டிற்கு நாலு பேர் வந்திருக்கும் போதோ, மற்ற பொது இடங்களிலோ மனைவியைப் பட்டென்று மட்டம் தட்டும் கணவன்மார்கள் தான் அதிகம் என்று எண்ண வேண்டாம்!

அக்கம்பக்கத்து வீட்டாரிடமோ, அல்லது உறவினரிடமோ கணவனைப் பற்றி, ''அவருக்கு ஒன்றும் தெரியாது. நேரா ஆபீசுக்குப் போவார், வருவார்; அவ்வளவுதான். துளியும் சமர்த்தே போதாது. இந்த வீட்டு மானேஜ்மெண்ட் பூரா நான்தான்'' என்று பெருமையடித்துக் கொள்ளும் மனைவிமார்களும் இருக்கிறார்கள். மனைவி முட்டாளாக ஆக்குவதாலேயே நாளடைவில் எதிலும் பட்டுக் கொள்ளாமல் போய் விடும் கணவன்மார்கள் நிறைய உண்டு. எதற்கு வீண் சச்சரவு, வேலையானால் சரி என ஒதுங்கி விடுவார்.

கல்யாணம் என்ற பந்தத்தில் இணைந்த பின் ஒருவர் மற்றவரின் திறமைகளைத் தூண்டி வளர்ப்பதாக இருக்க வேண்டுமே தவிர பலப் பரீட்சை பார்த்துக் கொண்டிருப்பதில் இல்லை வாழ்க்கை.

மனது புண்படக் கேலி செய்யாதீர்கள்:

பலருக்கு இருக்கும் விரும்பத் தகாத விஷயம் இது. 'விளையாட்டாகப் பேசுகிறோம்' என்று நினைத்துச் சிலர் மனத்தை நோக அடித்து விடுவார்கள். நாலு பேருக்கு நடுவில் கணவன், ''பெரிய ஆறடிக் கூந்தல். இந்த எலிவால் பின்னலுக்கு என்ன?'' என்று மனைவியைக் கிண்டல் செய்தால் அவளுக்கு எவ்வளவு வலிக்குமோ, அதேபோல்தான், ''இருக்கிறது ஐந்தடி. பெரிய அமிதாப் பச்சன்னு நினைப்பா!'' என்று மனைவி கணவனைக் கிண்டல் செய்தாலும் அவனுக்கு

இருக்கும்.

கணவன் மனைவியாகவே இருந்தாலும், இந்த மாதிரி சொந்த விஷயங்களில், மற்றவர்கள் எதிரில் பேசாமல் கேலி பேசாமல் இருப்பது நல்லது. சில சமயங்களில் இந்த மாதிரி கேலிப் பேச்சுக்கள் மனத்தினடியில் ஆழமாகப் பதிந்து பிரிவு ஏற்பட ஏதுவாகி விடும்.

முடிந்த வரையில் மற்றவரைப் பாராட்டுங்கள்:

''வெற்றிகரமான ஒவ்வொரு ஆணுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்'' — என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு அவசியம் ஒரு பெண் ஆக்கபூர்வமாகப் பிரகாசிக்க ஓர் ஆணின் தூண்டுகோல்.

கணவனின் ஆபீஸ் விவகாரங்களைப் பற்றியோ அவனுடைய நண்பர்களைப் பற்றியோ மனைவிக்கு அதிகம் தெரியாமல் போகலாம். அவனளவு அதிகம் படிக்காமலும் இருக்கலாம். இருந்தாலும் சில நேரங்களில் அவனுடைய செய்கைக்கு இரண்டொரு வார்த்தைகளில் பாராட்டு தலைக் காண்பித்தால் இதமாக இருக்கும்.

''இன்னைக்கு நீங்க ஹெல்ப் பண்ணலைன்னா இத்தனை கெஸ்ட்டைச் சமாளிச்சிருக்கவே முடியாது'' — என்றோ, ''ஊர்லேயிருந்து நீங்க வாங்கிட்டு வந்த 'ஹேண்ட் பேக்' எவ்வளவு நல்லாயிருக்கு தெரியுமா? என்னுடையது கிழிஞ்சு போயிடுச்சேன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். இருந்தாலும் எனக்குத் தேவையறிஞ்சு நீங்க செய்யற மாதிரி யார் செய்வாங்க?''

மனைவி பார்த்துப் பார்த்து எத்தனை செய்தாலும் மிஷின் போலச் சென்றுவிடும் கணவன்மார்களும் உண்டு. அதுவும் தவறு. மனைவி போட்டது சின்னக் கோலமாய் இருந்தாலும், சாதாரண மிளகு ரசமாக இருந்தாலும் வாய் திறந்து பாராட்டினால் அதன் சுகம் தனிதான்.

வெளியில் பெரிய அதிகாரியாகவோ, அல்லது தினமும் வேறு வேறு மாதிரியான ஆர்வமான விஷயங்களில் ஈடுபடுபவராகவோ, அல்லது கொஞ்சம் பிரபலமானவராகவோ மனைவி இருந்துவிட்டால், கணவன் வீட்டில் அவனுக்கு இந்தப் பாராட்டு வார்த்தைகளைக் கண்டிப்பாக அளிக்க வேண்டும். அவன் மனத்தில் எள்ளளவும் பொறாமை இல்லை என்பதை இதன் மூலம்தான் அவள் தெரிந்து கொள்ள முடியும்.

எனவே, முடிந்தவரை மற்றவரைப் பாராட்டுங்கள். ''வாயில் இருக்குது வார்த்தை'' அதை எத்தனை நல்லவிதமாகச் செலவழிக்கிறோமே அத்தனை நன்மை கிடைக்கும்.

கவனிப்பையும் கரிசனத்தையும் காண்பித்துக் கொள்ளுங்கள்:

எவ்வளவு வசதியாக இருந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு டாக்டரும் வேலையாட்களும் வந்தாலும், அன்பாக ஒருவர் கவனித்துக் கொள்ளவும், கரிசனத்துடன் விசாரிக்கவும் வேண்டும் எனத் தேடுவது மனித இயல்பு.

சில மனைவிகள், மாதவிடாய்ச் சமயங்களில் ஒருவிதக் கோபத்துடனும் எரிச்சலுடனும் இருப்பார்கள். காரணமில்லாததற்குச் சிடுசிடு என்பார்கள். ஒரு நல்ல கணவன், மனைவியின் இந்த ''மூட் அவுட்'' அவளுடைய உடல் உபாதையிலிருந்துதான் என்று புரிந்து கொள்வதே அவனுக்கு இருக்கும் கரிசனத்தைக் காட்டச் சிறந்த வழி. அந்த மூன்று நாட்களும் அவனுக்கு வீட்டில் உதவிக் கொண்டு குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தால் அந்தக் கவனிப்பே அவளுக்கு ஆனந்தமாக இருக்கும்.

ஆபீஸிலிருந்து வரும் கணவன் சற்று முகம் வாடியிருந்தாலே, என்ன, இன்னைக்கு ஆபீஸில் ஏதாவது பிரச்னையா?'' என்று இதமாக விசாரிப்பது சிலருக்குப் பிடிக்கும். ''என்னைத் தனியாகக் கொஞ்ச நேரம் விட்டு விடு'' என்று சிலர் சொல்வதும் உண்டு. புரிந்து கொண்டு அதன்படி மனைவி நடப்பது ஒரு கரிசனம்தான்.

இந்தக் கவனிப்பும் கரிசனமும் கணவன் மனைவியரிடையே இருந்தால், எத்தனையோ சுகம் பரிமளிக்கும்.

> (வெற்றிகரமான வாழ்க்கைக்கு வாசக, வாசகிகள் தங்கள் அனுபவத்துடன் கூடிய யோசனைகளையும் எழுதுங்களேன். பிரசுரமாகும் கட்டுரைகளுக்குச் சன்மானம் உண்டு — ஆ.ர்.)

தேவையான இடத்தில் விட்டுக் கொடுங்கள்:

எதை யார் எந்த அளவு விட்டுக் கொடுப்பது என்பதில்தான் பல திருமணங்களின் முறிவுகள் தொடங்குகின்றன.

''என்ன இருந்தாலும் நான் ஓர் ஆண். நான் எப்படி விட்டுக் கொடுப்பது'' என்று கணவனோ, ''பெண் என்றால் அத்தனை மட்டமா, நானும் படித்து வேலைக்குப் போகிறேன். நான் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்?'' என்று மனைவியோ இருபுறமும் இழுக்க ஆரம்பித்தால் வாழ்க்கைக் கயிறு ஓர் இடத்தில் அறுந்துவிடும்.

சுற்றி இருக்கும் மற்றவர்கள் என்ன சொன்னாலும், தங்களுக்குள் இருக்கும் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டியவர்கள் கணவனும் மனைவியும்தான். இருவரும் உட்கார்ந்து பேசி, கௌரவம் பாராட்டாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தால், சின்ன விஷயங்கள் விசுவரூபம் எடுத்து நிம்மதியைக் குலைப்பதைத் தடுக்கலாம்.

— கிரிஜா ராகவன்

எங்களைக் கவரும் பெண்!



ஒய். சந்திரசேகரன்



பி.ஆர். விஸ்வநாதன்



பி. சுவாமிநாதன்



...ரமேஷ்

பஸ் ஸ்டாப்பில், பொது இடங்களில், சில விழாக்களின்போது பெண்களைப் பார்க்கிறீர்கள். எப்படிப்பட்ட பெண்கள் உங்களைக் கவருகிறார்கள் எனச் சில இளைஞர்களிடம் கேட்டபோது, அவர்கள் சொன்ன சுவையான கருத்துக்கள் இவை:—

ஒய். சந்திரசேகரன்

பஸ்ஸிலோ அல்லது சினிமா அரங்குகளிலோ எனக்குப் பின்னால் இருக்கும் பெண்கள் சலசலவென்று எதையாவது பேசினால் உடனே அவர்களை மட்டுமல்ல அவர்களுடைய பேச்சையும் கூர்ந்து கவனிப்பேன். சில பெண்கள் ,வீட்டுக்கதை, அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களின் கதையை எல்லாம் கூடப் பேசுவார்கள். மாமியார் — மருமகள் சண்டை, குடும்பச் சுமை இவைகளையெல்லாம் அவர்கள் பேசும்போது நம்ம குடும்பத்தை எப்படிச் சீராக வைத்துக் கொள்ளலாம் என்று என் மனம் கணக்குப் போடும்!

பி. ஆர். விஸ்வநாதன்

பொது இடத்தில் ஒரு பெண் மீது என் பார்வை லயிக்கிறது என்றால் நிச்சயமாக அந்தப் பெண்ணுக்கு அறுபது, எழுபது வயதாகியிருக்கும். பஸ்ஸில் ஏறுவதற்காகவோ, அல்லது தள்ளாமையில் கஷ்டம் ஏதாவது அந்தப் பெண்மணிக்கு ஏற்பட்டால் உதவ வேண்டுமே என்ற நல்ல எண்ணம்தான் என் பார்வை பெண்மணியின் மேல் படக் காரணமாக இருக்கும். அத்தை பாட்டி கதை என்றால் சின்ன வயது முதலே எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர்கள் வாயிலிருந்து

வருகின்ற பழமொழிகள் புதுப் புது ருசியான சமையல் குறிப்புக்கள் இவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து, பின்பு வீட்டில் அம்மா, அக்கா, தங்கைகளுடன் சொல்லி நான் மகிழ்வதுண்டு!

பி. சுவாமிநாதன்

அழகான ஒரு பெண்ணைப் பார்த்ததும் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு போவேன் என்று யாராவது சொன்னால் அவர்கள் பார்வையில் கோளாறு இருக்கிறது என்று பொருள். லட்சுமிகரமாக ஒரு பெண் இருந்தால் அவளுடன் பேசிப் பழகுவதில் தப்பில்லை! பஸ்ஸிலோ ரயிலிலோ நாம் பயணம் செய்யும்போது சில நல்ல இதயங்களின் சிநேகம் கிடைக்கலாம். பெண் சிநேகிதிகளைப் பெறுவதில் என்ன லாபம் என்றால், நாம் தப்பு செய்தால் உடனே பளிச்சென்று சொல்லிவிடுவார்கள். ஒரு ஆண் சொல்வதைவிட ஒரு பெண் தவறைச் சுட்டிக்காட்டும்போது நமக்குச் சுரீரென்று உறைக்கும். பெண்களைப் பார்ப்பதில் தப்பில்லை; ஆனால் நயவஞ்சகப் பார்வை பார்ப்பதுதான் தப்பு!

ஜா. ரமேஷ்

பொதுவாகப் பெண்கள் என்றால் புடவை, நகை, பூ இவைகளைப் பற்றித்தான் பேசுவார்கள். இந்தப் பேச்சுக்களில் இருந்து மாறுபட்டு அறிவு பூர்வமாக பேசுகிறவர்களைப் பொது இடங்களில் கண்டால் நான் அவர்களைப் பார்ப்பதுண்டு. பட்டிமன்றம், கவியரங்கம் இது போன்ற நிகழ்ச்சிகளில் ஒரு பெண் தன் வாக்கு சாதுர்யத்தைக் காட்டுகிறாள் என்றால் அவளைப் பாராட்ட என் மனம் துடிக்கும். ஒருவருடைய முகத்தை வைத்தே அவளுடைய புத்திசாலித்தனத்தையும் தைரியத்தையும் கண்டு பிடித்துவிடலாம். புத்திசாலியான பெண்களுடன் அறிவு பூர்வமாகப் பேசுவதில் எனக்கு நாட்டம் உண்டு.

பேட்டி:

கிழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்



காலை பிரதானம்

ஒரு மரத்திற்கு அடி மரம், வேர்கள் போல நம் உடலுக்கு கால்களும் பாதங்களும். நம் உடல் ஆரோக்கியத்தில் கால்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

உடல் முழுவதும் குளிரில் நடுங்கும் பொழுது பாதத்தை, கால் உறை போட்டுச் சூடாக வைத்திருந்தாலே குளிர் தெரியாது. ஹார்ட் அட்டாக் வந்த நோயாளிகளுக்குப் பாதத்தை மஸாஜ் செய்வது போல் ஒரு பூட்ஸ் போடுகிறார்கள். ஹிருதயத்திற்குப் போடும் மருந்தைக் கூட உள்ளங் காலில் போடுகிறார்கள்.

நாம் கூட கண் குளுமையாக இருக்க மருதாணியை அரைத்து உள்ளங்காலில்தான் இட்டுக் கொள்வோம்.

ப்ளூ ஜுரம், தொண்டைப் புண் வயிற்றுக் கோளாறு என்று எது வந்தாலும் முதலில் வலிப்பது கால்தான். அதுதான் நிற்க சக்தியில்லாமல் துவண்டு போகும்.

காலை பத்து நிமிடங்கள் வெந்நீரில் அமிழ ஊற வைத்துக் கொள்வது உடலுக்குப் பல விதங்களில் நன்மையளிக்கும்.

1. ஒரு பெரிய பக்கெட்டில் கைபொறுக்கும் சூட்டில், ஒரு அடி உயரத்திற்கு வெந்நீர் விட்டு, பக்கத்தில் ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு, இரண்டு கால்களையும் அதனுள் வைத்துக் கொள்ளவும்.

2. கொஞ்சம் கொஞ்சமாக, காலுக்கு இதமாக இருக்கும்வரை, காலில் ஆடு சதை அமிழும் அளவுக்கு மேலும் வெந்நீர் சேர்க்கவும்.

3. இப்படியே பத்து நிமிடங்கள் அல்லது சூடு குறையும் வரை வைத்திருக்கவும்.

4. காலை வெளியே எடுத்துத் துண்டால் ஈரம் போகத் துடைக்கவும்.

காலுக்கு இப்படி போஷாக்குச் செய்வது, உஷ்ணத்தை அதிகரித்து, ரத்த ஓட்டத்தை விரைவாக்குகிறது. இது ஹிருதய தசையையும் வலுவாக்குகிறது. ரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதன் காரணமாக ஏற்படும் தலை வலி, தூக்கமின்மை போன்றவற்றிற்கும் இந்த 'ஃபுட் பாத்' நிவாரணமளிக்கிறது.

ஆஸ்துமா, மார் சளி, சிறுநீரகத் தொல்லை, குடல் உபத்திரவம் என்று பலவிதமான உடல் உபாதைகளுக்கு இந்த சிகிச்சை நல்லது.

ரொம்ப அசதியாக இருக்கிறது, மனச் சோர்வாக இருக்கிறது என்றாலும் இந்த 'ஃபுட் பாத்' புத்துணர்ச்சியளிக்கும்.

— ஜெயா வி. ராமன்.

“அதிக அளவு நெய், அதிக மணம் தருகிறது ஆவின் வெண்ணெய்”



ஆம். இந்த இல்லத்தரசி கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. அனுபவத்தில் கண்ட உண்மை! ஆவின் வெண்ணெய் புதிய, சுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. நவீனமான முறையில் தானியங்கி இயந்திரங்கள் மூலம் வெண்ணெயிலிருந்து தண்ணீர் முழுமையாக அகற்றப்பட்டு, பேக் செய்யப்படுகிறது. இதனால் வெண்ணெய் காய்ச்சும்போது அதிக அளவு நெய் கிடைக்கிறது.

ஆகவே ஆவின் வெண்ணெய் சிக்கனமானதாக அமைகிறது.

புதுத்தன்மை மற்றும் உயர்ந்த தரம் காரணமாக நெய் மிகுந்த மணமுள்ளதாகவும் இருக்கிறது. ஆவின் வெண்ணெய் நிகரற்று விளங்குகிறது... அதன் தரம், தூய்மை, புதுத்தன்மை காரணமாக! இன்றே வாங்கிப் பாருங்கள், உண்மை உங்களுக்கு விளங்கும்.

ஆவின்

வெண்ணெய்

வெண்மையானது · தரமானது · சிக்கனமானது.

'மயூரி'யை மறக்க முடியுமா?



விதி செய்யும் சில வினைகளுக்கு இன்று விஞ்ஞானம் மாற்றுக் கண்டுபிடித்திருக்கிறது. கண்ணொளி இழந்து கலங்கித் தவிக்கும் சிலருக்கு இறந்தவரது 'கண்களை எடுத்துப் பொருத்தி அவர்கள் மீண்டும் இவ்வுலகைக் காணச் செய்கிறது. சிறுநீரக தானமும், இரத்த தானமும்...

இதே போல் விபத்துக்களாலோ, பிற நோய்களாலோ கைகால்களை இழந்தவர்களுக்கு இதே விஞ்ஞானம் ஏதாவது மாற்றுச் செய்திருக்கிறதா? உயிரும், சதையுமாய் இன்னொருவருடைய கையையோ, காலையோ எடுத்து இணைக்க முடியாது. அது சாத்தியமாகாது.

அதற்குப் பதிலாக 'Next Best' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதுபோல அதற்கடுத்த ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. அதுதான் மரத்தினால் கை, கால்களைச் செய்து, இழந்தவர்களுக்குப் பொருத்தி அவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் தினசரி அலுவல்களைக் கவனிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் வசதிகள் செய்து கொடுப்பது.

மனவலிமை இருந்தால் இந்த மரக் கால்களோடு நாட்டியம் கூட ஆடலாம் என்ற உண்மையை மறக்க முடியுமா 'மயூரி' யைப் பார்த்தவர்கள். அந்தத் திரைப்படம் பிரபலப்படுத்திய இன்னொரு உண்மை அந்தச் செயற்கை அவயவங்களைச் செய்து தரும் இடம் ஜெய்ப்பூரில் உள்ளது என்பது.

ஆனால், இங்கே சென்னையிலேயே 1963 இல் பொது மருத்துவமனையில் ஒரு சிறு பிரிவாகத் தொடங்கப்பட்டுப் பின்பு 1979 ஆம் ஆண்டிலிருந்து கே. கே. நகரில் 7 ஏக்கர் பரப்புள்ள தனி இடத்தில் அவயவங்களை இழந்து அல்லலுறும் மக்களுக்கு ஒரு நன்னம்பிக்கை முனையாக 'அரசு மறுவாழ்வு மருத்துவ நிலையம்' ஒன்று இயங்கி வருவது பலர் அறிந்திராத உண்மை. 103.82 கிரௌண்ட் பரப்பளவில் சுமார் 23 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த மருத்துவமனையில் நாளொன்றுக்குச் சுமார் 60 பேர் 'இன்' பேஷண்டுகளாகவும் 250 பேர் வெளியிலிருந்து வந்தும் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இதன் இயக்குனர் டாக்டர் ஐ. எஸ். சண்முகம் அவர்கள்.

இந்திய அரசின் கான்பூர் செயற்கை உறுப்பு நிறுவனம் அளித்த உதவித் தொகையையும் சேர்த்துக் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடம், உடல் ஊனமுற்றோர், செயற்கை அவயவங்களுடை சக்கர வண்டிகளிலோ எளிதில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்லும்படி கட்டிடத் தடைகள் ஏதுமின்றிக் கட்டப்பட்டுள்ளது. கழிவறைகள் கூட உடல் ஊனமுற்றோர் பிறர் உதவியின்றிப் பயன்படுத்தும் விதத்தில் கட்டப்பட்டுள்ளன.

செயற்கை அவயவங்கள் பொருத்துவதோடு மட்டும் நில்லாமல் அவ்வாறு பொருத்தப்பட்டவர்கள் எந்தெந்தத் துறையில் வேலைவாய்ப்புப் பெற முடியும் என்பதை அறிந்து அவர்களுக்கு அத்துறையில் பயிற்சி அளித்துச் சுயவேலைவாய்ப்புக்குத் தகுதியும் ஏற்படுத்திக் கொடுப்பதே இந்தப் புனர் வாழ்வு மையத்தின் நோக்கம்.

இங்கே செயற்கை அவயவங்கள் பொருத்தும் மருத்துவராகப் பணிபுரிபவர் டாக்டர் கே. ஜனார்த்தனம் அவர்கள். இங்கிலாந்தில் உள்ள 'Roehampton' என்னும் செயற்கை உறுப்புப் பொருத்தும் மையத்தில் முறையான பயிற்சி பெற்றவர் இவர். அந்த நினைவாகத் தம் இல்லத்திற்கே 'Roehampton' என்றுதான் பெயர் வைத்திருக்கிறார். தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்தத் துறையில் மருத்துவராகப் புகுந்தது இவரது பெருமை.

முதல் உலகப் போர்க் காலத்தில் இங்கிலாந்திலும், இரண்டாவது உலகப் போரின் போது இந்தியாவில் பூனாவில் இராணுவத்தின் ஒரு பகுதியாகவும் துவக்கப்பட்ட இந்த மையங்கள் இன்று தமிழ்நாட்டில் சென்னையில் மட்டுமல்லாமல், மதுரை, தஞ்சை,

கோவை, கடலூர், நெல்லை ஆகிய பல இடங்களில் ஏழை, பணக்காரர் பாகுபாடின்றி அனைத்துப் பிரிவிலுமுள்ள ஊனமுற்றோருக்கும் உயர்ந்த சேவை செய்வதை நினைவு படுத்துகிறார் டாக்டர் ஜனார்த்தனம்.




முதலில் செயற்கை உறுப்பு பொருத்தப்பட வேண்டியவரது உடல்நிலை, கல்வி, தொழில், வருவாய்,. குடும்பம், சமூக நிலை பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய 'வரலாறு' ஒன்றை இம்மையத்தின் 'மருத்துவ சமூக சேவைப் பிரி'வினர் தயாரிக்கிறார்கள். மின்சாரத் தாக்குதல், பிற விபத்துக்கள் ஆகியவற்றால் கால்களை இழந்தவர்களுக்கு அந்தக் காலின் சரியான அளவுகளின்படி Plaster of Paris வைத்து ஒரு 'Cast' அல்லது புறவடிவம் தயாரிக்கப்படுகிறது. பின்பு Plaster of Paris பொடியைக் கரைத்து இதற்குள் ஊற்றுகிறார்கள். பின்பு 'Alignment machine' என்னும் ஓர் இயந்திரத்தை வைத்து கால் பொருத்தப்படுபவரின் 'Pressure – relieving points, weight bearing points' ஆகியவற்றைத் துல்லியமாகக் கணித்து அந்தச் செயற்கைக் காலில் குறித்துக் கொள்கிறார்கள்.

இது மிகவும் முக்கியமான ஒரு பணி. அதாவது செயற்கைக் கால் பொருத்தப்பட்டு நடப்பவர் அந்தக் காலின் சில இடங்களில் தன் எடை முழுவதையும் இறக்குவார். அந்த அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளும்படி அந்த உறுப்பும் அமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு வலி அதிகமாகும். அந்தக் காலை இயற்கையான காலில் இருப்பது போல் தசை மேடுகளையும், பள்ளங்களையும் இந்தச் செயற்கைக் காலின் வடிவத்திலும் ஏற்படுத்துகிறார்கள். பின்பு இதை மின் அடுப்பில் வைத்துக் கெட்டிப் படுத்துவதற்காகச் சுட்டெடுக்கிறார்கள்.

இப்புற வடிவத்திற்கு P. V. C. யாலான ஓர் உறை போடப்படுகிறது. அதற்குமேல் ஆறிலிருந்து எட்டு லேயர்கள் வரை 'ஸ்டாக்கிங்ஸ்' எனப்படும் காலுறைகள் போடப்படுகின்றன. அதற்குமேல் திரவ ரெஸின் ஊற்றப்பட்டுச் சமப்படுத்தப்படுகிறது. இது நன்றாகக் கெட்டிப்பட்டதும் உள்ளே ஊற்றப்பட்ட 'mould' உடைத்து எடுக்கப்படுகிறது. இந்தக் கால் 'fixing block' எனப்படும் பொருத்தும் பகுதி மூலம் கணுக்கால் பகுதி, பாதப் பகுதி இவற்றுடன் 'Suspension cuffs' என்றழைக்கப்படும் இணைப்புக் கருவிகள் மூலம் ஒன்றாகச் சேர்க்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட இப்பகுதிகள் அனைத்தும் red cidar எனப்படும் செம்மரத்தால் ஆனவை. நம் நாட்டில் எளிதில் கிடைக்கும் இம்மரம் எடை மிகக் குறைந்தது. ஆகையால் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறு எல்லாப் பகுதிகளையும் தனித் தனியாகச் செய்து பொருத்த வேண்டிய ட்ரில்லர் போன்ற எல்லா இயந்திரங்களும் இங்கேயே இருக்கின்றன.

செயற்கைக் காலைப் போலவே செயற்கைக்கைகளும்இங்கேசெய்துபொருத்தப்படுகின்றன. மரத்தாலான இந்தக்கைவிரல்களில் கட்டை விரலைத் தனியாகவும், சுட்டு விரலையும் பாம்பு விரலையும் சேர்த்தும் அசைக்கலாம். தோளின் அசைவுகளுக்கேற்ப





இவைகளும் அசையுமாறு அமைக்கப்பட்டுள்ளன. செயற்கைக் கைக்குப் பதிலாகச் சற்று விலை குறைந்த 'hook' அல்லது 'கொக்கி' ஒன்றையும் பொருத்தும் வசதி உள்ளது. இதைப் பொருத்திக் கொண்டும் அன்றாட அலுவல்களை மற்றவர் உதவியின்றிக் கவனித்துக் கொள்ளப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

''இலவசமாக அளிக்கப்படும் எந்தப் பொருளுக்குமே மதிப்பு கிடையாதும்மா'' என்று கூறுகிறார் டாக்டர் ஜனார்த்தனம். இந்தச் செயற்கை அவயவங்களுக்காக அவரவர் வசதிக்கேற்பப் பணமளித்தால் போதும். மாதம் 300 ரூபாய்க்குக் குறைந்த வருவாயுள்ள ஒருவர் 38 ரூபாய் தந்தால் போதும்.'' மற்றபடி இங்கே அளிக்கப்படும் இயல்பியல் சிகிச்சை (Physiotheraphy) இலவசமாகவே அளிக்கப்படுகிறது.

செருகு பலகைகள், பந்துகள், நிற்கப்பயிற்றும் மேசை, பொம்மைகள் ஆகியவை மூலமும் உடையணியும் பயிற்சிப் பலகை, மின் சாதனங்கள், பல்வகைத் தாழிடும் பயிற்சிக் கருவி, சுயதேவைப் பயிற்சிக்கான கருவிகள் ஆகியவை மூலமும் எப்படி இந்தச் செயற்கை உறுப்புகளை இயற்கை தந்த அவயவங்களைப் போலவே பயன்படுத்த வேண்டும் என்பதற்கான பயிற்சியை அத்துறையில் தேர்ச்சி பெற்ற இயல்பியல் சிகிச்சையாளர்கள் அளிக்கிறார்கள்.

இந்தச் செயற்கை அவயவங்களில் முக்கியமான மற்றொன்று 'Madras Foot' என்றழைக்கப்படும் செயற்கைப் பாதம். மேல்நாட்டுச் செயற்கைக் கால்களில் உள்ள பாதங்களில் பூட்ஸ் இருக்கும். அது நம் நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கு உகந்ததல்ல.. இக்கருத்தை மனத்தில் கொண்டு மரத்தில் வடிவமைத்து மேலே உருகிய ரப்பரை ஊற்றிச் செய்த **Madras Foot** ஐ முன்னோடியாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே இப்போது **Jaipur Foot** என்று பிரபலமடைந்திருக்கும் முழுவதும் உருக்கிய ரப்பரால் செய்யப்பட்ட செயற்கைப் பாதம் என்பது டாக்டர் ஜனார்த்தனத்தின் கருத்து.

இவ்வாறு செயற்கை உறுப்புக்களைப் பொருத்தி, பயிற்சி அளித்து உடல் ஊனமுற்றவருக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டும் நிற்காமல் அவர்கள் அந்தச் செயற்கைக் கால்களிலேயே நிற்கும்படி வருவாய் தரக்கூடிய ஒரு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருகிறார்கள்.

அவரவர் திறமைக்கு ஏற்றாற்போல் தையல், தச்சு வேலை, அச்சு கோர்த்தல், அச்சடித்தல், புத்தகம் 'பைண்ட்' செய்தல் போன்ற ஏதாவதொரு வேலையில் அங்கேயே பயிற்சி அளிக்கப்படுகிறது. ஓரளவு தேர்ந்தவுடன் ஊனமுற்றவர்க்கென்று தனியாக இருக்கும் வேலை வாய்ப்புப் பதிவகத்தில் பெயர் பதிவாக்கப்பட்டு வேலையும் பெற்றுத் தரப்படுகிறது. இவ்வாறு சென்ற வருடம் 80 உடல் ஊனமுற்றோர் வெளியில் வேலை பெற்றதாகவும், 75 பேர் சுயவேலை வாய்ப்பை அடைந்ததாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தத்தம் கால்களில் தளராது நிற்கவே தடுமாறும் ஒரு சிலர் — செயற்கைக் கால்களை ஊன்றிச் செம்மாந்து நிற்கும் ஒரு சிலர் — ஆ! உலகின் மக்கள்தான் எத்தனை விதம்!

— நிர்மலா சக்கரவர்த்தி

தோல் மகாத்மியம்

பழங்கள், காய்கறிகளின் தோல் பகுதியை பயனற்றது என நாம் எறிந்து விடுகின்றோம். ஆனால் அவற்றில் எண்ணிறந்த வைட்டமின்களும் தாதுப் பொருட்களும் உள்ளன. உதாரணத்திற்கு ஒரு சில:

உருளைக்கிழங்குதோல்—வைட்டமின் A & K, இரும்புச் சத்து.

மாந்தோல் — வைட்டமின் A & B

ரேடிஷ் மேல் பகுதி — வைட்டமின் A & C

எலுமிச்சை, ஆரஞ்சுதோல்—வைட்டமின் P

வாழைத் தோல்— வைட்டமின் A B & E, இரும்புச் சத்து.

கேரட் மேல் பகுதி — வைட்டமின் A C & K

வெள்ளைப் பூசணி — வைட்டமின் B

டர்னிப் தோல் — வைட்டமின் A, இரும்புச் சத்து.

பூசணி, சுரைக்காய் விதைகள் — கொழுப்பு, புரோட்டின்.

இனியாவது முடிந்தவரை இவற்றைப் பயன்படுத்தலாமல்லவா?

— தெய்வானை.




ப்ரீதி
ஹெவி ட்யூடி மிக்ஸர் கிரைண்டருடன்
2 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி
வருட உத்திரவாதம்
ரூ. 1249 மட்டுமே
விநியோகஸ்தர்கள் :—
டி.ஏ. டெய்லர் & கோ (மெட்ராஸ்) பி. லிட்.,
18/19, ஸ்ரீராம் நகர், தெற்கு தெரு, சென்னை-600 018.
Tel: 451709 / 451747 / 450564
ஏதோ ஒரு மிக்ஸி அல்ல—இது ஒரு ttk தயாரிப்பு

இந்த மாதம் எப்படி?

ஜூலை '87

பிறந்த தேதி 1, 10, 19, 28 பெயர் எண் 1:

மாதம் பூராவும் உங்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் பொறுப்புகளை ஏற்க வேண்டி இருக்கும். இது உங்களுக்காகவும் இருக்கலாம். அல்லது பிறருக்காகக் கூட இருக்கலாம். வீடு, குடும்பம், உடல்நிலை என எல்லா விஷயங்களிலும் சற்று கவலைப்பட வேண்டி இருக்கும். உங்களுக்கு வேண்டிய ஒருவருடன் (அவர் உறவினராகவோ நண்பராகவோ இருக்கலாம்.) மன வேற்றுமை கொள்ள வேண்டியிருக்கும். எனினும் உங்கள் கருத்தை உரிய முறையில் அமைதியாக வெளியிட்டால் உங்களைப் பற்றிய தவறான எண்ணம் நீங்கி மீண்டும் உறவு செழிக்கும். பிறருக்கு உதவுவீர்கள். ஆனால் பொறுப்பற்று நடக்கும் எவருக்கும் உதவ வேண்டாம். வீண் அபராதம் அதனால் ஏற்படும். ஆகார விஷயங்களில் கவனம் தேவை. தற்போது ஆரம்பிக்கும் எந்தச் செயலும் வெற்றி நடை போடும். திங்கள், புதன், வெள்ளி நலன் தரும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அமைதியுடன் இருங்கள்.

பிறந்த தேதி 2, 11, 20, 29 பெயர் எண் 2:

இந்த மாதத்தில் நீங்கள் செய்யக் கூடிய இரண்டொரு செயல்கள் உங்களுக்கு மனக் குழப்பத்தை உண்டாக்கும். உங்கள் மனசாட்சி நீங்கள் செய்தது சரியா என நீதி விசாரணை செய்ய ஆரம்பிக்கும். தற்சமயத்தில் ஆழ்ந்த அமைதியும் பக்திப் புத்தகங்களை படிப்பதும் சரியான நிலையில் உங்களை அழைத்துச் செல்லும். யாருடனும் நெருங்கிப் பழகாதீர்கள். சிரித்துப் பேசும் பெண் ஒருவரால் சில சிக்கல்கள் உண்டாகும். குறிப்பாக இந்த மாத ஆரம்பம் உங்களுக்கு உகந்ததாக இல்லை. 10 தேதிக்கு மேல் படிப்படியாக நன்மை ஏற்படும். 25 ந் தேதி எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடக்கும். 11, 20, 25 தேதிகள் நன்மை தரும். 8 ந் தேதி ஏற்றது அல்ல.

பிறந்த தேதி 3, 12, 21, 30 பெயர் எண் 3:

பணமும் பொருளும் சேர்வதற்கு ஏற்ற காலம். எதையும் தைரியமாக எதிர்கொள்ளலாம். அஷ்டலட்சுமிகளின் அருட்கடாட்சம் உங்கள் பக்கம் உள்ளது. ஆயினும் மகிழ்ச்சியால் பதற்றத்திற்கும் அலட்சியத்திற்கும் இடம் அளித்து விடாதீர்கள். புது தொழில் ஆரம்பிக்க, ஒப்பந்தம் செய்து கொள்ள, முன் பணம் கொடுக்க ஏற்ற காலம். திருமணமாகாதவர்களுக்கு இதுநாள் வரை தடங்கல் இருந்த நிலைமாறி முகூர்த்தம் கைகூடி வரும். விநாயகருக்கும் சனீஸ்வரனுக்கும் அர்ச்சனை செய்தால் நன்மை ஏற்படுவதில் தாமதமோ தடங்கலோ ஏற்படாது. 8, 17, 21, 30 தேதிகள் நலம் தரும்.

பிறந்த தேதி 4, 13, 22, 31 பெயர் எண் 4:

இந்த மாதத்தில் முற்றுப் பெறாத ஒரு செயல் செவ்வனே முடிவடையும். அதற்கிருந்த தடங்கல் நீங்கிவிட்டது. அரசு உதவியும், வங்கிகளின் உதவியும், பெற ஏற்ற தருணம். பயன்பெற முயற்சிக்க வேண்டும்.

எதையும் முயன்றுதான் பெற வேண்டும். நீங்கள் உங்களுக்காக முயன்று பயன் உடனடியாகப் பெற ஆவன செய்ய வேண்டிய காலம். பிறரை நம்பாதீர்கள். இரத்தக் கொதிப்பு, காதுகோளாறு, நீரிழிவு உள்ளவர்களுக்கு உடல்நிலை சற்று கவலை தரும். ஆனால் விபரீதத்திற்கு இடமில்லை. கவலை வேண்டாம். யாரிடமும் பேரம் பேசாதீர்கள். பண விஷயத்தில் கவனம் தேவை. விரயத்திற்கு இடம் தந்துவிடாதீர்கள். 5, 3, 6 தேதிகள் நலம் தரும். 9 ஆம் தேதி அதிர்ஷ்டம் தரும்.

பிறந்த தேதி 5, 14, 23 பெயர் எண் 5:

புது முயற்சி ஒன்றைச் செய்து தொழிலில் வெற்றிநடை போடுவீர்கள். பெண்களுக்குப் புதிய பெண் நண்பர்கள் ஏற்படுவார்கள். அகன்ற முகத்தையுடைய அம்மையார் ஒருவர் உங்களுக்கு அறிமுகமாவார். அவரால் நீண்ட காலத்திற்குப் பின் நன்மை உண்டு. ஒரு சிலருக்கு வாகன யோகம் உண்டு. வைரம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். அந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்! ஆஸ்துமா, காச நோய் உள்ளவர்கள் சற்று பாதிக்கப்படுவார்கள். ஆகாரத்தில் மிகவும் கவனம் தேவை. குளிர்ச்சியான உணவினைத் தவிர்க்கவும். இந்த மாதத்தில் உடல் உபாதை ஏற்படக் காரணம் இருப்பதால் இதைக் கூற வேண்டியுள்ளது. 5, 14, 26 தேதிகள் நலம் தரும். 14 ஆம் தேதி சுபச் செய்தி ஒன்று வரும்.

பிறந்த தேதி 6, 15, 24 பெயர் எண் 6

சிறு விஷயங்களைக் கூட நீங்களே கவனித்து உங்கள் மேற்பார்வையில் செய்ய வேண்டிய காலம். மாதத்தின் பிற்பகுதியில் நிலைமை மாறும். சிந்தித்துப் பேசுங்கள். குறைவாகப் பேசுங்கள். குற்றங்களைக் கண்டாலும் காணாது ஒதுங்குங்கள். பொல்லாங்கும் பொறுமையும் உங்களைச் சூழ்ந்துள்ளது. உங்கள் வெற்றி சிலரது கண்களை உறுத்துகின்றது. புதன்கிழமை திருமாலை வழிபடுங்கள். திங்கட்கிழமை சந்திரனுக்கு உங்கள் பெயரில் அர்ச்சனை செய்யுங்கள். திருஷ்டி தோஷம் ஏற்பட வாய்ப்புண்டு. அன்றாட சாதாரணப் பிரச்னை கூட விஸ்வரூபம் எடுக்கும். கூடிய வரை எதிலும் ஒதுங்கி இருப்பது நலம். இந்த மாதம் மட்டும் அப்படி. பிறர் கூறும் சிறு குறைகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து, அதற்குச் சமாதானம் கூறப் புகுந்தால் அதுவே பெரும்விளைவில் முடியும். கவனம் இருக்கட்டும். 15, 24 தேதிகள் நலம் தரும்.

பிறந்த தேதி 7, 16, 25 பெயர் எண் 7:

எல்லோருடனும் பழகும் மாதம். ஒரு சிலருக்குக்கடல் கடந்து செல்லும்பிரயாணம் ஏற்படலாம். பிக்னிக்குக்கு ஏற்ற மாதம். பெண்கள் பிறந்தவீட்டிற்குப் போய் மகிழ்ச்சியுடன் சில நாட்கள் இருக்க வேண்டியிருக்கும். தொழிலில் இலாபமும் தோன்றும். விநாயகருக்கு அபிஷேகமும், குருவுக்கு அர்ச்சனையும் செய்தால் புது வீடு அமையும். கன்னிப் பெண்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கும். வீடு தேடி மாப்பிள்ளை வரும் யோகம் சிலருக்கு உண்டு. அழைப்புகளுக்கு மதிப்புக் கொடுத்து விழாக்களில் கலந்து கொள்ளுங்கள். நன்மை உண்டு. மேலதிகாரிகள் மதிப்பு சிலருக்கு ஏற்படும். பயனும் ஏற்படும். நல்ல மாதம், எல்லாத் தேதிகளும் ஏற்றவையே.

பிறந்த தேதி 8, 17, 26 பெயர் எண்: 8

கடின உழைப்பு செய்து வெற்றி இலக்கை அடைய வேண்டியிருக்கும். வரவு செலவுகளில் திட்டமிட்டு அதன்படி நடக்கவும். எந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ளீர்களோ அதில் கண்ணும் கருத்துமாக இருங்கள். பிறர் தூஷணைகளை பொருட்படுத்தாதீர்கள். பருத்த, கொழுத்த உடம்பினை உடைய ஒருவர் உங்கள் விவகாரத்தில் புகுந்து குட்டை குழப்புவார்கள். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து இந்த மாதம் ஒதுங்கி இருங்கள். எதையும் அனுபவப் பூர்வமாக அணுகுங்கள். வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். சிலருக்கு உஷ்ணக் கொப்பளம் ஏற்படலாம். இஷ்டப் பிரயாணம் ஒன்றுக்கு வாய்ப்புண்டு. போய் வரலாம். பாதகமில்லை. சனிக்கும், இராகுவுக்கும் அர்ச்சனை செய்யுங்கள். நல்ல தேதிகள் 4, 1, 9, 18 ஆகாத தேதிகள் 15, 14.

பிறந்த தேதி 9, 18, 27 பெயர் எண் 9:

எதிர்பாராத லாபம் கிடைக்கும். அதிக அளவில் மூலதனமிடும் முயற்சியை ஒத்திப் போடவும். காலம் கனிந்து வரவில்லை. புது மனிதர்களிடம் தொடர்பு கொள்ளலாம். பயன் ஏற்படும் வாய்ப்பு உண்டு. எதிலும் அவசரப்பட்டு வாக்குத் தர வேண்டாம். சிலருக்குச் சிரித்துப் பேசி மகிழ்ந்து மனநிறைவு பெறும் வாய்ப்பு உண்டு. புது மணத்தம்பதிகளுக்குச் சிறந்தொரு தேனிலவு நேரம். பழைய தம்பதிகளும் ஒரே எண் உடையவர்களாக இருந்தால் புது உற்சாகத்துடன் சுற்றுலா சென்று வரும் வாய்ப்பு உண்டு. ஆனால் மகிழ்ச்சியின் ஊடே உங்கள் காரியத்தில் கண்ணாக இருக்கத் தவறாதீர்கள். சிறு கவனமின்மை பெரும் நஷ்டத்திற்கு இடமளித்துவிடும் அபாயம் உள்ளது. அங்காரகனுக்கும் புதனுக்கும் அர்ச்சனை செய்தால் மேலும் மகிழ்வுடன் இருக்கலாம்.

பின்குறிப்பு: (பிறந்த தேதியும், பெயர் எண்ணும் வெவ்வேறாக இருப்பவர்களுக்கு இரு எண்களுக்கும் உடைய பலன்கள் கலந்து நடக்குமாதலால் இரண்டு பகுதிகளையும் படித்துக் கொள்ளவும்.)



பெண்களுக்கான கைரேகை பலன்கள்:

உள்ளங்கையில் உறையும் தெய்வங்கள்

காலேயில் கண் விழிக்கும்போதே கைகளைத் தேய்ப்பது — பிறகு உள்ளங்கைகளை உற்றுப் பார்ப்பது அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வது என்பது சிலர் வழக்கமாகச் செய்துவரும் செயலாக இருக்கும். அறிந்தோ, அறியாமலோ அவ்வாறு செய்தாலும் அதன் பின்னணியில் ஓர் ஆழ்ந்த தத்துவம் அடங்கியுள்ளது. உள்ளங்கையில் உள்ள மேடுகள் ஏழு கிரகங்களுக்குரியவை ஆகும். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஓர் அதிதேவதை உண்டு. சிலகிரகங்களுக்குஒன்றுக்கு மேற்பட்ட அதிதேவதைகள் உள்ளனர். அந்தந்த கிரகத்திற்குரிய அதிதேவதைகள் அவரவர்க்குரிய கிரகமேடுகளில் வாசம்செய்கிறார்கள்.

பசுவின் உடலில் தேவரும், மூவரும் லக்ஷ்மியும், ஒவ்வோர் அங்கமாகப் பிரித்து வாசம் செய்கிறார்கள் என்பது ஐதீகம். அது போலவே நமது உள்ளங்கையில் கிரக அதிதேவதைகள் வாசஞ்செய்கிறார்கள். அத்துடன் நம்மையும் வழி நடத்திச் செல்கிறார்கள்.

1. குருமேட்டில் நான்முகன் எனப்படும் பிரும்மாவும், தக்ஷிணாமூர்த்தியும்.
2. சனிமேட்டில்காலனும், சாஸ்தா எனப்படும் ஐயப்பனும்.
3. சூரியமேட்டில் சிவனும்.
4. புதன் மேட்டில் மகாவிஷ்ணுவும்.
5. செவ்வாய் மேட்டில் முருகன் எனப்படும் சுப்ரமணியரும்.
6. சந்திரமேட்டில் பரமேஸ்வரி எனப்படும் பராசக்தியும்.
7. சுக்கிர மேட்டில் மகாலக்ஷ்மியும் குடி கொண்டு நமக்கு அருள் பாலிக்கிறார்கள்.

இவ்வாறு கிரக தேவதைகள் குடி கொண்டுள்ள கோயில்களாகிய கிரகமேடுகளை உடைய உள்ளங்கைகளைத் தெளிந்த மனத்துடன் விடிந்தும் விடியாத காலைப் பொழுதினில் பார்த்து கண்களில் ஒற்றிக் கொள்ளுவதன் மூலம் அனைத்து தெய்வங்களையும் ஒருசேர ஆராதிக்கிறோம். உண்மையான இறை பக்தர்களுக்கு இதை உணர்ந்த மாத்திரத்தில் உள்ளம் நெகிழும். மெய் சிலிர்க்கும். நெறிமுறையுடன் கூடிய இந்த தெய்வ வழிபாட்டைத் தத்துவார்த்தத்துடன் செய்தால் அதற்கு மேலும் பலன் அதிகம் ஏற்படும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம், என்பது போல் உள்ளங்கை தரிசனம் பாப விமோசனம், எனப்படும்.

அதுமட்டுமல்ல இறைவன் முதல் ஞானிகள் வரை அனைவரும் கைகளை உயர்த்தி, உள்ளங்கையை விரித்து ஆசி கூறுவதும் இந்தத் தத்துவத்திற்குட்பட்டது போலும்! நவநாயகர்கள் நன்மை புரியட்டும் என்றே அவர்கள் வாழ்த்துவதாகக் கொள்ளலாம் அல்லவா? மேற்குறித்த தேவதைகளில் கணபதியையும் கலைமகளையும் விட்டு விட்டோமே என சிலர் நினைக்கலாம். ஆற்றங்கரை அண்ணல் எனப்படும் துதிக்கையோனுக்கும், வீணையைக் கையிலேந்திய கலைவாணிக்கும் நமது உள்ளங்கையில் இடமில்லாமலா போகும்! உயர்ந்த இடத்திலே இருந்து கொண்டு அவர்கள் எவ்வாறு அருள் பரிபாலிக்கிறார்கள் என்பதைப் பிறகு பார்க்கலாம்.

பொதுவாக உள்ளங்கை மேடுகள் ரோஜா நிறத்தில் இருக்க வேண்டும். அம்மேடுகளில் தாறுமாறான ரேகைகள் இருத்தல் கூடாது. கரும்புள்ளிகள், சிவப்புப் புள்ளிகள், திலகங்கள், மச்சங்கள் எனப் பலவிதமான குறிகள் இருந்தால் தனித்தனி பலன்கள் உண்டு. நமது சிந்தனை, அறிவு, ஆற்றல் அனைத்தும் எப்படிப்பட்டவை, அவைகளால் நமது கடந்த, நிகழ்கால, வருங்கால பலன்கள் எவ்வாறு இருக்கும், என்பதை இம்மேடுகள் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டிவிடும். மேடுகளும், அதன்மேல் செல்லுகின்ற ரேகைகளும் மனித வாழ்வில் மகத்தான மாற்றத்தைச் செய்கின்ற ஆற்றல் படைத்தவை. மேடுகளின் அமைப்பு, ரேகைகளின் போக்கு, அவற்றிற்கேற்ப கிரகங்கள் நமக்களிக்கும் பலா பலன்கள் ஆகியவற்றையும் உங்கள் வாழ்க்கையின் எதிர்கால மர்மங்களையும் அவற்றின் மூலம் உணரலாம்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்

பாதுகாப்பும் வசதியும் உணர்ந்து மகிழ

புதிய காம்ஃபிட் ஆல்வேஸ்

சரிசெய்யக்கூடிய டாப்-என்ட்ஸ்

உங்களுக்கு நாள் முழுவதும் நீடிக்கும் புத்துணர்ச்சியைத் தருவதற்காகவே தயாரிக்கப்பட்டது.


காம்ஃபிட் ஆல்வேஸ் சரிசெய்யக்கூடிய சானிட்டரி நாப்கின்ஸ், கீழ்ப்புறம் இரண்டு அடுக்கு டிஷ்யூக்களுடன் மிருதுவான, இணையற்ற கவரை உடையவை. கவர் உலர்ந்திருக்கையில் மிருதுவாக உறிஞ்சக்கூடிய உட்புற அடுக்குகள் ரத்தத்தை இழுத்துக் கொள்கின்றன. ஒரு நீலநிற பிளாஸ்டிக் பாதுகாப்பு உறை, கறை எதுவும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நாப்கின் பூராவையும் மூடிக் கொள்கிறது.

அதுவே உங்களுக்குப் பூரண பாதுகாப்பாகும். மிகவும் கடுமையான நாட்களில்கூட, பூரணமாக உலர்ந்திருப்பதை உணருகிறீர்கள். எப்போதும் புத்துணர்ச்சியோடு இருப்பீர்கள்.

காம்ஃபிட் ஆல்வேஸ் டாப்-என்ட்ஸ் எந்த உடல் உருவம், அளவு அல்லது வடிவத்துக்கேற்ப சரிசெய்யமுடியும். நேர்த்தியான சொருகக்கும் நெருங்கிய இசைவுப் பொருத்தத் துக்கும்.

நீங்கள் உங்கள் அலுவல்களை செய்து வந்ததைப் போல நம்பிக்கையுடன் செய்யமுடியும்.






தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு பேக்குகள் 10 மற்றும் 20 நாப்கின்ஸ்

வீட்டிலே தயாரிக்கப்படும் சுகாதாரமற்ற நாப்கின்களை உபயோகிக்காதீர்கள். இனி சரிசெய்யக்கூடிய டாப்-என்ட்ஸ் கொண்ட காம்ஃபிட் ஆல்வேஸை உபயோகியுங்கள்.

விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு



FOOD SUBSTITUTE/ SUPPLEMENT FOR DIABETIC PERSONS

TAS

நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கொடுத்து தெம்பை ஊட்டுகின்றது

கொழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன் அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரீஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

"பெண்ணுரிமை இயக்கம் - ஒரு பகட்டு வார்த்தை!"

திருமதி கமலா தேவி சட்டோப்பாத்யாயா என்றவுடன் எல்லோருக்கும் ஞாபகம் வருவது சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் அவர் பங்கு கொண்டதும் பிறகு சிறு கைத்தொழில்குடிசைத்தொழில்உத்தாரணத்திலும் வளர்ச்சியிலும் அவர் ஆற்றிய தொண்டுமாகத்தான் இருக்கும்.

அண்மையில் அவருக்குப் 'பத்மபூஷண்' விருது கிடைத்தது இலக்கியத்துக்காக. அந்தப் பெருமையை அவருக்குத் தேடிக் கொடுத்தது அவர் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் புத்தகம் **'The Inner recesses and outer spaces. A memoir."**

கமலாதேவி அவரது பிரமிப்பூட்டும் சாதனைகளும் பெண் என்கிற பிரக்ஞையே இல்லாமல் ஈடுபட்ட தீரப் போராட்டங்களும் அசாதாரண புத்தி கூர்மையும் கீர்த்தியும் தன்னைச் சேராத பெருமையாய், அன்பும் காருண்யமும் மட்டுமே தனது இயல்பாய் இன்று ஞானப் புன்னகைப் பூக்கும் 85 வயது மூதாட்டி.

அவரைச் சந்தித்ததும் நான் சொன்னேன்.

''உங்கள் புத்தகத்தைப் படித்த பிறகுதான் சுதந்திரப் போராட்டத்தில் அத்தனைப் பெண்கள் மும்முரமாகக் கலந்து கொண்டதை அறிந்தேன். அறுபது எழுபது வருஷங்களுக்குமுன் இந்தியப்பெண்களுக்கு அத்தனை அரசியல் உணர்வும் ஆண்களுக்குச் சமமாகப் போராடும் துணிவும் இருந்ததைக் கண்டு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எப்படி அது சாத்தியமாயிற்று? காந்திஜி காரணமா?''

''பெரும் அளவுக்கு அவர் காரணம். அவர் மேல் பக்தியே ஏற்பட்டிருந்தது. மரியாதைக்கும் மதிப்புக்கும் மேல். அவர் வேண்டுகோளை உடனே நிறைவேற்றுவது தங்கள் கடமை என்று எல்லாரும் முன்வந்தார்கள். அதோடு அந்தக் கால கட்டமும் அப்படி இருந்தது. சுதந்திர வெறி ஒரு மின் சக்தி போல எல்லாரிடமும் பாய்ந்திருந்தது.''

இப்பொழுது இளம் பெண்களைப் பார்க்கிறேன். பருவம் வந்தவுடனேயே கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்என்கிறஎண்ணம் வந்துவிடுகிறது. படிப்பை முடிப்பதற்கு முன்பே அதற்காகத் தயார் ஆகிவிடுகிறார்கள், அதுதான் வாழ்வின் லட்சியம் என்பது போல. வேறு எந்த சமூக பிரக்ஞையும் இல்லை. மிகவும் துக்கமாக இருக்கிறது.''



''உங்கள் இளமைக் கால பாதிப்புக்களைச் சொல்லுங்கள்.''

''என் குடும்பம் ரொம்ப முற்போக்கு எண்ணம் கொண்டது. என்னுடைய அம்மா ரொம்ப தைரியசாலி. பெண்ணுரிமையைப் பற்றிய பிரக்ஞை மிக்கவள். சின்ன வயசிலிருந்து என்னுள் தைரியத்தைப் புகுத்தியவள். அநீதியைக் கண்டு பயப்படாமல் எதிர்க்க வேண்டும் என்பாள். என் அக்கா புக்ககத்தில் ரொம்பவும் கஷ்டப்பட்டாள். அம்மாவுக்கு மூத்தாள் பெண் இருந்தாள். அவளும் கணவனின் போக்கு பிடிக்காமல், புக்ககத்தில் சிறைபட்டாற் போல் இருப்பதைச் சகிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டாள்.

பிறகு என் தகப்பனார் திடீரென்று இறந்த போது அவருடைய ஏராளமான சொத்துக்கள் எல்லாம் குடும்பத்துப் பக்கமே தலைகாட்டாமல் இருந்த (மூத்த தாரத்தின்) மகனுக்குப் போய்ச் சேர்ந்தது. நாங்கள் பெண்கள் என்கிற காரணத்தில் சட்டப்படி எதுவும்கிடைக்கவில்லை. இது எனக்குப் பெரிய அதிர்ச்சி.

சொத்துக் கிடைக்கவில்லை என்பதனால் இல்லை. அது கிடைக்காததின் காரணத்தின் பட்ச பாதத்தினால். நீதிக்காகப் பெண்கள் போராட வேண்டும் என்று என் அம்மா சிறிய அளவில் ஆரம்பித்த இயக்கம்தான் என்னை முன்னேற வைத்தது.

"உங்களுடைய புத்தகத்தில் உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி அதிகம் இல்லையே...?"

"என்னைப் பற்றி எழுதப் போனால் சில அந்தரங்க அநாவசிய விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கும். அது எனக்கு இஷ்டமில்லை. நான் என் கணவரை (ஹரீந்திரநாத் சட்டோப்பாத்யாயா — சரோஜினி நாயுடுவின் சகோதரர்) விவாகரத்து செய்தேனே தவிர சட்டோப்பாத்யாயா குடும்பத்துடன் உறவைத் துண்டிக்கவில்லை. அவருடைய மருமாள் இன்னும் என்னிடம் மிகுந்த விசுவாசத்துடன் இருக்கிறாள். நான் விவாகரத்து கோரியபோது என்னுடைய நெருங்கிய தோழிகள் அதிர்ந்து போனார்கள். என் மனசை மாற்றப் பார்த்தார்கள், காந்திஜி கூடக் கவலைப்பட்டார். அது தொண்டர்களிடையே என் அந்தஸ்தைக் குறைக்கலாம் என்று.

நான் இட்டவட்டமாகச் சொன்னேன் "நான் ஒரு சேவகி. என்னுடைய சேவைதான் அவர்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டுமே தவிர என் சொந்த வாழ்க்கை இல்லை! காந்திஜி என்னைப் புரிந்து கொண்டார். அரசியல் கொள்கைகளில் எங்களுக்குள் நிறைய வித்தியாசம் இருக்கும். ஆனால் ஒருவர் மனத்தைப் புரிந்து கொள்வதில் அவரைப் போல் யாரும் இருக்க முடியாது."

"கைத்தொழில் குடிசைத் தொழிலில் உங்களுக்கிருக்கும் ஈடுபாட்டைச் சொல்லுங்கள்."

"எனக்கு எப்பவும் நமது பாரம்பர்யக் கலைகளிலும் கைத் தொழிலிலும் ரொம்ப ஈடுபாடு உண்டு. இயல் இசை நாடகம் ஆகிய வற்றில் தீவிரமாகக் கூட ஈடுபட்டிருந்தேன். நசிந்து போய் விடக் கூடிய நிலையில் இருந்த இந்த கைத்தொழில்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆர்வமிருந்தது.

சுதந்திரம் வந்ததும் நேரு நான் ஏதாவது அரசியல் பதவி ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தினார். நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன். பிறகு கைத்தொழில் குடிசைத் தொழில் ஆதரவுக்காக ஸ்தாபனத்தைத் துவங்கி அதைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். முன்பு வாழ்க்கைப் பாணியே கலை அழகோடு இருந்தது. இப்பொழுது ஜனங்களுக்குக் கலை உணர்ச்சியே போய்விட்டாற்போல் எனக்குத் தோன்றுகிறது.

பணம் இருப்பவர்கள் பணத்தை வாரி இறைத்துக் கலையை வாங்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள். அப்புறம் ஒரு முக்கியமான அபாயம் நுழைந்திருக்கிறது. எதை எடுத்தாலும் 'ethnic' என்று கொண்டாடும் மோகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியன் என்கிற உணர்ச்சி போய் நாகர்களின் கலைப் பொருள், தமிழ்நாட்டு அழகு என்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இது தேசத்தைத் துண்டு படுத்தத்தான் வழி.

"பெண்ணுரிமை இயக்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"அது ரொம்ப செயற்கையானது. அது வெறும் ஒரு பகட்டு வார்த்தை. நம் நாட்டில் அப்படிப்பட்ட இயக்கம் இருந்ததே இல்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ வேண்டும் என்கிற இயற்கை நியதிக்குப் புறம்பாக ஆண்களிடமிருந்து விலகியோ எதிர்த்தோ இயக்கம் செய்வதில் விவேகம் இல்லை.

இந்தியப் பெண் ஒரு காலத்தில் மிக உயர்ந்த பீடத்தில் இருந்தாள். இப்பொழுது அந்த நிலை இல்லையென்றால் சில சரித்திர காரணங்களால் அவளது சமூகம் அந்த நிலைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். உறுதியிருந்தால் இந்தியாவில் பெண் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம்..." என்றார்.

பேட்டி: வாஸந்தி

உணவில் "கொள்ளு" அடிக்கடிச் சேர்த்துக் கொண்டால் உடல் பருமன் குறையும். ரசமோ, துவையலோ செய்து சாப்பிடலாம்.

— ரம்யா.



கால் அல்லது கைகளில் எண்ணெயோ, கொதிக்கும் தண்ணீரோ கொட்டிவிட்டால், அந்தத் தழும்பு மறையத் தினமும் கடுகு எண்ணெய் தடவி வர இயற்கை நிறம் வந்துவிடும். காயம் பட்ட இடமே தெரியாது.

— ரஞ்சனி.

மாசிலா மேனி



மாசிலா மேனியெழில் பெற நீங்கள்
மனதில் முடிவெடுத்தால் போதும்.

தினமும் உங்களுக்கெனச் சிறிது நேரம்
ஒதுக்குங்கள். கூடவே கொஞ்சம்
லாக்டோ-காலமைனும் எடுத்துக்கொள்ளுங்கள்.

லாக்டோ-காலமைன் மாசுமறுக்களை
அகற்றுகிறது. உங்கள் மேனியை மென்மை
யாகவும் மாசற்றதாகவும் வைத்திருக்கிறது.

லாக்டோ-காலமைன். ஒப்பனைத் திரையிட்டு
மறைக்கவே விரும்பாத உன்னத எழிலைத் தருவது.

ஆம், எழிலான மேனியில் மறைக்க
எதுவுமே இல்லை!




லாக்டோ-காலமைன்

Sista's-DIL-13/84A Tam

வி. பரமசிவம், சிதம்பரம்.

எனக்கு வயது 20. எனக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக உடலில் ஒரு பாகம் மட்டுமே வியர்க்கிறது. மற்றொரு பாகம் வியர்க்கவில்லை. இந்த வியர்வை உடம்பைவிட முகத்தில் அதிகமாக (ஒரு பக்கமாக) இருக்கிறது. அதாவது முகம் தலை கழுத்து ஆகிய பகுதிகளில் பாதி முகம் மட்டும் அதிகமாக வியர்க்கிறது. இதை டாக்டரிடம் காண்பித்தேன். இது வியாதியே இல்லை என்று கூறுகின்றார். ஆனால் என் பிரச்னைக்கு என்ன வழி?

உங்களுடைய இடது பக்க வியர்வைச் சுரப்பிகள் அடைபட்டு இருக்கின்றன. அந்தப் பக்கம் வியர்வை வராததால், வலது பக்கம் வியர்வை அதிகமாக வருகிறது. ஒரு பாத்திரத்தில் சுடு நீரை வைத்து இடது பக்கம் முகத்தை அந்த ஆவியில் காட்டவும். 4 அல்லது 5 துளிகள் டிங்க்சர் பென்சாயினைக் (Tincture Benzoine) சுட வெந்நீரில் விடலாம். இந்த ஆவி முகத்தில் படும்போது அடைபட்ட சுரப்பிகள் அடைப்பு நீங்கி வேலை செய்யத் துவங்கும். இதன்பிறகு வியர்வை வெளிப்படும். நீங்கள் மனதையும் நிம்மதியாக வைத்துக் கொள்ளவும். உணர்ச்சி வசப்படுதலும் (emotional) ஒரு காரணமாகும்.



டாக்டர் பதில்கள்

வி. பைரவி, ராணிப்பேட்டை

நான் திருமணத்திற்கு முன் மெலிதாக இருந்தேன். பிரசவத்திற்குப் பின் வயிறு சுருங்கவில்லை. என்னால் முடிந்தவரை வேலை செய்கிறேன். டயட்டிலும் இருக்கிறேன். எனது இடுப்புச் சதையும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. ஆறு வருடங்களாகிவிட்டன.

உடற்பயிற்சி செய்வதைப் பற்றி எனக்கு நிறைய சந்தேகங்கள். உடற்பயிற்சி எப்போது வேண்டுமானாலும் செய்யலாமா? எவ்வளவு நேரம் செய்ய வேண்டும்? மத்தியானம் (2 to 3) செய்ய நேரம் இருப்பதால் அப்போது செய்யலாமா? உடற்பயிற்சி செய்ய ஆசையாகவும் ஆர்வமாகவும் உள்ளது. எத்தனை நாள் தொடர்ச்சியாக செய்ய வேண்டும்?

உடற்பயிற்சியைக் காலை வேளையில் (5 to 5½ A.M.) செய்வது நல்லது. படுத்துக் கொண்டு கால்களை நீட்டிக் கொண்டு, பிறகு இடுப்பை இரு கைகளாலும் பின்பக்கமாகத் தாங்கிக் கொண்டு கால்கள் இரண்டையும் முன்பக்கமாக மடக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது முழங்காலை மடக்கக் கூடாது. அல்லது ஒரு காலை மடக்கி வயிற்றை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு, தொடையால் வயிற்றை அமுக்க வேண்டும். பிறகு மெதுவாக நீட்ட வேண்டும். இதேமாதிரி அடுத்த காலையும் மடக்கி செய்ய வேண்டும். ஆகாரத்தில் கொழுப்புணவைத் தவிர்ப்பதும், எலுமிச்சைசாறுடன் தேன் கலந்து உண்பதும், முளைப் பயறு உண்பதும் பலன் தரும். இடுப்பை வளைத்து செய்யும் உடற்பயிற்சியால் இடுப்பு சதை குறையும்.

பாபு, வேலூர்

வயது 25. எனது இரத்தம் A நெகடிவ். இதனால் குழந்தை பிறப்பில் ஏதோ சிக்கல் உள்ளது என்று கூறுகிறார்கள். டாக்டரைப் பார்த்துக் கேட்க கூச்சமாக உள்ளது. எனக்குத் திருமணமானால் குழந்தை பிறக்குமா? A நெகடிவ்வினால் என்ன பிரச்னை என்பதையும், அதற்கு என்ன வழி என்பதனையும் விவரமாகத் தெரிவியுங்கள்.

நீங்கள் திருமணம் செய்து கொண்டால் RH – (negative) group உள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது நல்லது. பிரச்னையே வராது. அப்படி RH +ve Group உள்ள பெண்ணானால் கர்ப்பம் தரித்த உடனேயே மருத்துவமனையை அணுகி தடுப்பு இன்செக்ஷன் மூலம் குழந்தை நலமுடன் பிறக்க வழி செய்யலாம்.

எஸ். வெண்ணிலா, சென்னை—78.


எனக்கு வயது 23. மணமாகிவிட்டது. அக்குளில் அதிகமாக வியர்க்கிறது. ஜாக்கெட் கைப்புறம் முழுவதும் நனைந்து விடுகிறது. பொது இடங்களில் எனக்கு வியர்க்கும்போது கூச்சமாக இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த அல்லது நிறுத்த ஒரு வழி கூறுங்கள்.

நீங்கள் மன அதிர்ச்சி அடையாமல் இருந்தால் அதிகம் வியர்க்காது. பயம் முக்கியக் காரணம். Axillary hair removal, அப்பகுதியைச் சுத்தமாக வைத்தல், வெயில் காலத்தில் இருவேளையும் குளித்தல், ரவிக்கை மாற்றுதல் முதலியவை செய்தால் வியர்வை பெருகுவது குறையும்.

தொகுப்பு: சுபா பாரதி

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி


'அபயோகம்' விமலா




ஒரு நாள்—
ஆ! இது என்ன அபச்சாரம்?
எதிர்பாராத அக்காட்சியால் உள்ளம் அதிர்ந்தது பெரியாழ்வாருக்கு.
பேதைப் பெண்ணே! தெய்வத்துக்காகத் தொடுத்த மாலையை மானிடர் அணியலாமா? சிறு பிள்ளைத் தனமான உன் செய்கையால் என் சேவையைக் களங்கப்படுத்திவிட்டாயே! தெய்வக்குற்றம் நேர்ந்துவிட்டதே!
பக்தியில் ஊறிய உள்ளம் பதறித் துடித்தது.
மறுநாள் புதிதாக மலர் பறித்துத் தொடுத்த மாலையினை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று பெருமானுக்கு அணிவித்தார்.
நான் காண்பது நிஜம் தானா? என்ன இது சோதனை?
அரங்கனின் மார்பில் பட்டதும் மாலைகள் கசங்கி உலர்ந்தவை போன்று தோற்றமளித்தன. அடுத்தடுத்த நாட்களிலும் அப்படியே!
கோதை செய்த குற்றத்தால்தான் தன் சேவையை ஆண்டவன் மறுக்கிறான் என எண்ணி உருகிக் கலங்கினார் பெரியாழ்வார். அன்று துக்கத்தில் தோய்ந்து அவர் தூக்கத்தில் ஆழ்ந்த போது...
பக்தனே! கலங்க வேண்டாம். கோதை சூடிக்கொடுத்த மாலைகளை அணிவதில் தான் நான் மிகவும் அக மகிழ்கிறேன். இனி உன் மகள் சூடிய மாலைகளை எனக்கு அளிப்பாயாக!


கனவில் கிடைத்த கட்டளையின்
படியே பெரியாழ்வார் மறுநாள்
கோதை சூடிக் கொடுத்த மாலைகளை
அரங்கனுக்கு அணிவித்தார்.
ஆஹா! இன்றும் மாலைகள் வாடவில்லை! முன்னைவிடப் புத்தொளி வீசுகின்றன!
மகளிடம் இறைவன் காட்டிய
கருணைக்காக மகிழ்ந்தார்.
ஆனால், 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'
அரங்கநாதப் பெருமானையே
மணப்பேன் என்று சொன்னதுதான்
பெரியாழ்வாருக்குப் பேரதிர்ச்சி
தருவதாக இருந்தது.
மகளே! உனக்கென்ன பித்தம் பிடித்து விட்டதா?
இல்லை அப்பா! அரங்கன் எனும் அமுதனிடமே என் சித்தம் நிலைத்து விட்டது.
ஸ்ரீரங்கநாதர் தன்னைக் கைப்பிடிப்பதாய்
வாக்களிப்பதாகவும், அதன்படி தனக்கு மாலை
யிட்டு மணந்து கொள்வதாகவும் கனவுகள்
கண்டு, அவற்றைத் தோழியர்க்குக் கவிதை
களால் உரைத்தாள் கோதை.
“மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தர் கீழ், மைத்துனன் நம்பி மது சூதனன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்...”
கனவு நனவாகும் என்பதில் அவள் அசைக்க
முடியாத நம்பிக்கை கொண்டிருந்தாள்.

நம்பிய கோதையை நாயகன் கைவிடவில்லை. பெரியாழ்வாரைக் கொண்டு அவருடைய மகளை மணக்கோலத்துடன் திருவரங்கத்தின் ஆலயத்திற்கு அழைத்து வரச் செய்தார். கோதை அரங்கநாதப் பெருமானிடம் சென்று அவருடைய திருமார்போடு ஐக்கியமானாள்.




கோதை அற்புதமாகத் தமிழை ஆண்டாள். அரங்கநாதரின் மனத்தையே ஆண்டதாலும் ஆண்டாள் ஆனாள். இறைவனை யாவரும் எண்ணிய மணாளனைச் சேரும் புண்ணியம் பெற்றாள்.



ஆடிப் பூரத் திருநாளில் மகாலட்சுமி அம்சமாகிய ஸ்ரீ ஆண்டாளை வழிபட்டால், கன்னிப் பெண்களுக்கு மனம் போல மாங்கல்யம் அமைய ஸ்ரீ ரங்கநாதப் பெருமானுடைய அருள் துணையிருக்கும்.


நெஸ்டம் பேபி ஸிரியல்.
ஆரம்பத்திற்கு பொருத்தமானது.
வளர்ச்சிக்கு உன்னதமானது.
நெஸ்டமும் பாலும்—முழுமையான போஷாக்கு உணவு.
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதங்களாகும்போது அவனுக்கு பாலுடன் திட உணவும் தேவை. அவனுடைய ஜீரணத்திற்கு உகந்த நெஸ்டம் கொடுங்கள்.
நெஸ்டத்தை கொதிக்க வைத்த வெது வெதுப்பான பாலில் கலக்குங்கள் முழுமையான போஷாக்கு உணவு தயார். இது குழந்தை ஆரோக்கியமாக தழுதழுவென்று வளர உதவுகிறது.
நெஸ்டம் குழந்தை உணவு பலவித சுவைகளில்
உங்கள் குழந்தை வளர வளர அவனுக்கு புதிய சுவைகளை அறிமுகப் படுத்துங்கள். உதாரணமாக, மசிய வைத்த காய்கறிகள், வேக வைத்த பழங்கள் மற்றும் பருப்பு வகைகள் முதலியன. இது அவன் விரைவில் பெரியவர்களுடன் உணவை பகிர்ந்துகொள்ள உதவும்.
நெஸ்டம்®
ரைஸ்
இரும்புச்சத்து மற்றும் வைட்டமின்கள் அடங்கியது. பாலுடன் கலக்கவும்.
Nestlé
Nestum
baby cereal
Rice
Nestlé
Nestum
baby cereal
Rice
Mix with milk

காஞ்சிபுரம் 'பட்டுப்புடவையை' கண்டுபிடிப்பது எப்படி?



பெண்களுக்குத் திகட்டாத காட்சி எது? புடைவைக் கடையும், நகைக் கடையும் தான். ஆகா, இன்னும் கூடப் பழைய பஞ்சாங்கம்தானு? பெண்களை இப்படி எழுதலாமா?' எனக் கோபப்படலாம். எத்தனை தான் விஞ்ஞான யுகத்தில் பெண்கள் முன்னேறினலும், பெண்களுக்கு இந்த ஆசைகள் போவதில்லை. உலகத் தலைவியாக விளங்கிய திருமதி இந்திராகாந்தி அம்மையார் உடைகளிலே எத்தனை ஆர்வம் செலுத்தினர் என்பதுதான் நமக்குத் தெரியுமே!

சரி, எதற்கு இந்தக் கதையெல்லாம் என்கிறீர்களா?

'பட்டுப் புடைவை என்றலே காஞ்சீபுரம் பட்டுப் புடைவைதான் என்பார்கள். ஆனல் ஒரே மாதிரி இருக்கும் புடைவைகளில் கூட விலை வித்தியாசம் இருப்பதுண்டு. பெண்கள் காஞ்சீபுரம் என நினைத்து ஏமாறுவதுமுண்டு. நல்ல பட்டுப் புடைவைகளை எப்படித் தேர்ந்தெடுக்கலாம்?

''இந்தத் துறையிலேயே மிகத் தேர்ந்தவர்கள் கூட இதிலே கொஞ்சம் ஏமாந்து போய் விடுவதுண்டு'' என்கிறர் காஞ்சிபுரத்துக்காரர்

இதற்குப் பட்டுப்புடைவை தயாரிப்பின் சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வடநாட்டிலிருந்துதான் பட்டுநூல், சரிகை இரண்டுமே நமக்கு வருகிறது. கொள்ளேகால் போன்ற இடங்களில் இருந்து பட்டுநூலும், சூரத்திலிருந்து சரிகையும் வருகிறது. இப்போதுதான் கர்நாடகாவில் இருந்து பட்டுப்புழுக்களை வாங்கும் முறை வந்திருக்கிறது.

'கக்கூன்' எனப்படும் கூடுகட்டிக் கொண்டுள்ள கூட்டுப் புழுக்களை வாங்குகிறர்கள். அதை வெந்நீரில் போட்டுக் கொதிக்க வைத்து மீண்டும் தண்ணீரில் அலசும் போது முதல் பட்டுநூல் இழை கிடைக்கிறது. அதை மிஷின்கள் மூலமாக நூல்கண்டாக ஆக்கி ராட்டை மூலம் சுற்றித் தறிக்குக் கொண்டு வருகிறர்கள்.

(ஒரு கக்கூனை உடைத்துப் பார்த்த போது ஒரு பெரிய புழு உள்ளேயே சமாதியாகி இருந்தது. இப்போது நினைத்தாலும் கஷ்டமாக இருக்கிறது.)

அதே போல மூன்று முதல் எட்டு வரை ஒன்ருக முறுக்கி ஒரே இழையாக ஆக்கித் தான் புடைவையாக நெய்கிறர்கள்.

அசல் சரிகையெனக் கண்டுபிடிப்பது எப்படி?


ஜரிகையில் உசத்தி ஜரிகை 'நெப்போலியன் ஜரிகை' தானும். நீங்கள் கூட தைரியமாகக் கடைகளில் கேட்கலாம், இது 'நெப்போலியன் ஜரிகைதானு?' என்று.

அந்த ஜரிகையை ஒரு சிலேட்டில் தேய்த்தால் வெள்ளி மினுக்கும். அதுதான் உண்மையான சரிகை. இன்னும் தேய்த்தால் உள்ளே சிவப்புப் பட்டுநூல் இருக்கும். சிவப்புப் பட்டுநூலில் வெள்ளி முலாம் பூசிப் பிறகு தங்க முலாம் பூசுகிறர்கள்.


உண்மையான காஞ்சிபுரம் பட்டுதானு என எப்படிக் கண்டுபிடிப்பது?

காஞ்சிபுரத்தில் நெய்வது எல்லாமே காஞ்சிபுரம் பட்டுதானே? எனலாம். ஆனலும் காஞ்சிபுரம் பட்டு அதனுடைய செய் நேர்த்திக்கும் தரத்திற்குமே புகழ் பெற்றது. அதற்காகத்தான் நாம் விலையையும் கொடுக்கிறேம். ஆனல் சில சமயங்களில் விலையையும் கொடுத்துவிட்டு வேறு பட்டையும் வாங்கி வந்துவிடுகிறேம். எப்படித் தெரிந்து கொள்வது?

'''பெட்னி' யில் இருக்கிறது விவகாரம். புடைவை நெய்து முடிந்தவுடன் பார்டரை புடைவையுடன் இணைப்பார்கள். இந்த பார்டரையும், புடைவையையும் இணைத்து நெய்வோம். இரண்டும் சேரும் இடத்தில் இரண்டு விரற்கிடை அகலம் நெய்வதைத்தான்



● 'கக்கூன்'



'பெட்னி' என்போம். அந்த இடத்தில் பார்டரின் பக்கம் புடைவையின் கலர் நூலிழைகள் இருக்கும். புடைவையின் பக்கத்தில் பார்டரின் கலர் நூலிழைகள் இருக்கும். இரண்டு கலரும் கலந்து வரக் கூடாது. இதைத்தான் 'பெட்னி ஏற்றுதல்' என்று பெயர். இதுதான் காஞ்சிபுரம் பட்டுப் புடைவையின் சிறப்பு.''

என்கிறார் இங்கே பல்லாண்டுகளாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் திருவேங்கடம், அமராவதி தம்பதியினர்.

''புடைவை நெய்யும்போது தனி மனிதனுகை நெய்வதில்லை. நிச்சயம் மனைவியின் உதவி அவனுக்குத் தேவை. மனைவி ஊடு பாவு போட கணவன் நெய்ய வேண்டும். நீங்கள் பார்த்தீர்களானுல் வீட்டில்தான் தறி போட்டிருப்பார்கள். தம்பதிகளாகத்தான் வேலை பார்ப்பார்கள்...''

என்கிருர் சமூகநலத்துறை அதிகாரி திருமதி ராஜம்மா.

''கல்யாணத்துக்குக் காஞ்சிபுரத்துக்குப் போய்ப் பட்டுப் புடைவை வாங்கப் போறேன்னு சொன்னு அதைப் பெருமைக்குரிய விஷயமா நினைச்சுகிட்டு இருக்காங்க! அவங்கவங்க ஊரிலேயே வாங்கலாம். வந்து போற செலவெல்லாம் என்ன ஆச்சு? இன்னொரு ரகசியம் இங்கே புடைவையிலே போட்டிருக்கிற விலைகளெல்லாம் பேரம் செய்யக் கூடியவைதான்!'' என்கிருர் பெயர் சொல்ல விரும்பாத ஒரு காஞ்சிபுரத்து ஆசாமி.

காஞ்சிபுரத்தில் கற்பகம் & கோ எனும் கடையை வைத்திருக்கும் ஷண்முகத்திடம்

பட்டுப் புடைவைகளிலேயே விலை உயர்ந்தது திரிபுவனம் பட்டு என்கிருர்களே, அப்படி என்ன அதன் சிறப்பம்சம்? 'திரிபுவனம் பட்டுப் புடைவை கூட்டுறவு சங்கத்'தின் சென்னைக் கிளையாக பாண்டிபஜாரில் கடை வைத்திருக்கும் திருமதி பிரேமாவைக் கேட்டபோது —

''திருபுவனம் பட்டு விலை ஜாஸ்தின்னு சொல்றது தப்பு. பொருளுக்கேத்த விலைங்கற முறையிலேதான் எடுத்துக்கணும். இந்தப் புடைவையை எடுத்துப் பாருங்க, என்ன கனம்...! ஆனுல் புடைவையைத் தடவிப் பார்த்தீங்கன்னு, வேறு பட்டுப் புடைவைகள்ல கிடைக்காத வழவழப்பு... பாலியஸ்டர் மாதிரி ஒரு நேர்த்தியான வழவழப்பு இருக்கும்... மற்றப் பட்டுப் புடைவைகள்ல இருப்பது போல ஒரு சொர சொரப்பு இருக்காது...

''அதுக்கு என்ன காரணம்...?''

''மூணிழை, இரண்டிழைல புடைவையை நெய்யறோம். எட்டிழை போட்டு ஓரடி நெய்யற இடத்துல, ரெண்டிழை நெய்யும் போது, கூட 'டைம்' எடுக்கும். ரொம்ப நுணுக்கமாகவும் பார்க்கணும். ஆனு இழை நெருக்கமாக ஆகும் போது இந்த ஒரு வழவழப்பு கிடைக்கறது...''

''நீங்க கூட நெப்போலியன் சரிகைதான் உபயோகப்படுத்தறீங்களா?''



'புடைவை விற்பதிலே ஏதேனும் சீசன்போல் உண்டா?' எனக் கேட்டோம்.

''இங்கே வருஷம் முழுக்க சீசன்தான். எல்லாக் கடைக்கும் எல்லா நாட்களிலும் வியாபாரம் உண்டு'' என்றார்.

'காஞ்சிபுரம் பட்டுப் புடைவைக்கும், மற்றப் பட்டுப் புடைவைகளுக்கும் என்ன வித்தியாசம்?''



• கணவனும் மனைவியுமாக......

''நூலின் தரம், சரிகையின் சிறப்பு, எடை, நெய்யும் திறன் இதெல்லாம் சிறப்பாகக் காஞ்சிபுரம் புடைவைகளுக்கு உண்டு. மூன்று இழைகளுக்குமேல் போடும்போது நீண்ட நாட்களுக்குப் புடைவைகள் உழைக்கின்றன.

''ஆனா என்னன்னா, கச்சாப் பொருட்கள் ரெண்டுமே வெளியிலிருந்துதான் வரவேண்டியதா இருக்கு. அதனாலே பிறர் கையை எதிர் பார்க்க வேண்டியதாய்ப் போகிறது. அதே போலப் புடைவை நெய்பவர்களுக்கு நாம் நூலாகவும், சரிகையாகவும் கொடுக்கிறோம். நாணயமான தறிக்காரர்கள் அதையே நெய்து கொடுக்கிறார்கள். சில பேர் அதை வித்துட்டு ஒரு இழை சரிகைக்கு ஒரு போலி சரிகை வச்சு கூட நெய்துடுவாங்க...''

''இதை நீங்க கண்டுபிடிக்க முடியாதா?''


''கொஞ்சம் கஷ்டம்தான். ரொம்பப் பரிசோதனை செய்தால் தவிர தெரிய வராது. அதனாலே 'எங்களுடைய வேலை கொஞ்சம் ரிஸ்க்கானதுதான். இங்கேயே சரிகையை உற்பத்தி பண்றதுக்கான ஏற்பாடெல்லாம் கூட நடந்தது. ஆனால் பல காரணங்களால அது நின்னுப் போச்சு.'

அதே போலக் காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள் இத்தனை பிரபலமானதே தவிர ஏற்றுமதியாகலே. சமீபத்திலே அதைப் பத்தி அமைச்சர் கூடப் பேசினாரு.

''கச்சாப் பொருளும் இங்கேயே உற்பத்தி



• வீரப்பன்



• சண்முகம்

''ஆமா. ஆனா ஒரு சாதாரண பட்டுப் புடைவையின் சரிகையையும், திரிபுவனம் பட்டுப் புடைவையின் சரிகையையும் வச்சு ஒப்பிட்டுப் பாருங்க. எங்களோடது அடர்த்தியா இருக்கறதோட 'பளிச்'சுன்னும் இருக்கும்'' என்கிறார்.

இந்தப் புடைவையின் இன்னொரு விசேஷம் அங்கவஸ்திரம் மடிப்பது போல மடித்து வைத்திருப்பார்கள். அதனால் அலமாரித் தட்டுக்களில் உள்ளதை இங்கிருந்தே பார்த்து எடுக்க முடியாது. பிரித்தால்தான் அதன் வண்ணமும், டிசைனும் தெரியும். இதற்கு 'தறி மடிப்பு' என்று பெயராம்.

''இந்த மடிப்பினாலே இதைப் பிரிக்கறது ரொம்ப ஈஸி. பார்க்கறவங்களும் முழுப் புடைவையைப் பார்த்துடலாம். கூட்டமான நேரத்துல யாரும் புடைவையை எடுக்க முடியாது. ஏன்னா ஒரு நுனி எங்ககிட்ட இருக்கும்!'' என்கிறார் கடைச் சிப்பந்தி.

செய்யப்பட்டு, புடைவைகள் ஏற்றுமதியாகிற அளவுக்கு வியாபாரம் பெருகிச்சுன்னு நம்ப பெருமை உலகம் முழுவதும் பரவும். இது ஒருத்தர்-ரெண்டு பேர் செய்யற விஷயமில்லே. எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய விஷயம்...''

என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

பட்டுப் புடைவைகளில் புதிய முயற்சிகள்:

பட்டுப் புடைவைகளில் டிசைன்கள் போடுவதற்கு, வண்ணங்களின் புதிய சேர்க்கைக்கென்றே பரிசோதனைகள் செய்ய ஒரு மையமே இருக்கிறது காஞ்சிபுரத்தில். மத்திய அரசின் கீழ் 'நெசவாளர் சேவா நிலையம்' என்ற பெயரில் அமைந்துள்ளது. இதன் டெபுடி டைரக்டர் வீரப்பன் புடைவைகளில் புதிய டிசைன்களை உருவாக்குவதில் வல்லவர்.

''பட்டுப் புடைவைகள்ல பல பரிசோதனைகள் செய்யறோம் நாங்க. ஒரே புடைவையில் ஆயிரத்து நூறு டிசைன் போடறோம். சரிகையாலேயே நெய்யறோம். வெளிநாடுகளில் கண்காட்சிகளில் எல்லாம் இதை வைக்கிறோம்.

அதே போலத் திரும்பத் திரும்பச் சில வகையான பார்டர்கள், கலர் காம்பினேஷன் என்று அலுத்துப் போய்விடுகிறது. நாங்கள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கிறோம்.

சில பிரபலமான பெண்மணிகள் புதுப் புது டிசைன்களைக் கேட்கிறார்கள். (நான் முன்னுரையில் சொன்னது சரிதானே!) திருமதி இந்திராகாந்தி, பாடில் ஜெய்கர், போன்றவர்களுக்குப் புதிய டிசைன்களை உருவாக்கித் தந்திருக்கிறோம்....''

''சாதாரணப் பெண்மணிகள் கேட்டால் கூடத் தருவீர்களா...?''

''நிச்சயமாக. புதிய வகையில் தங்களுடைய பட்டுப்புடைவைகள் இருக்கவேண்டும் என நினைப்பவர்கள் எங்களிடம் வரலாம். எங்களிடம் உள்ள புதுமையான டிசைன்களைக் காட்டுகிறோம். பிடித்ததை எடுத்துக் கொண்டு போய்த் தறியாளரிடம் கொடுத்தால் அவர் நெய்து கொடுத்து விடுவார்...'' என்கிறார்.

— மஞ்சுளா ரமேஷ்

அட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: யோகா

அட்டையில்: வந்தனா சோக்ஷி
ஆரத்தி நடராஜன்


மங்கையர்
எண்ணம்போல்
சேலைகள்
தேர்ந்தெடுக்க
நடராஜா
ஸ்டோர்
92-அம்மன்சன்னதி
மதுரை-1
போன் : 22408
கைராசியான கல்யாணப் பட்டுக்கு
நடராஜா ஸ்டோர்
Market Maker

Kwality

KNITTED TOWELS AND BATHROBES



Available in various sizes, Made from the finest yarn for softness and strength to last long.




AVAILABLE AT ALL LEADING STORES



KWALITY TEXTILES
Post Box No.27
Udumalpet Road
Pollachi 642 003
Phone : 4033, 4034

SASI/KT/II/87

Kwality – Shades of Softness



மனோதத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி 10 — 20 சதவீதம் குழந்தைகள் பிறக்கும் பொழுதே கூச்ச சுபாவம் கொண்டவையாக இருக்கின்றன. தாத்தா ஆசையாக விளையாட்டுக் காட்டினால் அழுது கொண்டு ஓடும் குழந்தைகள், நர்சரிப் பள்ளியில் சேர வேண்டிய சமயத்தில் அம்மாவின் முந்தானையில் ஒளிந்து கொள்ளும் குழந்தைகளை எப்படிச் சமாளிப்பது?

1. மற்றவர்கள் முன் உங்கள் குழந்தைகளை 'என் பையனுக்குக் கூச்சம் ரொம்ப அதிகம். 'புதுமுகம் கண்டால் அட்டையாய் ஒட்டிக்குவான்' என்று முத்திரை குத்தாதீர்கள். அல்லது மற்றவர்கள் 'ரொம்ப வெட்கப்படறான்' என்று சொல்லவிடாதீர்கள். புதியவர்கள் முன்பு குழந்தை தானாகத் தன் கூச்சத்தையும், பயத்தையும் அகற்றி சகஜமாக மாறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

2. கூட்டங்களில் அல்லது உறவினர் திருமணங்களில் குழந்தையை வலுக்கட்டாயமாகப் பேசத் தள்ளி விடாதீர்கள். சில சமயங்களில் குழந்தை தன் கூச்ச சுபாவத்தை விட்டுப் பேச முன் வந்தால் பாராட்ட வேண்டும். கலகலப்பின்றி மௌனமாக இருந்தால் அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. இரண்டு குழந்தைகள் உள்ள வீட்டில் சிறிய குழந்தை நல்ல கம்பெனி கொடுத்தால் நல்ல பலன் இருக்கும்.

4. குழந்தைகள் பேசும்பொழுது ஆர்வத்துடன் கவனிக்கத் தெரிய வேண்டும். கலந்துரையாடும் பழக்கத்தை வீட்-

கூச்ச சுபாவமுள்ள குழந்தையை மாற்றுவது எப்படி?

டிலே ஆரம்பிக்க வேண்டும். 'கேட்டதற்குப் பதில் சொல்' என்று கட்டளையிடும் பொழுது குழந்தை உரையாடும் சந்தர்ப்பங்கள் குறைந்து விடுகிறது.

5. கேலிசெய்யும்பழக்கம்குழந்தைகளைப் பாதிக்கும். பெரியவர்கள் ஆன பின்னல் சிலர் கூச்சம், பயத்துடன் இருக்கக் காரணம் சிறு வயதில் தான் கேலிக்கு உள்ளான சம்பவங்கள் தான். இரண்டாவது குழந்தை மூத்த குழந்தையைக்கேலிக்கு உள்ளாக்கும் சந்தர்ப்பங்களைக் கண்டு மாற்றிக் கொள்கிறது. அதனால் கூச்ச சுபாவத்தைக் கண்டு கேலி செய்தால் இளம் நெஞ்சங்களில் அது அகலுவது கிடையாது.

6. எப்பொழுதும் குழந்தையின் நடை, உடை பாவனைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால் அதுவே கூச்ச, பயந்த சுபாவத்தைக் கொண்டு வரும்.

''நடக்கிறதைப் பாரு.''

''நீ இருக்கிற கறுப்புக்கு இப்படி வேறே ட்ரஸ் போட்டுக்கோ.''

''உனக்கு ஏன் நாக்கு குழறுது?''

''ம். நல்லா திக்கித் திக்கிப் பேசு.''

இதெல்லாம் மனத்தில் பதிந்தால் பேச, நடக்க, நல்ல ட்ரெஸ் போட்டுக் கொள்ளப் பயந்து நாலு பேர் முன்னல் கூச்ச சுபாவம் வராமல் என்ன செய்யும்?

7. தைரியமாகப் போனில் பதில் சொல்ல, யாராவது பெற்றோர்கள், வெளியே போயிருக்கும் விவரத்தைக் கேட்டால் சொல்ல, சின்னச் சின்ன மீட்டிங்கில் நாலு வார்த்தைகள் பேசத் தயார் செய்ய வேண்டும்.

8. ஹோட்டலில் அல்லது கடைகளில் உங்கள் குழந்தைகளை அனுப்பி விவரம் கேட்கச் சொல்லுங்கள். ஹோட்டலுக்குப் போகும் பொழுது அருகில் இருந்து உங்கள் குழந்தையைப் பேச வைக்கவும். குழந்தைகள் பணிவாகவும், பொறுமையாகவும் கேட்கும் பொழுது கூச்ச, பயந்த சுபாவம் போய் விடும்.

9. அடிக்கடி ஸ்கூலை மாற்றும் பொழுது புதிய பள்ளிக்குஏற்பத்தன்னைமாற்றிக் கொள்ள முடியாமல் சில குழந்தைகளுக்குக் கூச்ச சுபாவம் வரலாம்.

பத்து வயதிலிருந்து 14 வயது வரை வரும் கூச்ச உணர்வு வேறு வகையானது; தற்காலிகமானது. விடலைப் பருவத்தின் உணர்வு.

— பூங்கோதை குருதாஸ்

இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் மெத்தை. **Kurl-on**

கண்டெடுத்தது தன் துணைக்காக **Kurlopillo**



இப்பொழுது நீங்கள் வெற்றிச் சூழலில் போட்டியிடலாம். இரவின் நிகரற்ற வசதிக்காக.

KURLOPILLO தரமான சுகம் தரும் தலையணை. தூங்கும் பொழுது தலைக்கும், கழுத்திற்கும் சிறந்த சுகத்தை தருகிறது.

இரண்டு துணைப்படைப்புகளுடன் தயாரிக்கப்பட்ட KURLOPILLO நிம்மதியான நித்திரை செய்பவர்களுக்கு தேவை. கல்யாண தலையணை சிறந்த சுகத்தை நாடுபவர்களுக்காக தயாரிக்கப்பட்டது. டிரீம்லைனர் தலையணை ஆதார காதலர்களுக்காக தயாரிக்கப்பட்டது. KURLOPILLO மக்களின் வசதிக்காக KURL-ON தொழில் நுட்ப வல்லுனர்களால் தயாரிக்கப்பட்டது.


Kurlopillo & Kurl-on®

மொத்தத்தில், இரவில் சிறந்த முறையில் ஓய்வு எடுப்பதிற்காகவே தயாரானவை.

கர்னாடகா கன்ஸூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
மார்க்கெட்டிங் பிரிவு
முதல் மாடி, 83, லெங்காள் [illegible] ரோடு, பெங்களூர்-560 027 போன்:-224676

எல்லா கர்லான் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஏரியா அலுவலகம்:- சென்னை போன்:-810710; [illegible] (P.O) [illegible]-26



புக் ஷெல்ஃப்

காசி யாத்திரை

ஆறு புண்ணிய க்ஷேத்திரங்களின் மகிமைகளை ஸ்தோத்திரங்கள் போன்றவற்றுடன் கூறியுள்ளார் ஆசிரியர் ரா. விழிநாதன். விலை ரூ. 25.00

(பாரத்வாஜ பப்ளிகேஷன்ஸ், B5/270, ஹனுமான் கட், வாரணாசி – 221001 உ. பி.)

கரை சேராத ஓடங்கள்

வாஸந்தியின் குறுநாவல்களின் தொகுப்பு. விலை ரூ. 13.50

(இமயப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் – 611 001).

செல்வம் சேர்ந்தது எப்படி?

திருமுருக கிருபானந்த வாரியாரின் கதைகள். விலை ரூ. 11.00

(குமரிப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் – 611 001).

கம்பராமாயணக் களஞ்சியம்

புலவர் கீரனின் சொற்பொழிவுகளின் தொகுப்பு. விலை ரூ. 45/–

(அல்லி நிலையம், 14, நான்காம் குறுக்குத் தெரு, யுனைடெட் இந்தியா காலனி, சென்னை – 600 024.)

ரங்கோலிக் கோலங்கள் போடுவது எப்படி?

பாகம் – 1, ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 10.00

வீட்டுப் பராமரிப்பும் வீட்டுப் பிரச்னை சமாளிப்பும்

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 5.75

மலையாளச் சமையல்

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 6.50

வீட்டு விஷயங்கள்

வீட்டிற்கான ஏராளமான யோசனைகள், ஆசிரியர் தமிழ்வாணன். விலை ரூ. 4.25

சலவைக் கலையும் கறை நீக்கும் முறைகளும்

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 4.00

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் – மணிமேகலைப் பிரசுரம், த., பெ. எண்: 1447, 4, தணிகாசலம் செட்டி ரோடு, தி. நகர், சென்னை – 17.)

பொன் மழை

கனகதாரா ஸ்தோத்திரத்தைத் தமிழில் கவிதையாக மொழி பெயர்த்தவர் கவிஞர் கண்ணதாசன். விலை ரூ. 3.50

சுதந்திர பூமியில் வெள்ளை நாரைகள்

முதல் பாகம். ராணி வேலு நாச்சியார், மருது சகோதரர்களைப் பற்றிய சரித்திர நாவல். ஆசிரியர்: கோவி. மணிசேகரன். விலை ரூ. 32.00

ஆன்றோர் அருள்மொழி

வாழ்க்கை வழிகாட்டி நூல். ஆசிரியர்: க. க. இராமலிங்கம். விலை ரூ. 7.00

கண்ணன் காட்டிய வழி

கீதையின் விளக்கம் தருபவர் இராஜாஜி. விலை ரூ. 10.00

மறைந்திருக்கும் மனித ஆற்றல்

ஆசிரியர்: பி. சி. கணேசன் விலை ரூ. 11.00

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர்: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17.)

சிந்தனைக்குச் சில கதைகள்

ஆசிரியர்: பகவானந்த தாசன் விலை ரூ. 14.00

(முத்துப் பதிப்பகம், 269, கிழக்குப் புதுவைச் சாலை, விழுப்புரம்.)

எளிய நடையில் கந்தபுராணம்

ஆசிரியர்: பிறைசூடுத்தொண்டன். விலை ரூ. 25.00

பிளாஸ்டிக் தொழில்கள்

ஆசிரியர்: வி. எஸ். வெங்கடேசன், விலை ரூ. 6.00

(இரண்டுபுத்தகங்களின் பதிப்பாளர் முருகன் பதிப்பகம், 21, சிங்கார முதலித் தெரு, கரையான் சாவடி, D.R.R. நகர், சென்னை – 56.

மாமிசச் சமையல்

ஆசிரியர்: ரேவதி விலை ரூ. 4.25

செவ்வாய் தோஷமும், திருமணப் பொருத்தமும்

ஆசிரியர்: முருகு ராஜேந்திரன். விலை ரூ. 3.00

(இரண்டு புத்தகங்களின் பதிப்பாளர் – பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை – 17.)

ஆங்கில அகராதி அரசன் ஜான்சன்

ஜான்சனின் வாழ்க்கை ஆசிரியர்: மெர்வின். விலை ரூ. 6.00

(பூங்காற்றுப் பதிப்பகம், 4, சபாபதி தெரு, குரோம்பேட்டை, சென்னை – 44.)

ஜீவநதிகள்

3

"பாட்டி! பாவம் அப்பா! அம்மா இன்னிக்குக் கார்த்தாலே அப்படி இட்லி தட்டை எடுத்துட்டு, ரொட்டிய வச்சாளே, அது எவ்வளவு எம்பராஸிங்கா இருந்தது. மூடே ஸ்பாயில் ஆயிடுத்துப் பாட்டி. நீ ஏன் உம் பொண்ணை அதட்டிச் சொல்லியிருக்கக் கூடாது. பேசாமயே இருந்துட்டியே. சே, பாவம் அப்பா..."

வனஜா படபடவென்று கூறவும், கிரிஜா ஆரம்பித்தாள். "நானுன்னு தட்டைத் தூக்கி எறிஞ்சுட்டு, சரிதான் போ, இந்த வறட்டு ரொட்டியை நீயே தின்னுன்னு சொல்லிட்டு, செருப்பை மாட்டிண்டு ஹோட்டலுக்குப் போய் டிபன் வெட்டியிருப்பேன். இந்த அப்பாவானு, வாய் மூடிண்டு சாப்பிடறாரே. ஆனாலும் பாவம்தான் அப்பா இல்லேடி ஜலஜா!"

"ம்... பாவம்...."

அதற்குமேல் ஜலஜா பேசவில்லை. நீருவுக்கும், பிரபுவுக்கும் ஆத்திரமான ஆத்திரம். பாட்டியிடம் காச்சு, மூச்சென்று கத்தினார்கள். பாட்டி, அம்மாவை அடக்கவில்லை என்று கத்தினார்கள்.

"ஆமாண்டா பிரபு! பாரதியை நான் ரொம்பவும் செல்லமாத்தான் வளர்த்துட்டேன். நீங்கள்லாம் சொல்ற மாதிரி அவளை அதட்டி, உருட்டி வளர்க்கலேதான். என் வாழ்க்கையோட மொத்த உருவமும் அவ தான்னு இருக்கறப்போ, அவளைச் சீராட்டி, பாராட்டித்தான் வளர்க்கத் தெரிஞ்சுதே தவிர, கோவிச்சுக்க மனசே வராம ஒரு தயக்கமாவே இருந்துட்டேன்.

உங்க அப்பனாவது அவளைத் தன்னோட ஆதிக்கத்துல வைச்சுண்டிருந்திருக்கலாம். ஆனா உங்கப்பாவும் அவளோட இஷ்டத்துக்கே நடக்க ஆரம்பிச்சுட்டதுனாலே அவளுக்கு சௌகர்யமாய்ப் போச்சு. என் மனசோட ஆசைகளையெல்லாம் அவளை வைச்சுத்தான் தீத்துண்டேன் நீரு. துளிர் விடறச்சேயே பட்டுப் போன என்னோட வாழ்க்கையிலே இவதான் எல்லாம்னு அப்புறம் அவளைத் திட்டி வளர்க்காம, தட்டி வளர்த்தது, சில சமயம் அவ நடந்துக்கற விதத்திலேந்து தப்புன்னு தெரிஞ்சாலும், அதைத் தவிர்க்க முடியாதவளாத்தான் ஆயிட்டேன் வனஜா. அதுக்காகத்தான் உங்களைச் சரியா வளர்க்கணும்கிற எண்ணம் வெறியாவே மாறிடுத்து. அஞ்சுல வளையாதது அம்பதுலே வளையுமா? போறது போங்கோ. அப்பா கிட்டே அன்பா இருங்கோ. அம்மாவையும் எதுத்துக்காதேங்கோ. அவ, உங்கப்பாகிட்டே வைச்சிருக்கிற அதீதமான அன்புதாண்டா இப்படியெல்லாம் நடக்க வைக்கிறது பிரபு. என்னோட் தப்புதான். என்ன செய்யறது சொல்லுங்கோ..."

பாட்டியின் நீண்ட பேச்சு, மனத்தின் உண்மையான வேதனைகளைக்கூறும்விதத்தில் நெகிழ்ந்திருந்தது குரல். அவள் தங்களை எவ்வளவு நேசித்தால், தங்களுக்குச் சரிசமமாக நினைத்து, அவர்களிடம் மனத்தைத் திறந்து கொட்டுவாள் என்ற எண்ணம் ஏற்பட்டதும், தங்கள் மேலேயே கோபம் ஏற்பட்டது அவர்களுக்கு. பாட்டியின் மனத்தை வேதனைப் படுத்திவிட்டோமே என்ற கலக்கம் மனத்தில் அதிகமாய்த் தோன்றியது.

பாட்டி அவர்களைச் சகஜ நிலைக்குத் திருப்பினாள். இருந்தாலும் அனைவரின் அடி மனத்திலும் ஒரு லேசான நெருடல் இருந்தது.

பாட்டியின் மனம் நோகும்படி நடந்து விட்டோமே... எவ்வளவு நாட்கள் பாட்டி தன் வாழ்க்கையைப் பற்றிக் கதைபோல் இவர்களிடம் கூறியிருக்கிறாள். ஒவ்வொரு முறை கேட்கும் போதும் புதிது, புதிதாய் சொல்வது போலவே இருக்கும். ஸ்வாரஸ்யமாய்க் கேட்பார்கள். பாட்டியும் அந்தக் காலத்துக்கே, அந்தச் சூழ்நிலைக்கே சென்று லயித்துக் கூறுவாள். கேட்டுவிட்டு, 'பாவம்' என்ற உணர்வில் அவர்கள் மனம் அவள் மேல் இன்னும் அன்பைச் சொரியும். அப்படிப்பட்ட பாட்டியை, நிமிஷமாக நோகடித்து விட்டோமே. எப்போதுமே அம்மா வந்தால், இந்த மாதிரியான காரியங்கள் நடப்பது ஒன்றும் புதிதல்லவே. ஏன் இப்படி நடந்து கொண்டோம் எனத் தங்களுக்குள்ளேயே சுருண்டார்கள்.

நீரஜா, காமாட்சி கூறியபடியே ஸ்வாமி விளக்கு ஏற்றி நமஸ்கரித்துவிட்டு, இரண்டு அகல்களில் விளக்கேற்றிக் கொண்டு ஒன்று துளசி மாடத்தில் வைத்து, இன்னொன்றை வாசலில் வைப்பதற்காக, இடது உள்ளங்கையில் அகலை வைத்துக் கொண்டு, வலது உள்ளங்கையால் அந்த ஜோதிக்கு, காற்று படாதபடி அணைக்கட்டி வாசலுக்கு வரவும், பிரகாஷ் பிரபுவைத் தேடிக் கொண்டு வரவும் சரியாக இருந்தது.

அந்தத் தீபத்தின் ஒளி, குனிந்திருந்த

சியாமளாராவ்

அவளின் முகத்தை, ஸ்வர்ண பிம்பமாகப் பிரகாசிக்கச் செய்தது. நெற்றியில் சிவந்த பொட்டின் பளபளப்பும் நடுவகிடு எடுத்த கூந்தலின் பிரிவும், தாழ்ந்த கண்களின் இமைகளும், கூர்ந்த நாசியும், சிவந்த உதடுகளும், குழிந்த மோவாயும்......

இப்படியொரு தெய்வீகமான அழகா என்ற நினைப்பில், எனக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற பரிதவிப்பில், கிளர்ச்சியுற அப்படியே மெய்மறந்து நின்றான் பிரகாஷ்.

உள்ளுணர்வின் உந்துதலில் தலைநிமிர்ந்த நீரஜா, பிரகாஷ் தன்னையே பார்த்தபடி நிற்பதை உணர்ந்ததும், வெட்கம் முகத்தைத் தாமரையாக்க, சட்டென்று தீபத்தை வாசற்படியருகில் வைத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

தோட்டத்தில் நிதானமாய் வளைய வந்து, எல்லாச் செடிகளையும் கவனத்துடன் பார்த்துக் கொண்டே வந்த காமாட்சி, புடலங்காய்களுக்குக் கல்லைக் கட்டாமல் பாதியிலேயே கயிறு தொங்கவிட்டிருப்பதைக் கண்டு கோபம் கொண்டாள்.

'இந்த வேடி என்ன வரவர ரொம்பத்தான் துளிர்த்துப் போய்விட்டான். ரெண்டு புடலங்காய்களுக்குக் கல்லைக் கட்டிவிட்டு, இன்னொன்றைப் பாதியிலேயே கயிறு தொங்க விட்டுட்டுப் போயிருக்கானே. அப்படி என்ன அவசர வேலை...? ம்...'

நிமிர்ந்து வேடியப்பன் குடில் பக்கம் பார்க்க, அதற்குப் பக்கத்திலிருந்த காம்பவுண்டு சுவர்ப் பக்கமாய் வேடியும், பொங்காலியும் நின்று கொண்டு, எக்கி எக்கிப் பக்கத்து வீட்டுப் பக்கமாய் வெகு ஸ்வாரஸ்யமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்க்கும்ஸ்வாரஸ்யத்திலும்பொங்காலி கீழே நழுவாமல் இருக்க, அவளை இடுப்புப்புறம் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தான் வேடியப்பன்.

இதைப் பார்த்த காமாட்சிக்குக் கோபம் மறைந்து, சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

''வேடி! பொங்காலியோட கால் நழுவறது பாரு. பேசாம இடுப்புல தூக்கி வச்சுண்டு நின்னுக்கோயேன். ஏன் இப்படி அவஸ்தைப்படறே...?''

தடாலென்று இருவரும் கைநழுவ, கீழே விழாத குறையாய்த் தள்ளாடி நின்று திரும்பிப் பார்த்தனர். காமாட்சியைப் பார்த்து, வெட்கத்துடன் தலையைச் சொறிந்தபடியே அசட்டு முகத்துடன் நின்றான் வேடி.

''ஏண்டா வேடி, கல்லைப் புடலங்காய்ல கட்டியும், கட்டாததுமாப் பாதிவேலையில



உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் முதற் சுவையிலிருந்தே.

நான்கு மாதங்கள் ஆகும்பொழுது உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. அவனுக்கு ஸெரிலாக்கின் அனுகூலங்களைப் புகட்ட இதுவே உகந்த வேளை.

போஷாக்கு அனுகூலம்:
ஒவ்வொரு தடவை ஸெரிலாக் ஊட்டும்பொழுதும் உங்கள் குழந்தைக்குத் தேவையான புரத சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின் மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்கு சத்துக்களும் அவனுக்கு கிடைக்கின்றன. அன்றியும் குழந்தையின் விசேஷ தேவைக்கு ஏற்றபடி சரியான விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுவையில் அனுகூலம்:
ஸெரிலாக் நலம் தரும் போஷாக்குடன் நல்ல சுவையும் கொண்டது. ஸெரிலாக் சுவை என்றுமே குழந்தைகளுக்கு கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்:
ஸெரிலாக் குழந்தை உண்பதற்கேற்ப முன்கூட்டியே பதமாக்கப்பட்டுள்ளது. கொதிக்க வைத்து ஆறிய வெதுவெதுப்பான நீரில் கலந்தால் போதும், நொடியில் தயார் ஸெரிலாக் உணவு.

தேர்ந்தெடுக்க அனுகூலம்:
உங்கள் குழந்தை உணவை இன்னும் விரும்பி உண்ண இப்பொழுது ஸெரிலாக் இரு விதங்களில் வருகிறது. நான்கு மாதங்களிலிருந்து ஸெரிலாக் வீட், ஆறு மாதங்களிலிருந்து ஸெரிலாக் ஆப்பிள்.

சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கவும், உங்கள் குழந்தைக்கு சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.

இலவசம்:
குழந்தையின் 'ஹெல்த் சிகார்ட் புத்தகம்'
பெற எழுதவும்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண்-3,
புது தில்லி-110 008.



Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RKSWAMY/FSL/4757 TM


பெண்மையின் எழிலுக்கு பெருமை சேர்ப்பது
பட்டுப் போன்ற மென்மையான கூந்தல்
எழில் நங்கையர் நாடுவது
கிரௌன் ஹெர்பல் ஷாம்பு
முடி உதிர்தலின் காரணமும்,
நிவாரணமும் :
உரோமக் கால்களை கெட்டியாகப் பிடித்து முடி உதிராமல் பாதுகாக்கக் கூடிய கொழுப்பு போன்ற பாளம் மண்டை ஓட்டிற்கும் மேல்தோலுக்கும் இடையே உள்ளது. உடல் உஷ்ணம் அதிகரிக்கும்போது இப்பாளம் உருகி உரோமக் கால்களை வலுவிழக்கச் செய்து முடி உதிர்தலை அதிகப்படுத்துகிறது. கிரௌன் ஹெர்பல் ஷாம்புவில் அடங்கியுள்ள விசேஷ மூலிகைகள் உருகி நிற்கும் கொழுப்புப் பாளத்தை இதமாக குளிரச் செய்து கெட்டியாக இறுகச் செய்வதால் உரோமக் கால்கள் மேலும் உறுதியாகி உங்கள் கேசத்திற்கு அதிக பாதுகாப்புக் கிடைக்கிறது. கேசத்தின் கருமைக்குக் காரணமான 'மெலனின்' சத்துக்கும் அதிக பாதுகாப்பளிக்கின்றது
குளிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் தலையில் தேய்த்து அதன் பிறகு குளிக்கும் போது பெறுகின்ற குளுமையும் சுகமுமே அலாதிதான்.
உங்கள் கூந்தலுக்கு இயற்கையான பாதுகாப்பு
கிரௌன் ஹெர்பல் ஷாம்பு
Herbal Shampoo
CROWN

அப்படி என்னடா ஸ்வாரஸ்யம் அங்கே? எத்தனை தடவை சொல்லியிருக்கேன். இப்படி அரைகுறையா வேலையை விட்டுட்டு வேடிக்கைப் பார்க்கப் போகாதேன்னு. இப்படியே நீ ஆட்டம் காட்டினா, பேசாம ஊரோடேயே அனுப்பிச்சுடறேன். அவ்வளவுதான்.''

கோபம் குரலிலிருந்தாலும், முகத்தில் தாங்கொணாத சிரிப்புத்தான் பரவியிருந்தது காமாட்சிக்கு.

''பெரீம்மா, பெரீம்மா, பக்கத்து வூட்டு அவுட் ஹவுஸுக்கு யாரோ புச்சா குடிவந்திருக்காங்க. சாமான் செட்டு, அவ்ளோ இல்லே. பொண்ணுங்கதான் மூணு கண்ணுலே தெம்புட்டுது. ஒரு அம்மாவும், ஐயாவும் இருந்தாங்க... அதான்...''

நிமிர்ந்தவன், காமாட்சியின் தீர்க்கமான பார்வையைத் தாங்க முடியாமல், ''இதோ ஒரே நிமிஷம் வேலைய முடிச்சுடறேம்மா, வா புள்ளே'' என்று கூறியபடியே ஓட்டமாய் ஓடினான் புடலைக் கொடி அருகில்.

கீழே விழுந்திருந்த தென்னைப் பாளைகளையெல்லாம் எடுக்கச் சொல்லி, தோட்டத்தை அருகில் நின்றபடியே பெருக்கச் சொல்லி, சுத்தமாக்கினாள். பாத்திகளில் இருந்த குப்பை, கூளங்களை எறிந்து, சரிந்த மண்ணை நோக்கி, பாத்திகளுக்குச் சரிவரத் தண்ணீர் பாய்ச்சக் கூறி, அதைப் பார்த்த பிறகே உள்ளே சென்றாள் காமாட்சி..

அன்று நல்ல நாளாயிருந்ததால் பாரதியும், நாகநாதனும், நீரஜாவின் ஜாதகத்திற்குக் குங்குமம் தடவி, ஸ்வாமியின் முன் வைத்து விட்டு, பிறகு காமாட்சிக்கும் நமஸ்காரம் செய்து, பிரகாஷின் வீட்டிற்குச் சென்றனர்.

இந்த ஜாதகம் சேர்ந்து, பிரகாஷுக்கும், நீரஜாவிற்கும் நல்லபடியாய்க் கல்யாணம் முடிய வேண்டும் என்ற பிரார்த்தனையோடு... நாளைக்குக் கல்யாணம் நிச்சயமானால், என்னென்ன செய்ய வேண்டும். நாலு பெண்கள் இருக்கிறார்களே, இருப்பதை ஒருவருக்கொருவர் குறையாமல், நிரவிச் செய்ய வேண்டுமே...''

சாம்பார்ப் பொடி செய்வதற்குத் தேவையான சாமான்களை வெயிலில் காயப் போடச் சில வீடுகளில் வசதியிருக்காது. வெறும் வாணலியில் சாமான்களைத் தனித்தனியாகப் போட்டுக் கைபொறுக்கும் சூடு வரை வறுத்து மிஷினில் அரைக்கலாம். சாமான்களைக் காயப் போடாமலோ வறுக்காமலோ அரைத்தால் சாம்பார்ப் பொடியின் அளவு குறையும்.

— விசாலாட்சி

வரப்போகும் பிரபுவின் மனைவிக்கும் ஏதாவது கொஞ்சம் போட வேண்டாமா, இல்லாவிட்டால் எப்படி?, அவளும் நம்ம பெண் போலத்தானே. எப்படிச் செய்வது...

யோசனையில் பலவிதமாய்க் குழம்பி மூழ்கியிருந்த காமாட்சி, ''பாட்டீ...'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

'யார் இது... புதுசா இருக்கே... எப்படி உள்ளே வந்தாள்? சின்னப் பெண்ணானாலும் லட்சணமாயிருக்கா. வேடி எங்கே போனான்? அவன்தான் காம்பவுண்டு கதவைத் திறந்தானோ...?'

''பாட்டீ, நாங்கதான் பக்கத்துல அவுட் ஹவுஸுக்குப் புதுசாக் குடி வந்திருக்கோம் பாட்டி.''

''ஓ... நீங்கதானா? வேடி சொன்னான். வா, உட்காரு. உம் பேரென்ன...?''

''ஆனந்தி பாட்டி, எனக்கு ரெண்டு தங்கைகள் இருக்கா. ஒருத்தி பேரு கலோசனா, இன்னொருத்தி பேரு பிரேமா.''

பூசினாற் போன்ற மஞ்சள் நிற உடம்பும், லேசான நீல நிறத்துடன் கண்களுமாய் ஆனந்தி பார்ப்பதற்கு அழகாகவே இருந்தாள். பாவாடையும், தாவணியுமாய் நின்றதில் குண்டாய்த் தெரிந்தாலும், புடைவை கட்டினால் ஒல்லியாகவே இருப்பாள் எனத் தோன்றியது காமாட்சிக்கு.

''படிச்சிண்டிருக்கியாம்மா ஆனந்தி...''

உடனே லேசாகக் கண்கள் கலங்க முகம் சிவந்தாள் ஆனந்தி. ''இல்லே பாட்டி. பத்தாவதுல பெயிலாப் போயிட்டேன். அப்புறமா படிக்கப் பிடிக்கல்லே. வீட்டுக் காரியம் அத்தனையும் நல்லா செய்வேன் பாட்டி. டைப்பிங் கத்துண்டிருக்கேன். நல்லாப் பாடுவேன். ஆனா கத்துக்க அவ்வளவு வசதி போறுது...''

''அதனாலென்னம்மா. உனக்குத் தெரிஞ்சதை தினமும் வாய்விட்டுப் பாடிண்டிரு. ரேடியோவுல கேக்கறதையெல்லாம் பாடு. தானாக் குரல் நல்லா ஆயிடும். எங்க ஜலஜா நல்லாப் பாடுவா. நேரம் இருக்கறச்சே, லீவு நாட்கள்லே அவகிட்டே உனக்கு வேணும்கற பாட்டைக் கத்துக்கோ. ஆமா, உங்கப்பாவுக்கு எங்கே வேலை...?''

மறுபடியும் முகம் சிவக்கத் தலைகுனிந்தாள் ஆனந்தி.

''ஹோட்டல்லே சரக்கு மாஸ்டரா இருக்கார் பாட்டி.''

''அதுக்கு எதுக்குத் தலையைக் குனியறே? செய்யற வேலை எதுவாயிருந்தாலும், அதுலே நேர்மையா நடந்துண்டாப் போறும் ஆனந்தி. அத்தனை பேருமே பல்லக்குல உட்கார்ந்துட்டா, தூக்கறதுக்கும் ஆளு வேண்டாமா? வேலையோட தராதரத்தைப் பிரிச்சுப் பார்த்து நம்மளை நாமளே தாழ்த்திக்கப் படாது ஆனந்தி.''

''பாட்டி...'' கண்களில் நீர் கோத்து நிற்கக் கூறினாள் ஆனந்தி.

''நாங்களத்தனையோ இடத்துல குடித்தனம் இருந்துருக்கோம் பாட்டி. ஆனா எல்லாருமே எங்களை எளக்காரத்தோடேயே பார்த்தா, பேசினாளே ஒழிய, இப்படி அன்பா ஒருத்தர் கூடப் பேசலை பாட்டி. தோட்டமும், பங்களாவுமா, இவ்ளோ பெரிய வீட்டுல இருக்கறதாலதான், உங்களோட மனசும் அவ்ளோ பெரீ...சா இருக்குப் போலிருக்கு. எனக்கு இன்னிக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா பாட்டி. உங்களை நமஸ்காரம் பண்ணணும் போல இருக்கு. பண்ணட்டுமா பாட்டி.''

தொண்டையடைக்க, தழுதழுத்தபடியே கூறினாள் ஆனந்தி. காமாட்சிக்கு நமஸ்காரமும் செய்தாள்.

''உன்னைக் கண்கலங்காம, அன்பா, ஆதரவா வைச்சிண்டிருக்கிற புருஷனா வாய்ச்சு, தீர்க்கசுமங்கலியா, நெத்தி நிறைய குங்குமமும், தலைநிறையப் பூவுமா நிறைஞ்ச வாழ்க்கையை அமோகமா வாழணும்டி குழந்தை.''

சைக்கிள் மணி கிணுகிணுவெனச் சப்திக்க ''பாட்டி'' என்றபடியே வந்து நின்றான் வரதன்.

கண்களைத் துடைத்துக் கொண்டே காமாட்சியும், ஆனந்தியும் தங்கள் நிலையிலிருந்து விடுபட்டு, வரதனைப் பார்த்தார்கள்.

ஆனந்தியின் கண்களும், வரதனின் கண்களும் ஒரு விநாடி சந்தித்துப் பார்த்தன. அந்த ஒரு விநாடியிலேயே புருவம் மேலேறி இறங்கியது வியப்பால். ஆனந்தியும் நாணத்தால் தலைகுனிந்து, ''நான் வர்றேன் பாட்டி'' என்று ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டாள்.

''யாரு பாட்டி? புதுசா இருக்கு. இவ்வளவு நாளா வர்றேன், போறேன். பார்த்ததேயில்லையே...?''

''ம்ஹூம்... இங்க யாரு வர்றா போறாங்கறதைப் பார்க்கிறதுதான் உனக்கு வேலையா வரதா? அவ யாராயிருந்தா உனக்கென்ன? ம்...?''

''பாட்டி...'' வரதன் விதிர்விதிர்த்துப் போய்விட்டான். கண்களில் மிரட்சி. பேசியது தப்போ என்ற எண்ணத்தில் வியர்த்து வழிந்தது.

''போடா அசடு. அதுக்குள்ளே இப்படியா குழைஞ்சுப் போயிடுவே. பக்கத்து அவுட் ஹவுசுக்கு புதுசாக் குடி வந்திருக்காளாம். அந்தப் பொண்ணுதான் இவ. ஆனந்தின்னு பேரு. போறுமா...''

கிண்டலாகக் காமாட்சி சிரித்தவுடன் தான், வரதனின் முகத்திலும் சிரிப்பு தோன்றியது.

''பாட்டி, கறிகாய்க் கடைக்குப் போறேன். ஏதாவது வேணுமான்னு கேட்கலாம்னு தான் வந்தேன் பாட்டி. என்ன வேணும் சொல்லுங்கோ.''

''மொதல்லே உட்காரு. எம் பொண்ணு என்னமோ புது தினுசா பக்ஷணம் கொண்டு வந்திருக்கா. அதைத் தர்றேன். சாப்பிட்டுட்டு அப்புறமாப் போலாம். இரு, கொண்டு வர்றேன்.''

காமாட்சி தந்த காஜாவையும், சூடாவையும் வேகவேகமாய்ச் சாப்பிட்டான். அகோரப் பசி போல் தோன்றியது. கவனித்த காமாட்சி,

''ஏண்டா சாப்பிட்டியா, இல்லையா...? ம்... சொல்லு...''

கை, தட்டிலிருக்க, கண்களை நிமிர்த்தியதில் வேதனையுடன் சிரித்தான்.

''வக்கீல் மாமியும், மாமாவும் காலங்கார்த்தாலேயே எங்கேயோ கல்யாணத்துக்குப் போயிட்டா. நானே சமைச்சுக்கலாம்னா கையே வரலே. இத்தனை நேரம் வேலையே சரியாயிருந்தது. இப்ப கறிகாய் வாங்கிண்டு வரச்சே ஓட்டல்லே இட்லி சாப்பிடலாம்னு இருந்தேன் பாட்டி.''

''படவாப் பயலே! எத்தனை நாள் சொல்லியிருக்கேன். பசிச்சா இங்கே வா, சாதம் போடறேன்னு. பெரிய மனுஷனாயிட்டியா, விதரணையில்லாத பயலே. இந்த எண் ஜாண் உடம்புக்கும் வயிறுதாண்டா முக்கியம். அது நெறைஞ்சு இருந்தாத்தான், மத்த அவயவங்களும் நல்லா தெம்பா வேலை செய்யும். நீ அதைக் காயப்போட்டு, வேலையைச் செஞ்சின்னா உடம்பு சொன்னபடி கேக்காம மக்கர் பண்ணும். இனிமே இப்படி செஞ்சே, வாசப்படி ஏற விடமாட்டேன், புரிஞ்சுதா. வா, கொல்லையிலேருந்து எலையைப் பறிச்சுண்டு, வா, சாதம் போடறேன். நல்லாப் பட்டினி கிடந்தே போ...''

சமையலறையை நோக்கி நடந்தாள் காமாட்சி. அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த வரதனின் தொண்டையிலிருந்து ஒரு கேவல் எழும்பி அப்படியே அடங்கியது.

இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே. இவர்களால்தான் கொஞ்சமாவது மழை பெய்கிறது போலிருக்கிறது. அடியும், வசவும், நக்கலுமே கேட்டுப் பழக்கப்பட்ட அவனுக்கு, இந்த வாத்ஸல்யமான பேச்சு, மயிலிறகாய்த் தடவித் தடவிக் கொடுத்தது. அந்தச் சுகம் தாங்காமல் உள்ளுக்குள்ளேயே பொங்கிப் பொங்கிப் போனான் வரதன்.

(தொடரும்)

மாம்பழ மில்க் ஷேக் தயாரிக்கும் போது சில முலாம் பழத் துண்டுகளையும் சேர்த்துத் தயாரித்துப் பாருங்கள். இந்த டியட் மில்க் ஷேக் வெகு ஜோராயிருக்கும்.

— விசாலாட்சி



மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனா
Rexona
T AND GLOWING SKIN
REXONA
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

("சொல்லின் செல்வர்" சத்திய மூர்த்தி ஐயர் அவர்கள் தமது புதல்வி லக்ஷ்மிக்கு 1941—ஆம் வருஷம் ஜூலை 10—ம் தேதி வெளியூரிலிருந்து திருமண நிகழ்ச்சியைப் பற்றி எழுதிய இக்கடிதம் "அருமைப் புதல்விக்கு" என்ற நூலிலிருந்து தொகுத்தது. 1887—ஆம் ஆண்டு ஆகஸ்டு 19—ல் பிறந்த சத்தியமூர்த்தி ஐயருக்கு இந்த ஆண்டு ஆகஸ்டு 18—ல் அவருடைய பிறந்த தின நூற்றாண்டு நிறைவடைகிறது.)

"என் அன்புள்ள லக்ஷ்மிக்கு,

கண்ணியமான விருந்தாளி என்ற முறையில் நேற்று ஒரு நண்பருடைய கல்யாணத்துக்கு நீ போயிருந்தாய். என்னுடனோ அல்லது உன் அம்மாவுடனோ நீ அநேகம் கல்யாணங்களுக்குப் போயிருக்கிறாய். ஆனால் தனியாக ஒரு கல்யாணத்துக்குப்

தம் செய்து கொள்வதில் பிரயோசனம் இல்லை. கிறிஸ்துவ மதத்திலும் சடங்குகளுக்கு ஆதரவு இருக்கிறது. இஸ்லாத்தில் இது அநுஷ்டானத்திலும் இருந்து வருகிறது. இப்போது நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. சாதாரணமாகப் பெண்ணும் மாப்பிள்ளையும் குழந்தைகள் அல்ல.

நம்முடைய கல்யாணங்களைப் பற்றிய சில சம்பிரதாயங்களை வெகுவாக மாற்றிக் கொள்ள வேண்டும் அல்லது கை விட்டு விடவாவது வேண்டும். மாலை மாற்றுவதற்காக மாமன்மார்கள் முன்வரமாட்டார்கள். அப்படியே அவர்கள் வருவதாகவே வைத்துக்கொண்டாலும், பெண்ணோ, மாப்பிள்ளையோ, மரியாதையாகத் தோள் தூக்குவதை வேண்டாமென்று தடுத்து விடுவார்கள். ஆயினும் மாலை மாற்றிக் கொள்வது என்பது மட்டும் தொடர்ந்து நடக்கும் என்று நம்புகிறேன். இது நல்ல சம்பிரதாயம். எதிர்

கல்யாணம் ஒரு

போவது, இதுவே உனக்கு முதல் தடவை. நீ அந்தக் கல்யாணத்தில் பரிபூர்ணமான சந்தோஷத்துடன் கலந்து கொண்டு தம்பதிகளை ஆசீர்வாதம் செய்திருப்பாய். கல்யாணங்களைத் தடபுடலாக நடத்த வேண்டும் என்பது மிக்க நியாயம்.

அதற்கு எவ்வளவு நண்பர்களும் உறவினர்களும் வர வேண்டுமோ அவ்வளவு பேரும் போக வேண்டும். உறவினர்கள், நண்பர்கள் ஏன் போக வேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். எளிய முறை என்றும், சிக்கன வாழ்வு என்றும் சொல்லிக் கொண்டு சிலர் சந்தோஷகரமான அம்சத்தை நசுக்கி விடுகின்றனர். இவர்களைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. ஆடம்பரமான, விகாரமான முறையில் செலவுகள் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இளமையுள்ள இரண்டு பேர்கள் இடையே, நெடு நாள் வாழ்வுக்கு உறவு உண்டு பண்ணி வைக்கும் நிகழ்ச்சி கல்யாணம். அதுவரையில் அவ்விருவரும் அந்நியர்கள்.

தந்தை, தாய், குழந்தைகள், சகோதர சகோதரிகள் இவர்கள் கடவுளால் உறவினர்களாகச் செய்யப்பட்டிருக்கின்றனர். கல்யாணம் புது உறவு. எனவே கல்யாணத்தைக் கூடுமான வரையில் உன்னதமாகச் செய்து, வெகு சந்தோஷமான காட்சிகளை நிலவும்படி செய்வது அவசியம் அல்லவா? நம்மவர்கள் கொள்கைப்படி கல்யாணம் என்பது ஓர் ஒப்பந்தம் அல்ல. அது ஒரு புனிதமான சடங்கு. சில சீர்திருத்தவாதிகள் சொல்வதைப் போல் ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் விவாக ரிஜிஸ்திராரிடம் சென்று ஓர் ஒப்பந்

காலத்தில் புருஷன் மனைவியாக வாழ்க்கை நடத்தப் போகிறவர்களுக்குச் சங்கோசம் நீங்கி பரஸ்பரம் பழக்கம் ஏற்பட மாலை மாற்றிக்கொள்ளும் முறை ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அடுத்தபடியாக ஊர்வலம். முதலில் மாப்பிள்ளை அழைத்தல். பிறகு பெண்ணையும் மாப்பிள்ளையையும் சேர்த்து உட்கார வைத்து நடத்தும் ஊர்வலம். பெரிய நகரங்களில் உள்ளவர்களின் நடத்தை காரணமாக ஊர்வலத்தின் மதிப்புக் குறைந்து விட்டது. கிராமங்களில் இந்த சம்பிரதாயம் இருந்து வருகிறது. பக்கத்திலுள்ளவர்களுடைய நல்லுணர்ச்சியை அறிந்து கொள்ளுவதற்கும் ஆரத்தி எடுத்துத் தம்பதிகளை ஆசீர்வதிப்பதற்கும் ஊர்வலங்கள் சந்தர்ப்பத்தை அளிக்கின்றன. நல்ல நாதஸ்வரக் கச்சேரி வைக்கும் பக்ஷத்தில் ஊர்வலங்கள் காரணமாக சங்கீத விருந்தையும் ஊரார் அநுபவிக்க முடிகிறது.

பல்வேறு ஜாதியாரும் மதத்தாரும் வெவ்வேறு விதமான முறையைக் கல்யாணங்களில் அநுஷ்டிக்கிறார்கள். காரணங்கள் எதுவாக இருந்த போதிலும் பிராம்மணர்களிடையே ஒருவிதமான அநுஷ்டானம் உண்டு. அதாவது விவாகத்தில் இஷ்டம் இல்லாத ஒரு பிரம்மச்சாரியை பெண்ணின் பெற்றோர்கள் போய் பார்த்துத் தங்களுடைய கன்னியைத் தானமாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்பர். பாணிக்கிரஹணம் அக்னி ஹோத்ரம் முதலியவைகள் முக்கியமான வைதிகக் காரியங்களாகும். இவையெல்லாம் புரோகிதர்கள் உதவியோடு, விவாகத்திற்காக அழைக்கப்பட்ட விருந்தினர் முன்

பாக நடைபெறும்.


மந்திரங்களெல்லாம் வெகு முக்கிய மானவை. கிருஹஸ்தன் என்ற முறையில், தம்பதிகள் பரஸ்பரம் உன்னதமான காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது என்பதை அறிவுறுத்துவன மந்திரங்கள். மந்திரங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு உரிய காலத்தில் உனக்குப் போதிக்கலாமென்று நம்பியிருக்கிறேன். கல்யாணத்துக்கு அடுத்த நான்கு நாட்களிலும் தம்பதிகள் அக்னி பூசை செய்கிறார்கள். இது வேத கால சம்பிரதாயம். இதைப் பெண் வீட்டிலேயே செய்கிறார்களாயினும், மாப்பிள்ளை வீட்டிலேயேதான் செய்ய வேண்டும்.

நான்கு நாட்களும், ஏன் ஐந்தாவது நாள் கூட நலங்கு ஊஞ்சல் இவை இரண்டும் நடக்கும். இவற்றைப் பார்ப்பதில் எனக்கு வெகு இஷ்டம். உனக்கும் இது பிடித்திருக்கும் என்று நம்புகிறேன். இவை மிகவும் சந்தோஷமான வைபவங்கள்! இதன் முக்கிய நோக்கம் என்ன தெரியுமா? மணமகனும், மணமகளும் பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொண்டு விளையாடவும், சங்கோஜத்தை விடவும் இவ்வைபவங்கள் உதவுகின்றன. இந்த சமயங்களில் வீட்டில் நன்றாகப் பாடும் ஸ்த்ரீகள் பாடினால் சந்தோஷத்துக்கு அளவே கிடையாது. சமீப வருஷங்களில் நான் சில கல்யாணங்களில் ஒரு விஷயத்தைக் கவனித்திருக்கிறேன். கிட்டிய பந்துக்கள் உள்பட விருந்தாளிகளெல்லாம் சாப்பாடு, காப்பி முதலிய

புது உறவு!




* சத்தியமூர்த்தி



* பாபு ராஜேந்திர பிரசாத் சத்யமூர்த்தியின் மனைவி மகளுடன்.

* மகளின் திருமணம்




வற்றிலேயே அதிகக் கவனம் செலுத்துகின்றனர். அவர்களுக்கு நலங்கு, ஊஞ்சல் போன்ற சந்தோஷமான வைபவங்களில் கவனம் இருப்பதில்லை. சில சமயங்களில் அவர்கள் இந்த வைபவங்களைத் துரிதப்படுத்திச் சீக்கிரம் சாப்பிடலாமென்று சொல்லுவர். இவர்களெல்லாம் சொல்வது அடியோடு தவறு. ஒரு யுவனும் ஒரு யுவதியும் ஒருமுறைதான் கல்யாணம் செய்து கொள்கின்றனர். அவர்கள் நிறையச் சந்தோஷப்பட அநுமதிக்க வேண்டும். நாமும் அவர்களுடன் சந்தோஷமாக இருப்பதன் மூலம் அவர்களது சந்தோஷத்தைப் பெருக்க வேண்டும்.

நான்கு நாள் கல்யாணம் கஷ்டமான காரியம். ஆனால் அது விசேஷமானதுதான். சந்தோஷமான திருமணம் மனித வர்க்கத்திற்கு உகந்த ஓர் அம்சம்!

—ரகமி

நளினமான பெண்களிடம் நாதஸ்வரமா!



நாதஸ்வரத்தை அசுர வாத்தியம் என்று சொல்வார்கள். ஏனென்றால் அதை வாசிக்க அபார ஞானம் மாத்திரம் இருந்தால் போதாது. அசாத்திய உடல் வலுவும் வேண்டும். வாசிக்கும்போது உடலில் தளர்ச்சி ஏற்பட்டால் வாசிப்பில் அபஸ்வரம் தலை நீட்டும். இந்த காரணத்தினாலேயே பெரும்பாலும் பெண்கள் நாதஸ்வரத்தை வாசிக்க முன்வருவதில்லை.

நாதஸ்வரத்தை வாசிக்கும் பழைய தலைமுறையினரில் மதுரை பொன்னுத்தாயி என்ற பெண்மணி பிரபலமாக இருந்தார். தற்போது வயது முதிர்ச்சியின் காரணமாக அவர் நாதஸ்வரம் வாசிப்பதில்லை.

பொன்னுத்தாயியைப் போலவே பிரபலமாக வேண்டும் என்ற ஆர்வத்துடன் நாதஸ்வரம் வாசித்து வரும் இரண்டு பெண்கள் — பிரேமலதாவும், சரஸ்வதியும்.

பத்தொன்பது வயதான பிரேமலதாவும், பதினாறு வயதான சரஸ்வதியும் நாதஸ்வரம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தது ஒரு சுவையான கதை.


வட ஆற்காட்டைச் சேர்ந்த களம்பூர் என்ற ஊரில் பிறந்து வளர்ந்து படித்து வந்த அவர்கள், அங்கே எட்டாவது படித்து முடிந்ததும் குடும்பம் சென்னையில் குடியேறியது. மாம்பலத்தில் தங்கி இருந்ததால் அவர்களை மாம்பலத்தில் உள்ள ஸ்கூல்களிலேயே சேர்க்க அவரது தந்தை ராமு — இவர் ஒரு தவில் வித்வான் — அலையாக அலைந்தார். டொனேஷன் கொடுத்துச் சேர்க்க வசதி இல்லை. சிபாரிசு செய்ய பெரிய மனிதர்கள் யாரும் தெரிந்திருக்கவில்லை. விளைவு —

ஜூன் மாதம் பள்ளிகள் திறந்து மற்ற பிள்ளைகள் எல்லாரும் பள்ளிக் கூடம் சென்று கொண்டிருந்தபோது பிரேமலதாவும், சரஸ்வதியும் வீட்டில் இருந்து பொழுதை எப்படிப் போக்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

பரம்பரை பரம்பரையாக நாதஸ்வரம் வாசித்து வந்த குடும்பத்தில் இருந்து அவர்கள் வந்ததால் சும்மா இருக்கும் நேரத்தில் நாதஸ்வரத்தைக் கற்றுக் கொண்டால் என்ன? என்று தோன்றியது. அதனால் நாதஸ்வரத்தை சைதை தியாகராஜன் என்பவரிடம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஐந்து வருட பயிற்சிக்குப் பிறகு தனியாக கச்சேரி செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

அப்பா தவில் வாசிக்க, இரண்டு மகள்களும் நாதஸ்வரம் வாசிக்க, மகன் தாளம் போட, ஆக குடும்பச் சகிதமாக கச்சேரிக்குச் செல்கிறார்கள். 'இது ஒரு கலைக் குடும்பம்' என்று சொல்வார்களே, அதற்கு உதாரணம் இவர்களது குடும்பம்.

— கமலநாதன்


MASALA SUPARI
யாவரும் விரும்புவது
அசோகா
சுகந்த பாக்கு
ASOKA NUTS
ASOKA
PLAIN
ASOKA
AVAILABLE IN
200 GRAMS
100 GRAMS
50 GRAMS
20 GRAMS
Packs and also in minis.
5 Ps
INTIMATE
ASOKA
10 Ps
ASOKA
Mfgrs:
ASOKA BETELNUT CO. (PVT) LTD.,
COIMBATORE - 641 018.
CHARI


அறிமுகப்படுத்துகிறோம்!
ஆனந்தா
இடியாப்ப தட்டுகள்
இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய செய்தி
புதிய முறையில்
இடியாப்பம் செய்ய
ஆனந்தா இடியாப்ப
தட்டுகள்
மிக குறைந்த விலையில்
கிடைக்கிறது
எல்லா பிரபல பாத்திர கடைகளிலும் கிடைக்கும்.
காசியானந்தா மெட்டல்ஸ்
72, நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-600003. போன்: 564724

துன்பம் நேர்கையில்...



18

காலம் எப்படி எல்லாமோ மாறுகிறது. அதன் ஓட்டத்தையோ விளைவுகளையோ தடுக்கும் சக்தி மனிதனுக்கு ஏது? பூமியின் சுழற்சியினால் இருட்டுப் பரவுகிறதே தவிர ரொம்ப நேரம் நிலைப்பதில்லை. நேரம் வந்ததும் அந்த இருள் தானாகவே மறைந்து வெளிச்சம் பரவுகிறது. இன்பமும் துன்பமும் மேடுகளும் பள்ளங்களும் நிறைந்ததுதான் வாழ்க்கை.

இப்போதெல்லாம் சம்பா சித்ராவிடம் ரொம்ப ஆசையாயிருக்கிறாள். சித்ரா இப்போது ஒரு பெண் குழந்தைக்குத் தாய். அடுத்த குழந்தையையும் பொலிவோடு சுமந்து கொண்டிருக்கிறாள். இந்தத் திடீர் ஆசைக்கும் அன்புக்கும் காரணம் பல. முதலாவது சித்ராவின் நிலையை ஒருநாள் கண் கூடாக எதேச்சையாகப் பார்த்த விமலாவின் தீர்மானம். எந்தப் பணம் காசு இல்லாததால் சம்பா சித்ராவை கொடுமைப்படுத்துகிறாளோ அந்தப் பணம் காசைச் சித்ராவுக்குத் தர வேண்டும் என்று முடிவு செய்து மோகன் மூலம் தனக்கு வந்த பணத்தை வட்டியும் முதலுமாகச் சேர்த்துச் சித்ராவின் பெயருக்கு மாற்றி எழுதி விட்டாள்.

இரண்டாவதாக ஹரியின் முன்னேற்றம். படிப்படியாகப் படித்து எம். காம். முடித்து, மேல் படிப்பிற்காக உமாவின் உதவியுடன் அமெரிக்கா சென்றபோது உமா பெருமையில் திளைக்க ஈஸ்வரி பிள்ளையின் உயர்வில் மனம் எல்லாம் மகிழ இன்பத்தில் திக்குமுக்காடினாள்.

அந்த ஐந்து வருட ஆராய்ச்சிப் படிப்பில் படிப்பு நேரம் போக மீதி நேரத்தில் பார்ட் டைம் வேலை செய்த ஹரி அம்மாவுக்கும் சித்ராவுக்கும் பணமாக அனுப்பித் தள்ளினான். பொருட்களாகக் கொடுத்தனுப்பினான்.

பணமும் பகட்டும், தம்பி அமெரிக்காவில் படிக்கிறான் என்ற பெருமையும் சித்ராவிடம் வந்த பிறகு தானாகவே சம்பாவின் வெறுப்பு மறையப் பாசம் பிய்த்துக் கொண்டு கிளம்ப அவளிடம் குழைந்து குழைந்து வந்தாள். அவளின் அந்த திடீர்ப் பாசம் அடி மனத்தில் 'ச்சே' என்ற வெறுப்பைத் தந்தாலும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை, சித்ரா. பிறகு மாமியாருக்கும் தனக்கும் என்ன வித்தியாசம்? என்று நினைத்துக் கொண்டாள். அன்போடும் மரியாதையோடும் பழகினாள்.

ஆனால் மனத்தின் அடியில் எங்கோ ஒரு சின்ன உறுத்தல். உவ்வா முள்ளாக இருந்தது. அதற்குக் காரணம் உமாதான். எதற்காகத் தங்கள் கல்யாண போட்டோக்களை முரளியிடமிருந்து பெற்று மறைத்து வைத்திருக்கிறாள் என்று நினைத்தாள்.

போட்டோக்கள் வந்த உடனேயே உமா வாங்கிக் கொண்டு விட்டாள். முரளி சித்ராவிடம் கூடக் காட்டவில்லை. "இது எங்கிட்டேயே இருக்கட்டும் முரளி. இதை சித்ராவோட அம்மாகிட்டக் காட்டிடாதீங்க. அதுக்குக் காரணம் இருக்கு. நேரம் காலம் வரும்போது நானே சொல்றேன். இதைப் பத்தி சித்ராகிட்ட எதுவும் சொல்லிடாதீங்க, ப்ளீஸ்" என்று கெஞ்சினாள் உமா.

முரளியும் 'சரி' என்று சொல்லி விட்டான். போட்டோ பற்றிச் சித்ரா கேட்ட போது கூட, "சாரி சித்ரா, நெகடிவ் ஸ்பாயில் ஆய்டுத்தாம். ஒரு பிரிண்ட் கூட எடுக்க முடியலே." என்று ஒரு பொய்யைச் சொன்னான். ஆனால் தற்செயலாக ஒரு முறை கோவிலில் சந்தித்த உமாவின் அப்பா சொல்லி விட்டார்.

"என்னம்மா சித்ரா, போட்டோவெல்லாம் ரொம்ப ஜோராயிருக்கே. எல்லாத்துலயும் லட்சணமா இருக்கே" என்று அவர் சொன்ன போது இவளுக்குத் தலை சுற்றியது.

என்ன நடக்கிறது தன்னைச் சுற்றி? உமா! அவள் தவறு செய்வாள் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தன் குடும்பத்துக்கு எத்தனையோ வழிகளில் உதவி செய்தவள். தெருவோரத்தில் கிடந்த முல்லைக் கொடிக்கு தேராக இருப்பவள். அவள் குடும்பத்தைப் பொறுத்தவரை உமா ஒரு தெய்வம்.

கேவலமான ஆசைகளும், சலனங்களும், துர்ப்புத்திகளும் அணுக முடியாத ஒரு கோவில் அவள் மனசு.

"ஆனால் சில விஷயங்கள்... அவை ஏற்படுத்தும் சந்தேகங்கள்...! உமாவின் மனத்தில் என்ன ரகசியம் இருக்கிறது?" அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எது எப்படியோ முரளி தனக்கு துரோகம் செய்யாமல் இருந்தால் சரி என்று அதோடு விட்டுவிட்டாள்.

மஹாதேவனுக்கு வேலையிலிருந்து ஓய்வு கிடைத்து ஒரு வருடமாகிவிட்டது.

எத்தனை கெஞ்சியும் உமா திருமணத்திற்குச் சம்மதிக்க மறுத்தது அவர்களுக்குக் கவலையையும் பயத்தையும் சில நேரங்களில் ஆத்திரத்தையும் கூடக் கொடுத்தது.

மஹாதேவனுக்கு மட்டும் மனசு உறுத்தியது. ஈஸ்வரிக்குத் தாம் செய்த துரோகத்திற்கு தண்டனையாகத்தான் உமாவுக்குக் கல்யாண ஆசையே வைக்காமல் படைத்துப் பழி வாங்குகிறானோ ஆண்டவன்? பிறந்த ஒரு பெண்ணும் தனி மரமாக நிற்பதை பார்க்கவா பெற்றெடுத்தேன்? என்று எண்ணி எண்ணி மனமுருகினார்.

ஆனால் உமாவுக்கு மட்டும் கொஞ்சம் நிம்மதி. அப்பாவுக்குக் கிடைக்க முடியாத பதவிகளை தெரிந்தோ தெரியாமலோ சித்ரா கொடுத்துக் கொண்டு வருகிறாள் என்று சந்தோஷப்பட்டாள்.

கல்யாணம் பண்ணிக் கொண்டு அப்பாவை முரளிக்கு மாமனாராக்கினாள். குழந்தையைப் பெற்றுக் கொண்டு அவரைத் தாத்தாவும் ஆக்கிவிட்டாள்.

சித்ரா எப்போதாவது குழந்தையுடன்

வித்யா சுப்ரமணியம்

வருவாள். அப்போது குழந்தையுடன் அப்பா கொஞ்சும் போது அவனுக்குச் சந்தோஷமாக இருக்கும்.

மஹாதேவனுக்குச் சித்ராவைப் பார்க்கும் போன இனம் புரியாத சந்தோஷம் ஏற்படுகிறது.

"எப்பவும் நீ மட்டும் வர்றியே. ஒருநாள் உன் மாமியார், அம்மா எல்லாரையும் கூட்டிண்டு வாயேன் சித்ரா" என்று மங்களம் ஒருநாள் சொன்ன போது, "அதற்கென்ன கூட்டிண்டு வந்தாப்போச்சு. என் மாமியார் வந்துடுவா. ஆனால் அம்மாதான் கூச்சப் பிராணி. வேலை செய்யறதுக்கு ஒருத்தர் வீட்டுக்குப் போவானே தவிர மற்றபடி எங்கேயும் போக மாட்டா."

"ரொம்ப நல்லாருக்கு. இங்க வந்தா என்ன? ஒருநாள் கூட்டிண்டு வா."

இந்த சம்பாஷணையைக் கேட்ட உமாவுக்குத்தான் வயிற்றில் புளி கரைத்தது. மறைத்து வைத்திருந்த குண்டு வெடித்து விடுமோ? அதற்கான நேரம் நெருங்கி விட்டதோ என்று பயந்தாள். ஆனால் தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள். ஆண்டவன் இஷ்டப்படி நடந்தே தீரப் போகிற நிகழ்ச்சிகளைத் தடுக்கத் தனக்கு ஏது சக்தி? குண்டு வெடிக்கட்டும். ஆனால் யாருக்கும் ஒரு சின்ன காயத்தைக் கூட ஏற்படுத்தாமல், அது கிணறு தோண்டப் பாறையைத் தகர்க்கும் குண்டாய் வெடித்துப் புனிதமான நீரைப் போல் எல்லோர் மனத்திலும் அன்பையும் நேசத்தையும் கொண்டு வரட்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

என்னதான் பிள்ளை அமெரிக்காவிலிருந்து ஏகப்பட்ட பணம் அனுப்பினாலும் ஈஸ்வரியால் வீட்டில் சும்மா உட்கார்ந்து சாப்பிடப் பிடிக்கவில்லை. தொடர்ந்து வேலைக்குப் போய்க் கொண்டுதான் இருந்தாள்.

ஸ்குவாஷ் தயாரிக்கும் போது எஸென்ஸ் சேர்க்காமல் தயாரித்து வைத்துக் கொண்டு கீழ்க்கண்ட சாமான்களை மேலே தூவிப் பரிமாறினால் ஃப்ரெஷ்ஷாகத் தயாரித்தது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடலாம்.

1. ரோஜா இதழ்கள், 2. புதினா இதழ்கள், 3. ஆரஞ்சுப் பழம் மற்றும் எலுமிச்சம்பழத் தோலைத் துருவி ஃப்ரீஸரில் வைத்தது, 4. ஃப்ரீஸரில் வைத்த வெள்ளரித் துருவல், கமலா ஆரஞ்சு மற்றும் சாத்துக்குடிப் பழ முத்துக்கள்.

— விசாலாட்சி

சித்ரா கூடச் சொல்லிப் பார்த்துவிட்டாள் "எதுக்கும்மா இப்படி உடம்பைக் கெடுத்துக்கற? சிவனேன்னு வீட்ல இருந்து வேளா வேளைக்குச் சாப்பிட்டுத் தூங்கி ரெஸ்ட் எடுத்துக்கோயேன்" என்றாள்.

"ஒண்டிக்கட்டை நான். நீயும் இல்லை, ஹரியும் இல்லை. தன்னந்தனியா வெட்டு வெட்டுன்னு உட்கார முடியலையேடி" என்று அலுத்துக் கொள்வாள் ஈஸ்வரி.

"வெட்டு வெட்டுன்னு உட்கார முடியலைன்னா சொல்லு. பவித்ராவை கொண்டு வந்து இங்க விடறேன். அப்புறம் உனக்கு நேரமே போறாது. அவ்வளவு விஷமம்" என்றாள்.

"ஆமா, சம்பா மாமி இப்போ எப்படி இருக்கா? சண்டை ஏதும் போடறாளா?"

"சண்டையா? அவளா? போடுவாளா? போட்டா இனிமே சும்மா விட மாட்டேன். அம்மம்மா! என்ன பாடு படுத்தினா? எத்தனை மூதேவிக்குத் திட்டினா? அடுக்களைல விட மாட்டா. தானும் எங்களுக்குச் சேர்த்து சமைக்க மாட்டா. கொஞ்சமா அவஸ்தைப்பட்டேன்? ஏதோ இவர் மூஞ்சிக்காக பேசாம பொறுத்துண்டு இருந்தேன். இல்லேன்னா, அப்பவே பல்லைக் கழட்டியிருப்பேன்" வீராப்பாகப் பேசினாள் சித்ரா.

"ச்சீ. அப்படி எல்லாம் சொல்லாதடி பெரியவாளை. மாமி பாவம் வெகுளிதான். பணத்து மேலே ஏதோ சித்த அல்ப ஆசை. அவ்வளோதான். மத்தபடி அவ மனசு தங்கம் மாதிரிதான். முரளிக்கு அழகும் அந்தஸ்தும் இருக்கறதுனாலதான் அவ கேட்டா. இல்லாட்டா கேட்பாளா?"

மாமியாருக்கு அம்மா பரிந்து பேசினதும் கோபம் வந்தது சித்ராவிற்கு.

"உனக்கு எல்லாரும் நல்லவாதாம்மா. உன் கண்ணுக்குக் கெட்டவாளா யாரும் தெரியமாட்டா. அதான் நீ எல்லார்ட்டையும் சட்டு சட்டுனு ஏமாந்துடற" என்றாள் வெடுக்கென்று.

ஈஸ்வரிக்குச் சட்டென்று ஒரு வலி மனசில் ஏற்பட்டு வேதனையைத் தந்தது. வாழ்க்கையில் தான் ஏமாந்த கதையை பெண் குத்திக் காட்டுகிறாளா?

சட்டென்று அம்மாவின் முகம் மாறியதைக் கண்ட சித்ராவுக்கும் அதேதான் தோன்றியது. வெடுக்கென்று பேசி அம்மா மனசை புண்படுத்தி விட்டோமோ? என்று வருத்தப்பட்டவள் பேச்சைத் திசை மாற்ற எண்ணி, "ஏம்மா, உமாவைப் பத்தி நீ என்ன நினைக்கறே?" என்றாள்.

"நினைக்கறதுக்கு என்னடி இருக்கு. அந்த பொண்ணு இல்லாட்டா, இந்நேரம் நாம்ப எப்படியிருப்போமோ. பழைய குச்சு வீட்டுல நான் இன்னும் வாடகை குடுக்க முடியாம திண்டாடிண்டு இருப்பேன். ஹரி இன்னும் பியூனாவே இருந்திருப்பான்.



IPR/1006/MS/87/NAS

இன்னிக்கு வசதியா ஓரளவு மானத்தோட வாழறோம்னு அது உமா போட்ட பிச்சை தாண்டி. அந்தப் பொண்ணு, எங்க இருந்தாலும் சௌக்கியமா இருக்கணும்னுதான் நான் இப்பல்லாம் பகவானை பிரார்த்திக்கறேன்'' என்று தழுதழுப்புடன் கூறினாள் ஈஸ்வரி.

''நீ சொல்றதெல்லாம் சரிதாம்மா. ஆனால் என் மனசுல மட்டும் ஒரு பயமும் சந்தேகமும் இருந்துண்டே இருக்கு. எவ்வளவோ முயற்சி பண்ணினாலும் அதைத் தள்ள முடியலே.''

''என்ன அது?''

''உமாவோட அப்பாதான் என்னைத் தாரை வார்த்து கொடுத்தார்னு சொன்னேனில்லேயா?''

''ஆமாம்.''

''கல்யாணத்துல நிறைய போட்டோ எடுத்தான்னும் சொன்னேனில்லேயா?''

''ஆமாம்.''

''ஆனா ஒரு போட்டோவைக் கூட இது வரைக்கும் நான் பார்க்கலேம்மா. அத்தனையும் முரளிகிட்டேர்ந்து உமா வாங்கிண்டிருக்கா. உமா தன்கிட்டேர்ந்து வாங்கிண்டதை மறைச்சதுமில்லாம போட்டோ எல்லாம் ஸ்பாயில் ஆயிடுத்துன்னு பொய் வேறே சொல்லி இருக்கார், உன் மாப்பிள்ளை என்கிட்ட. ஆனா எதேச்சையா உமாவோட அப்பாவே விகல்பமில்லாம, போட்டோ **நல்லாருக்கேன்னு எங்கிட்ட சொன்னப்ப** தான் எனக்குப் போட்டோ ஸ்பாயில் ஆகலேன்னு புரிஞ்சது. அன்னிலேர்ந்து என் மனசுல என்னமோ ஒரு சந்தேகமும் பயமும் உறுத்திண்டே இருக்கு.

என் மாமியார் வேறே, உமாதான் அந்த வீட்டுக்கு மாட்டுப் பொண்ணா வர ஆசைப் பட்டான்னும் சொல்றா. அதுக்கேத்த மாதிரி ஆசைப்பட்டது நடக்காத சோகத்துலயோ என்னமோ கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறா. இதெல்லாம் நெனச்சாலே எனக்கு ஒண்ணுமே ஓட மாட்டேங்கறதும்மா.''

ரொம்பவும் கவலையுடன் அவள் சொன்ன போது ஈஸ்வரியால் துளிக் கூட நம்ப முடியவில்லை.

உமா மேல் அசிங்கமாக சந்தேகப்படா விட்டாலும் எதற்காக கல்யாணப் போட்டோவை யார் கண்ணுலயும் காட்டாம மறைச்சு வைக்கணும் என்று நினைத்துக் கொண்டாள்.

வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டதும் சித்ரா போய்ப் பார்த்தாள். போஸ்ட்மேன்! ஹரி லெட்டரும் ஒரு பார்சலும் அனுப்பியிருந்தான்.


ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் சித்ரா.

'அன்புள்ள அம்மாவுக்கு ஹரி அநேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பதில் போடு. உன் பேருக்கு இந்த மாசம் ஆயிரம் ரூபா அனுப்பியிருக்கேன். பாஸ் புக்கில் என்ட்ரி போட்டுக்கோ. இத்துடன் பவித்ராவுக்கு ஒரு பிராக்கும் ஸ்வெட்டரும் அனுப்பியிருக்கேன். சித்ராவிடம் அதைக் கொடுத்து விடு. நான் இங்க வந்த காரியம் அமோகமா வெற்றி அடைஞ்சு போச்சு. போன வாரம் தான் என்னோட ஆராய்ச்சிக்கு டாக்டர் பட்டம் குடுத்தா எனக்கு. இங்கேயே நிறைய இடத்துல என்னை வேலைக்குக் கூப்பிடறா. இருந்தாலும் நம்ப ஊர்லதான் என் அறிவைப் பயன்படுத்தணும்னு முடிவு பண்ணி இருக்கேன். அநேகமா இன்னும் நாலஞ்சு மாசத்துல திரும்பி வந்துடுவேன். உமாவைப் பார்க்கறயா? அவங்களுக்கும் நான் கேபிளும் லெட்டரும் அனுப்பியிருக்கேன். வேறே விசேஷம் ஒன்றும் இல்லே.

இப்படிக்கு,
ஹரி.

சித்ரா துள்ளிக் குதித்தாள். ''அம்மா, நம்ப ஹரி, இப்போ ஒரு பெரிய மனுஷனாய்ட்டான்மா!'' என்றாள்.

(தொடரும்)



திராட்சை ஸ்குவாஷ் தயாரிக்கச் சாறு பிழிவதற்கு முன் திராட்சைப் பழங்களை அடுப்பில், வாணலியில் போட்டுச் சிறிது புரட்டி விட்டுத் தயாரித்தால் அதிகமாகச் சாறு கிடைப்பதோடு, அதிகமாகக் காறாமல் இருக்கும்.

— விசாலாட்சி



அதுவரை பொறுத்திரு!

குறுநாவல்

'**வை**த்தி வரப் போகிறான் நாளைக்கு!'

தன் வெண் பட்டு சேலையை எடுத்து இஸ்திரி போட மேஜை மேல் விரிக்கிறாள் ஊர்மிளா. தண்ணீர் தொட்டுத் தடவி, ஆட்டோமாடிக் அயர்னரை, சுருங்கிய ஜரிகை மேல் சர்வ ஜாக்கிரதையாக வைத்து மெல்ல இழுக்கிறாள் ஊர்மிளா.

'எப்படி டிரஸ் பண்ணிக்கணும் தெரியுமா ஊர்மி?'

"...............''

''எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சு, தலையை ஆத்துக் கட்டுக் கட்டிக்க. பவுடர் வேண்டாம். மஞ்சளோட மினுமினுப்பை குறைச்சிடும்.... நடு நெத்தில சின்னதா மெரூன் கலர் குங்குமம் வச்சு, சன்னமா மை தீட்டி, இந்த வெண் பட்டுப் புடைவையைக் கட்டிட்டு நீ சம்மணம் போட்டு ஒக்காந்தா சரஸ்வதியோன்னு தோணும்!''

அப்படி.....

அவன் சொன்னபடி உட்கார்ந்து ஆறு வருடங்கள் ஆயிற்று. வெண் பட்டை அதன் பின் தொடவேயில்லை. அவன் அபுதாபி புறப்பட்டுப் போனது அமாவாசையன்றுதான்.

''அபுதாபில வேலை கிடைச்சிருக்குப்பா எனக்கு.''

ஆர்டரைக் காட்டியதும் வீடு முழுக்க ஹாலில் வந்து நிறைந்து விட்டது.

''என்ன வேலை வைத்தி?'' அம்மா முன்னால் வந்தாள்.

''ஏதோ ஒரு வேலை.... என்ன சம்பளம்னு கேப்பியா, அதை வுட்டுட்டு....?' அப்பா பேயாய் அலைய.

''பில்டிங் காண்ட்ராக்ட் விஷயமாய் வேலையாம்....!''

ஆறு வருட காண்ட்ராக்டாம்! பத்தாயிரம் ரூபாய் சம்பளமாம்! இலவச வீடு, உணவு வசதியாம்!

'சாப்பாடு, வீடு எல்லாம் இலவசம்னு சம்பளம் அப்படியே மிச்சமாச்சே.... உன் செலவுக்கு அதிகபட்சம் ஆயிரம் வைச்சுக் கிட்டாலும் மிச்சம் ஒம்பதாயிரத்தை இங்க அனுப்பிரலாமே!''

''ஆமாம்மா! ஆனா ஆறு வருஷ காண்ட்ராக்ட் கையெழுத்துப் போடணும். இடையில என்ன நடந்தாலும் வர முடியாது? போடட்டுமா?''

'ஆறு வருஷம் வைத்தியைப் பார்க்காம இருக்கணுமா?' தாய்மை லேசாகத் தட்டி விட, அம்மா கேட்டபோது.

'அறிவிருக்காமெ உனக்கு? பத்தாயிரம் மாசச் சம்பளம்மெ.... அவன் செலவு போக வருஷத்துல கிட்டத்தட்ட ஒரு லட்சம். ஆறு லட்ச ரூவா எந்தக் காலத்துல பாக்கறது? நீ சாகும்போது வைத்தியை கூட்டிட்டா போகப் போறே?'

அம்மா அடங்கிப் போனாள்.

அப்பா அவசரப்படுத்தினார். ''எப்பப் போகணும்?''

''அது நம்ம இஷ்டம்! சம்மதம்னு சொல்லிட்டா, நாளைக்கே விசா ரெடியாயிடும்!''

''அடுத்த வெள்ளிக்கிழமை மகாளய அமாவாசை. அற்புதமான நாள். பொறப்படு!''

அப்பா சொந்த வீட்டுக் கனவுகளில் லயித்திருக்க,

தம்பி, புது வி.ஸி. ஆர்., கலர் டீ.வி.க்குத் திட்டம் போடத் துவங்கிவிட்டான்.

தங்கைக்கு வார்ட்ரோப் முழுக்க ஃபாரின் சேலைகள் அடுக்கிப் பார்த்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனை....

மறுநாள் விசாவுக்கு ஏற்பாடு செய்ய, எங்கெங்கோ அலைந்துவிட்டு, இரவு பத்து மணிக்கு வீடு திரும்பினான் வைத்தி.

''எனக்குச் சாப்பாடு வேணும், ஊர்மிளா!''

சாதத்தில் தண்ணீர் விடும் சப்தம்.

''நீ சாப்பிடலே?''

''பசிக்கலே.''

''ஏன் ஒரு மாதிரி இருக்க? உடம்பு சரியில்லையா?'

தேவிபாலா

பதில் பேசாமல் அடுக்களையை அலம்பும் வேலையில் தீவிரம் காட்டினாள்.

வியர்வை, ரவிக்கையில் வரைந்த ஓவியத்துடன், உள்ளே நுழைந்தாள்.

''கோவமா ஊர்மி?''

''நா யாரு இங்க கோச்சுக்க.''

''புரியலே.''

''என்ன சம்பளம் இங்க ஒங்களுக்கு?''

''பிடித்தம் போக ஆயிரத்து முன்னூறு சொச்சம்.... ஏன்?''

''நமக்குக் கஷ்டம் எதுவுமுண்டா?''

''பேச நினைச்சதை பேசிடு ஊர்மிளா.... எதுக்கு சுத்திச் சுத்தி வர்ற?''

''நீங்க அபுதாபி போறது எனக்குப் பிடிக்கலே!''

''ஆறு வருஷம் கழிச்சா நன்மை நமக்குத் தானே?''

''நான் அப்படி நினைக்கலே! இந்த ஆறு வருஷம் எனக்கு நீண்ட ஒரு ஜென்மம். நஷ்டத்தை அனுபவிக்கப் போறது நான் மட்டும் தான். சொத்தும் சொந்த வீடும் வேணாங்க. எனக்கு நீங்க போதும். போக வேணாம். வுட்டுடுங்க!''

''புரிஞ்சுக்கோ ஊர்மி! ஒரு தவமா நினைச்சு இருந்துரு! பின்னால வரப் போற சுகங்களுக்கு ஆரம்பத்துல சில சங்கடங்களை அனுபவிச்சுத்தானே ஆகணும்? எதிர்காலத்துல வீடும், வாசலுமா நம்ம பிள்ளைகளோட வாழும்போது அப்பப் புரியும் உனக்கு! ப்ளீஸ்மா!''

அவளை மெல்ல அணைத்துக் கொண்டான்.

''நீ வேணாம்னா நான் போகலே. நீ சிரிச்சுக்கிட்டே கை காட்டினாத்தான் என்னால தெளிவா விமானம் ஏற முடியும். இல்லேன்னா போற வழில....''

சட்டென்று வாயைப் பொத்தினாள்.

''விடுங்க. எதுவும் சொல்ல வேணாம். நீங்க பொறப்படுங்க!''

''எனக்காகச் சொல்றியா ஊர்மி?''

''இல்ல சாமி... மனசோடத்தான் சொல்றேன்!''

''நிஜம்மா?''

''அப்படிப் பார்க்காதீங்கப்பா. எனக்கு வெட்கமா இருக்கு?''

தோளில் கையிறுக்கி, தன் மேல் சார்த்திக் கொண்டான். சரேலென விலகினாள்.

''ஏண்டா?''

''வேணாம்ப்பா. இன்னிக்கு எதுவுமே வேணாம்!''

''கோவமாடா?''

''இல்லப்பா. வயிறு கலங்கிப் போவுது. இன்னிக்கு மலர்ந்துட்டு, நாளைக்குச் சுமக்க வேண்டி வந்தா, எனக்குச் சத்தில்லேப்பா!''

''நீ என்ன சொல்ற ஊர்மிளா? பிள்ளை வேணும்னு ஒனக்கு ஆசையில்லையா?''

''இருக்கு. நெஞ்சு கொள்ளாம இருக்கத்தான் செய்யுது. ஒரு வாட்டி கூட உங்களால நடுவுல வர முடியாதே!''

''அதனாலே?''

''ஆறு வருஷத்துக்கு அப்பா முகம் காணாம எம்புள்ளே வளரணுமா, சொல்லுங்கப்பா.... அது, 'எங்கம்மா, எங்கப்பா?'ன்னு கேட்டா ஒவ்வொரு கேள்வியும் ஊசியா என்னைக் குத்துமே. ஆறு வருஷம் பொறுத்து நீங்க வந்து வாசல்ல நிக்கும்போது, அறிமுகமில்லாம, 'யாரிந்த அங்கிள்'னு அது கேட்டாக்க, அந்த நொடியே என் உயிர் போயிடும்பா! எனக்கு இந்தத் தண்டனை அவசியமா?''

மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

அழுது ஓயட்டும் என்று பேசாமல் இருந்தான் வைத்தி. பாவம், பலமாக அடி வாங்கியிருக்கிறாள். தன் அபுதாபிப் பயணம் பெரிய அளவில் இவளைக் காயப்படுத்தியிருக்கிறது. அதிலிருந்து இவளை மீட்க வேண்டும். பஞ்சால் ஒற்றுவது போல் நிதானமாகப் பேச வேண்டும்.

கூந்தலைத் தடவிக் கொடுத்தான்.

மாரில் சாய்த்துக் கொண்டு, இதமாக முதுகை வருடிக் கொடுத்தான்.

குரலை நன்றாகத் தழைத்துக் கொண்டு, கிசுகிசுப்பாக,

''நான், நெனச்சதைச் சொல்லட்டுமா ஊர்மி?''

''ம்!'' கேவலுடன் வந்தது குரல்.

''நான் இல்லேன்னாலும் ஆறு வருஷமும் என்னை நீ தினமும் கொஞ்சலாம்!''

விருட்டென நிமிர்ந்தாள்.

குழப்பத்தோடு விழித்தாள்.

''உன் பிள்ளை, என் கண்ணையும், என் உருவத்தையும் கடன் வாங்கிட்டு, உன் மடில மல்லாந்து கிடக்கும்போது, முந்தானையைப் பிடிச்சு இழுத்து, மாரைத் தொடும்போது, உன் முகமெல்லாம் எச்சில் கோலம் வரையும்போது நான்தான்னு ஒனக்குத் தோணாதா?''

தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''தோணுமா, தோணாதா?''

''இப்படி ஒரு கோணத்துல நான் பார்க்கவேயில்லேப்பா!''

''இப்பப் பார்த்துட்டயில்லே! ஏற்பாடுகளைச் செய்யட்டுமா?'' குறும்பாக அவன்

வாய்ப்புண்ணுக்கு:

அரிசி போட்டுக் கொதிக்கும் நீரில் இரண்டு கரண்டி எடுத்து (அரிசி இல்லாமல்) நெய்யில் சீரகம் வறுத்துப் போட்டுச் சீரகத்துடன் மூன்று வேளை நீரைப் பருக குணம் தெரியும்.

— சரோஜா.

கண்சிமிட்ட, வெட்கத்தில் சிவந்து அவன் மடியில் சரிந்தாள்.

''அணைச்சுக்கட்டுமாடா?''

'முதலில் என்னை' என்றது விளக்கு.

2

சரியாக ஒரு மாதம் முடிந்ததும், வைத்தியிடமிருந்து ஒன்பதாயிரம் ரூபாய்க்கு டிராப்ஃடு வந்தது. கூடவே லெட்டரும்....

அவன் என்ன எழுதியிருக்கிறான் என்பதைப் பற்றி யாரும் அங்கு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த டிராஃப்டை தொட்டும், தடவியும் அப்பா ஆசையோடு பார்க்க,

கடிதத்தைக் கையிலெடுத்தாள் அம்மா...

இரண்டு கடிதங்கள்!

ஒன்றின் மேல் ஊர்மிளா என்று எழுதியிருக்க, அதைக் கொஞ்சம் நிஷ்டூரமாக மருமகளின் கையில் வைத்து அழுத்தினாள்.

அதை வாங்கும்போதே, வைத்தியின் விரல்களை ஸ்பரிசிப்பது போல உணர்ந்தாள்.

எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

''மை டியர் ஊர்மி!

இச்! இச்! இச்!

சிவந்து போய் முகத்தை மூடிக் கொண்டாள். கண்களைச் சின்னதாகத் திறந்து கடிதத்தின் மேல் படர விட்டாள்.

'வந்த பத்து நாட்களில், திரும்பி விடலாமா என்ற அளவு தனிமை என்னைத் தாக்கியது. தண்ணீருக்குக் கூட விலை கொடுக்கும் சங்கடம் தேவைதானா என்று தோன்றியது. சாப்பாடே பிடிக்கவில்லை. படுத்தால் தூக்கம் வருவதில்லை. கடமையை நினைத்துக் கண்களை மூடிக் கொண்டேன். உன்னை நினைத்தால், தூக்கம் வரவில்லை, ஏக்கம்தான் வருகிறது!''

கடிதத்தை விரல்கள் கவ்வியிருக்க, அப்படியே மடிந்து உட்கார்ந்து கொண்டு அழுதாள். வெகு நேரம் அழுது விட்டு மறுபடியும் படித்தாள்.

.... தேற்றிக் கொண்டுவிட்டேன். உன்... (இனிமேல் ஊர்மிளாவுக்கு மட்டும். வாசகர்களுக்கு வேண்டாம்) ரூபாய் ஒன்பதாயிரம் பணம் அப்பாவுக்கு அனுப்பியிருக்கிறேன். உனக்கு எதுவும் தேவையானால் வாங்கிக் கொள். இந்தக் கடிதம் எழுதும் நாள், நான் வந்து முப்பது நாள். நீ குளித்து விட்டாயா?''

குபீரென்று எழுந்தாள்.

'நான் எப்படி இதை மறந்தேன்? எத்தனை நாளாயிற்று? வைத்தியின் 'அந்த' நாளிலிருந்து கூட்டிப் பார்த்தபோது ஏறத்தாழ நாற்பதைத் தொட்டுக் கொண்டிருந்த நாட்கள். இதுவரை எதுவும் நிகழவில்லையே! இருபத்து மூன்று நாட்களைத் தாண்டாதே! மணியடித்தது போல வந்துவிடுமே! அப்படியானால்.... அப்படியானால்.....

அதுதானா?

..... உடனே எழுதுவாயா? அடுத்த கடிதம் நான் எழுதும்போது, உனக்குள் நான் உருவாகியிருக்க வேண்டும். நம்பலாமா? அடுத்த கடிதத்தில் பார்க்கலாமா? அன்பு முத்தங்களுடன் — உன் வைத்தி.

''ஊர்மிளா... உள்ளே என்ன செஞ்சுகிட்டு இருக்க?''

''தோ வர்றேன் அத்தை!''

''என்ன எழுதியிருக்கான் என் பிள்ளை?''

சங்கடமாக நெளிந்தாள். அந்தரங்கத்தை அரங்கத்தில் வைத்து சொல்லச் சொல்கிறான் மாமியார். முடியுமா?

மேம்போக்காகச் சொன்னாள்.

''சரி, என்ன தீர்மானிச்சீங்க? அம்மா அப்பாவிடம் கேட்க, மகேஷ் சொன்ன மாதிரி ஒரு கலர் டீ.வி.யே வாங்கிரலாம். இந்த மாசம் அவனோட கோட்டா....!''

'அப்பா அடுத்த மாசம் என்னுது! புவனா அவசரமாகக் குறுக்கே வந்தாள்.

''தோ, பாருங்க, முதல் மூணு மாசத்தை உங்க பிள்ளைங்களுக்கு விடுங்க. அடுத்த மூணு எனக்கு! வீட்டுக்கு வேண்டிய சாமானெல்லாம் வாங்கியாகணும்!'' அம்மா முன்னால் வந்தாள்.

''ஏண்டி ஆளுக்கு ஆள் பட்ஜெட் போட்டுக்கிட்டே போனா என் பிளான் என்னாவுது? பெசன்ட் நகரில் மகாலக்ஷ்மி அவென்யூ பக்கத்துல ரெண்டு கிரவுண்ட் வந்திருக்கு... ஒரு லட்சம்தானாம்!''

''அவ்ளோக்கு எங்கே போவீங்க?''

''வெளில ஏற்பாடு பண்ணிட்டு, மாசா மாசம் கட்ட வேண்டியதுதான். மழை விட்டுட்டு, மண் சுமக்கணும்னா நடக்காதுமா....!''

நிலைப்படியில் சாய்ந்து நின்று கொண்டாள் ஊர்மிளா.

முதல் மாதம் மகேஷ்.

அடுத்தது புவனா....

பிறகு அத்தை....

அதன் பின்னால் மாமாவின் வீட்டுப் பிளான்!''

நான் யார் இங்கே?

''அப்பாவுக்கு ரூ 9000 அனுப்பியிருக்கேன். உனக்கு எதுவும் தேவையானால் வாங்கிக் கொள்!''

சொல்ல முடியுமா?

அவரது தவிப்பை எழுதியிருப்பாரா?

முற்றிய முருங்கைக்காய், வாழைத்தண்டு போன்றவற்றைத் தோல் சீவி விட்டுப் பிறகு நறுக்கலாம். முருங்கைப் பிஞ்சுகளை நறுக்கி ரசத்தில் போட்டால் சுவையாயிருக்கும்.

— ரம்யா

திட்டத்துக்கு மேல் திட்டம் போடும் இந்தக் கூட்டம், பணம் அனுப்பிய அவரைப் பற்றி இதுவரை ஒரு வார்த்தை கேட்கவில்லையே!

''அத்தே, அந்த லெட்டர்ல விலாசம் இருக்கா?''

''ஏன்?''

''நான் அவருக்கு எழுதணுமே!''

''எழுதி உங்க மாமாகிட்டக் குடு. அவர் போஸ்ட் பண்ணிடுவாரு! லெட்டர் இப்பத் தானே வந்திருக்கு. அதுக்குள்ள பதில் எழுத என்ன அவசரம்?''

தான் குளிக்காத செய்தியைச் சொல்ல லாமா என்று யோசித்தாள். சட்டென நின்றாள்.

இந்த நிமிஷத்தில்....

அது யாரையும் இங்கு சந்தோஷப்படுத் தும் என்று தோன்றவில்லை. உறுதியாகட் டும், பிறகு சொல்லலாம் என்று பட்டது. ஆனால் அவருக்கு எழுத வேண்டும்.

''மசமசன்னு நிக்காதம்ம. தண்ணில ஊறிக் கிட்டு இருக்கிற துணிஸ்ய உங்க ஆத்தா வந்து அலசுவாளா? வேலையைப் பாரு போய்!''

கண்ணோரம் எட்டிப் பார்த்த துளியை விரலால் சுண்டியபடி நகர்ந்தாள் புழக்கடைப் பக்கம்.

3

தயங்கியபடியே அந்தக் கடிதத்தை நீட்டினாள். ''மாமா, இந்தக் கடுதாசியை அவ ருக்கு அனுப்பிடுங்க!''

அதை வாங்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டு, ரேழியைக் கடந்து வாசல் பக்கம் வந்தபோது, எதிரே மாமியார் வழி மறித்தாள்.

''லெட்டர் குடுத்தாளா?''

''ஆமா, என் லெட்டரோட அதையும் போஸ்ட் பண்ணிர்றேன்!''

''கொஞ்சம் இருங்க!''

''என்ன தங்கம் சொல்றே?''

''அதுல என்ன எழுதியிருக்குனு பாக் கோணும்!''

''ச்சீ, அது அசிங்கம்மே.... புருஷனுக்குப் பொஞ்சாதி ஆயிரம் எழுதுவா. நாம படிக் கறது அநாகரீகம்!''

''வைத்தி எம்புள்ளை.... எடுங்க கடுதாசி யை!''

காலங்காலமாய் கூஜா தூக்கிய பழக்கத் தில் எதிர் வார்த்தைக்கு தெம்பில்லாமல் சொன்னபடி செய்தார்.

பிரித்தாள்.

பிரியமுள்ள வைத்திப்பா!

(சண்டாளி,புருஷனை பேர்வச்சு எழுதறா!)

நீங்கள் அங்கு கஷ்டப்பட வேண்டாம். நமக்குப் பணமும் வேண்டாம். வந்து விடுங் கள் உடனே. நீங்கள் இல்லாமல் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு நரகமாக இருக்கிறது. இன்னும் ஆறு வருடங்கள்வரை நான் எப்படி இருப்பேன்?

நம் பிள்ளைக்கு வயது நாற்பத்திரண்டு நாட்கள். பார்க்கத் தோன்றுகிறதா வைத்திபா? எனக்கு நீங்கள் மசியவில்லை. உங்கள் பிள்ளை உங்களைக் கரைக்கட்டும்.

பிற பின்னர். — உங்கள் ஊர்மி.''


''பார்த்தீங்களா இதை?''

படித்துவிட்டு, ''என்ன புதுசா?''

''ஒங்களுக்கு மரமண்டை!''

''தெளிவாச் சொல்லுடி.''

''துணிச்சல்காரி.... தான் குளிக்காததை நம்ம வீட்ல சொல்லாம புருஷனுக்கு



எழுதறா!''

''அதனால?''

''இந்தச் செய்தி அவனைச் சலனப்படுத் தும். இன்னும் இது மாதிரி நாலு கடுதாசி இவ எழுதினா, அவன் வேலையைத் தூக்கி எறிஞ்சிட்டு வந்து நிப்பான். அப்புறமா உங்க ரெண்டு கிரவுண்டும், அதுல பங்களா வும்மொசைக்தரையும்கனவுலதான்...பெரிய கூடையா ஒரு கூடை மண்! தேவையா?''

''ஆமாண்மயோவ்! இது எனக்குத் தோணவேயில்லை பாரு!''

''எதுதான் உடனே தோணிச்சு ஒங் களுக்கு?''

''என்ன தங்கம் செய்யலாம் இப்ப?''

''கடுதாசியை கிழிச்சு எறியுங்க. மருமவ அவ புத்தியக் காட்டத் தொடங்கிட்டா!''

''கிள்ளிருவோமா?''

''அவசரப்படாதீங்க.... நம்ம மேலே அவ ளுக்கு சந்தேகமே வராம நடந்துக்கோணும். வைத்தியை பெரிய ஆதரவா நெனச்சு மிதக் கறா. அவ கண்ணை, அவ கையை வைச்சே குத்தோணும். படிச்ச புள்ளை வேறயா... ஏமாந்தா நம்பளையே விரட்டிருவா. அதுக்கு முன்னால நாம முந்திக்கோணும்!''

''படபடன்னு பேசறே, எனக்கு எதுவுமே புரியலே!''



"போகப் போகப் புரிய வைக்கிறேன் இந்தத் தங்கம் யாருன்னு!"

காலடிச் சப்தத்தில் அவர்கள் நிமிர, வாசல்படியில் நின்றாள் ஊர்மிளா.

4

ஐம்பது நாட்களைக் கடந்ததும் வாந்தி ஆரம்பமாகிவிட்டது. வயிற்றிலிருந்து தொண்டை வரை கூட்ஸ் வண்டி போல இரைச்சலிட்டது.

தன் கடிதம் வைத்திக்குப் போகாது என்று தெரிந்ததும் இன்னும் வயிறு கலங்கிப் போனது. அத்தையின் அரைகுறைப் பேச்சில் தன்னைச் சுற்றி பின்னப்பட்ட வலை மெளிதாகப் புரிந்ததும், தலையைச் சுற்றியது.

'ஏன், என் கடிதத்தில் விலாசம் எழுதாமல் போனாய் என் கணவனே?'

"அத்தை நான் தள்ளிப் போயிருக்கு!" மெதுவாகச் சொன்னாள்.

"ம்!"

"டாக்டர்கிட்ட போய்ப் பார்க்கலாமா?"

"பொம்மனாட்டியாய் பொறந்தா வர்றது தானே. டாக்டர்கிட்டப் போய் என்ன செய்யப் போறே?"

"நிச்சயப்படுத்திக்கத்தான்!"

"எனக்கு இன்னிக்குக் கோயிலுக்குப் போகணும். லட்சார்ச்சனை. பக்கத்துத் தெரு தானே, நீயே போயேன்!"

"காசு வேணும் அத்தை!" கேட்கும் போதே கூசியது.

பத்தாயிரம் சம்பாதிக்கும் கணவன் இருக்க, பத்து காசுக்குப் பிச்சையெடுக்கும் அவல நிலை. அந்த நொடியே உயிரை விட்டு விடலாமா என்று கூட ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது.

"மாமாகிட்ட வாங்கிகிட்டுப் போ!"

"........"

"நில்லு! பாத்ரூம் தேச்சு பத்து நாளாச்சு. பாசி படிஞ்சு போயிருக்கு தரையெல்லாம். வயசு காலத்துல வழுக்கி விழுந்தா கபால மோட்சந்தான். தேச்சுரு!"

''சரி அத்தே!''

நெஞ்சுக்குள் வெறுப்பு மண்டிக்கிடக்க, துக்கம் தொண்டைக்குள் பந்து விளையாட, பாத்ரூமில் வலது காலை வைத்து, அழுத்தி பாதத்தை ஊன்ற, பிடிமானமில்லாமல் கால்கள் சரேலென இழுத்துக் கொண்டு போக, கைப்பிடிக்குத் தத்தளித்து, கதவும் கை விட, அடி வயிறு கலங்கி, அய்யோ என்ற அலறல் தொண்டைக்குள் ஜனித்து, உள்நாக்கில் மடிந்து, இடுப்புப் பகுதி தரையைத் தொடும் போது துப்புரவாக நினைவை இழந்திருந்தாள் ஊர்மிளா.

கண்களை விழிக்கும்போது இரண்டு முழு நாட்களை தான் தூக்கத்தில் கழித்திருந்தது அவளுக்குத் தெரியவில்லை.

பக்கத்தில் நர்ஸ். அது ஒரு ஆஸ்பத்திரிக் கட்டில். தலையில் பான்டேஜ். தூரத்தில் மெலிதாக ரயில் இன்ஜினின் இரைச்சல்.

''நான் நான்....

கனிவாகச் சிரித்த அந்த நர்ஸ், ''அலட்டிக்காதேம்மா.... இப்பத்தான் உனக்கு நினைவு திரும்பியிருக்கு!''

''என்னாச்சு எனக்கு?''

''உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. இன்னும் ரெண்டு நாள் போனா நீ டிஸ்சார்ஜ் ஆயிரலாம்!''

மெல்ல உடம்பை அசைத்துப் பார்த்தாள்.

''எனக்கு.... எனக்கு 'ஐம்பது நாள் முடிஞ்சு......!''

''ஸாரிம்மா, அது கலைஞ்சுப் போச்சு! ஆனா நீ பிழைச்சியே! இதுமாதிரி இன்னொண்ணு நாளைக்கே உருவாகலாம். அசல் ஆபத்தில்லாம இருந்தா சந்தோஷப்பட வேணுமா?''

''நாளைக்கே முடியாது ஸிஸ்டர், இன்னும் ஆறு வருஷம் பொறுத்துக்கணும்!'' அழத் தொடங்கினாள்.

''என்னம்மா சொல்ற நீ?''

மாமியார் உள்ளே நுழைந்தாள்.

பார்வையிலோ, பேச்சிலோ தப்பித் தவறி கூடக் கனிவு வராமல் கவனமாகப் பார்த்துக் கொண்டாள்.

''என்னிக்கு ஸிஸ்டர் கூட்டிட்டுப் போறது?''

''ரெண்டு நாளாகும்மா!''

''ஏற்கெனவே, செலவு அஞ்சு நோட்டு வந்தாச்சு. அவன் அனுப்பித் தர்ற பணம் இவளுக்கே சரியாப் போயிடும்! வயித்தையும் சுத்தமா துடைச்சாச்சு. எல்லாம் ராசி! அழுது தொலைக்காதே, யாராச்சும் என்னைத் தப்பா நினைப்பாங்க!''

அவள் போனதும்,

நர்ஸ் அருகில் வந்தாள்.

''உங்ககிட்ட நான் பேசணும் ஸிஸ்டர்!''

''ரெண்டு மணி நேரம் பொறுத்துக்கோம்மா. டாக்டர்ஸ் ரவுண்ட்ஸ் வர்ற நேரம். நீ படுத்துக்கோ....!'' போர்வையை கழுத்து வரை இழுத்துவிட்ட பின் அவள் அகன்றாள்.

யோசிக்கத் தொடங்கினாள் ஊர்மிளா.

''பாருங்க வைத்திபா.... உங்க பிள்ளையைக் கொஞ்சக் கூடத் தெய்வம் எனக்கு அனுமதி தரலை. அது ஒண்ணுதான் எனக்குப் பிடிமானம்னு நினைச்சேன். இப்ப இல்லாமப் போச்சு. என் லெட்டர் உங்களுக்கு வராது. அநேகமா உங்க லெட்டரும் எனக்குக் கிடைக்காது. நமக்குள்ள ஒரு விரிசலை ஏற்படுத்தி, அது ஆறு வருஷத்துக்குள்ளே, அடக்க முடியாத ஒரு பள்ளமா மாறப் போகுதா? நோ, நான் இதை அனுமதிக்க மாட்டேன். ஏதாவது செய்யணும்! செஞ்சே தீரணும்!

நர்ஸ் வந்தாள். கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

''என்ன பேசணும் ஊர்மிளா? நான் இப்ப ஃப்ரீதான்!''

''உங்க பேரென்ன ஸிஸ்டர்?''

''ஹெலன்! நீ விரும்பினா பேர் சொல்லியே கூப்பிடலாம். தோழிகளா இருப்போமே!''

கைகளைச் சட்டெனப் பிடித்துக் கொண்டாள் ஊர்மிளா. கண்ணீர் 'நான் வரட்டுமா?' என்று கேட்டது.

''சொல்லுமா?''

சொன்னாள்.

வைத்தி அபுதாபி போனது முதல், நேற்று நடந்ததுவரை சகலத்தையும் வரி விடாமல் சொன்னாள்.

''உனக்குப் பிறந்தவீட்டு மனுஷங்க இல்லையா ஊர்மிளா?''

''இல்லை ஹெலன். எட்டு வயசுல அப்பா, அம்மாவை ஒரு விபத்துல இழந்துட்டேன். யார் யாரோ வளர்த்து, எப்படியோ வாழ்ந்து கடைசில வைத்திகிட்ட வந்து சேர்ந்தேன். எங்களுது காதல் கல்யாணம். அதுனால தான் இந்த வீட்ல எனக்கு மாற்றாந்தாய் சலுகை. பிள்ளையை விட மனசில்லை. அதுனால என்னை ஒப்புக்கிட்டாங்க. வைத்திக்கு இது புரியலை. புரிஞ்சிருந்தா என்னை விட்டு அவ்ளோ தூரம் போயிருப்பாரா? இனி வரும் நாட்களை நான் எப்படி ஹெலன் தாண்டப் போறேன்?''

''உன் புருஷனோட விலாசம் தெரியாதா உனக்கு?''


''தெரியலை ஹெலன்!''

தட்டை செய்யும் போது கடலைப் பருப்பு, பொட்டுக் கடலையை முழுதாகப் போடுவதற்குப் பதில் மாவாகச் செய்து போட்டால் தட்டை மணமாயிருக்கும். தட்டைகளைச் செய்வதற்கும் சௌகரியமாயிருக்கும்.

— ரம்யா.

நியூட்ராமுல் சக்தி







வளம்கொழிக்கும் அமுல் பால். நலம் தரும் மால்ட். இனிக்கவைக்கும் கோக்கோ.
இவற்றின் நற்பயனுக்குத் தான் வலிமையூட்டுகிறது நியூட்ராமுல். எதனுடனும் மிஞ்சமுடியாத சுவையிலேயே கிடைக்கிறது :

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ராமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.

நியூட்ராமுல்

விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக

ஆனந்த் 388 001.

daCunha/GCM/135/86 TAM

''அவரோட பழைய ஆபீஸ் தெரியுமா உனக்கு?''

''ம், தெரியும்!''

''அங்கே விசாரிச்சா, புது விலாசம் தெரிஞ்சிருக்கலாம்! கவலைப்படாதே, நான் இருக்கேன் உனக்கு! என்ன படிச்சிருக்கே ஊர்மிளா?''

''எஸ்எஸ்எல்ஸி வரைக்கும்!''

''டைப்பிங் தெரியுமா?''

''ஷார்ட் ஹாண்ட் கூடத் தெரியும்!''

''அடி சக்கை, அது போதும். வேலை வாங்கித் தந்தா 'போவியா?''

''அய்யோ, மாமியார் வீட்ல அனுமதிக்க மாட்டாங்க ஹெலன். அவருக்குச் சொல்லாம?''

''நீ பிழைக்கவே போறதில்லை ஊர்மிளா. உன் கதையைக் கேட்டா, போகப் போக அந்த வீட்ல உன் நிலை ரொம்ப மோசமாகும். நாம நாசமாப் போக நாமேதான் ஒரு விதத்துல காரணமாயிருக்கோம்.''

''புரியலை ஹெலன்!''

''தன்னம்பிக்கையும், தைரியமும் குறைஞ்சு போனதாலதான் நசுக்கப்படறோம். மாமியார் வீட்ல கொடுமை.... உடனே கெரஸினை ஊத்திக் கொளுத்திக்கோ. வெக்கமாயில்லை? பெரியவங்க மேலே மரியாதையும், தாலிக்குத் தர்ற கௌரவமும் ஒரு எல்லை வரைக்கும்தான். ஓடற வரைக்கும்தான் நாய் துரத்தும். திரும்பி நின்னு, கல்லெடுக்கக் குனிஞ்சாலே போதும், அது ஓடும்.''

''மஞ்சப் பூசி குளிச்சுட்டு, மாவரைக்க மட்டுந்தான் தெரியும்னு காலங்காலமா ஒரு அபிப்ராயத்தை ஏற்படுத்தி வச்சதாலதான் மாவுக்குப் பதிலாப் பெண்களைப் போட்டு அரைச்சுக்கிட்டு இருக்காங்க! ஓரளவு படிச்சு, திடமா, கால் ஊனி நின்னு, நிமிர்ந்து பார்த்தா, சமூகம் உன் பின்னாலே வரும்.

''உன் கையிலே பைசா கிடையாது. ஆனா உன் புருஷனோட வருமானம் மாசம் பத்தாயிரம் ரூபாய். நீ ஏமாந்தப்பட்டு இருக்கே! கையில காசில்லாதவரைக்கும், உன் சொந்தக் கால்ல நீ நிக்க முடியாது. நிக்கவே முடியாத ஒருத்தியால எப்படிம்மா நடக்க முடியும்? யோசனை பண்ணு. நாளைக்கு உண்மையான விலாசமே கிடைச்சாக் கூட, உன் புருஷனுக்குக் கடுதாசு எழுதக் கூட மாமா கிட்டே கையேந்தி நிக்கணும்... இந்த அவல நிலையை நீ நினைச்சா, நீக்க முடியும்.''

ஹெலன் பேசிக் கொண்டே போனாள்...

நிஜம்தான்! அத்தனையும் சத்திய வார்த்தைகள்! தன்னை சகதியிலிருந்து மீட்க, ஆண்டவனால் அனுப்பப்பட்ட தாய் இந்த ஹெலன். இவளை உபயோகித்துக் கொள்ள வேண்டும். இவள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும்.

''என்ன ஊர்மிளா எதுவுமே சொல்லலை? நான் சொல்றது சரியாப் படுதாம்மா?''

''வேலைக்கு ஏற்பாடு பண்ணு ஹெலன்!''

''குட்!''

''உன்னைப் பத்தி எதுவுமே சொல்லலையேம்மா!''

''நான் ஒரு விதவை ஊர்மிளா. அந்த ஸ்தானம்கூட என்னளவுல கொஞ்சம் அபத்தம்தான். கல்யாணம் முடிச்சும் புருஷன் கூட ஒரு நாள் கூடச் சேரலை. அவங்க கேட்ட வரதட்சணையைத் தர என் தம்பியால முடியலை. ஆறு மாசம் தம்பி கூடவே இருந்தேன். அவர் ஒரு விபத்துல செத்துப் போனார். நான் இப்ப விதவை. சிரிப்பு வரலை உனக்கு?''

''நீ வேறே கல்யாணம் செஞ்சுக்கலாமே ஹெலன்?''

''அவசியம்னு படலை. இந்த நர்ஸ் உத்யோகம் சந்தோஷமா இருக்கு. காலைல ஆறு மணிக்கு இங்க வந்திடுவேன். ராத்திரி ஒன்பதுக்குத்தான் வீடு திரும்புவேன். அப்புறமா சமையல். பதினொரு மணிக்கு நானும் தம்பியுமா ஒக்காந்து சாப்பிடுவோம். படுக்கையில விழும்போது நடு ராத்திரி.... அடிச்சுப் போட்ட தூக்கம். திரும்பிப் படுக்கறதுக்குள்ள விடிஞ்சிடும். யோசிக்க நேரமில்லாத இந்த வாழ்க்கை எனக்குப் பிடிச்சிருக்கு ஊர்மிளா. அக்கடான்னு கொஞ்சம் சாஞ்சு ஒக்காந்தா, வேண்டாத நினைவுகள் வரும். தவிர்க்கத்தான், ரெஸ்டே வேணாம்னு உழைக்கிறேன். தப்பா ஊர்மிளா?''

டிஸ்சார்ஜ் செய்யும் நேரம் யாரும் வீட்டில் இல்லை. அதற்குள், ஹெலனிடமிருந்து பேப்பர் பெற்று, அப்ளிகேஷன் எழுதி, தயாராக வந்திருந்த அவள் தம்பி டேவிட் மூலம் கொடுத்தனுப்பினாள்.

வீட்டுக்கு வந்தபோது,

வைத்தியிடமிருந்து அடுத்த மாதப் பணம் வந்து, பட்ஜெட் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.


''லெட்டர் இருக்கா அத்தை?''

''உனக்கு எதுவும் இல்லை!'' சுருக்கமான பதில்.

பொய்! கட்டாயம் எழுதியிருப்பார். ஏன் பதில் போடவில்லை என்று கொஞ்சம் கோபம் தொனிக்கவே எழுதியிருப்பார். இவர்களால் மறைக்கப்பட்டிருக்கிறது அந்தக் கடிதம்.

ஹெலன் சொன்னது வாஸ்தவம்தான்.

சுயமாக காலை வீசி நடந்தால்தான் நிஜத்தைத் தரிசிக்க முடியும். இந்தக் கூட்டத்தில்



அழுகல் தேங்காயிருந்தால் அதனுடன் சிறிதளவு சுச்சகாவையும் சேர்த்து அரைத்துத்தலைக்குத்தேய்த்துக்கொண்டு குளித்தால் தலைமுடி மிருதுவாயிருக்கும்

— ரம்யா.

இருக்கும்வரை விடிவில்லை.

பேசாமல் உள்ளே போய்விட்டான்.

ஊர்மிளா உள்ளே போகும்வரை காத்திருந்துவிட்டு, அவசரமாக வாசலுக்கு ஓடினாள் மாமியார்.

ரவிக்கைக்குள் இருந்த கடிதத்தை எடுத்து அவசரமாகப் படிக்கத் தொடங்கினாள்.

''அப்பாவின் கடிதம் மட்டும் வந்ததே. ஒரு மாதமாக நீ ஏன் எழுதவில்லை என்று கோபப்பட்டு எழுதியிருந்தான் வைத்தி. மேலும் சில கொஞ்சல்கள். முடிவில், தற்போதைய விலாசம் மாறிவிட்டது என்று சொல்லி, புதிய விலாசத்தைத் தெளிவாக எழுதியிருந்தான்.

மாமியார் அதைக் கிழித்துப் போடும் நேரத்தில்,

ஹெலன் வைத்தியின் பழைய ஆபீசில், பழைய விலாசத்தை வெகு சிரத்தையாக காகிதத்தில் எழுதிக் கொண்டிருந்தாள் ஊர்மிளாவுக்காக.

5

"அத்தே!''

எதிரே வந்துநின்றஊர்மிளாவைநிமிர்ந்து பார்த்தாள்.

''என்னடீ?''

''இன்னிக்குத் தபால்ல வந்தது இது?''

''என்னது?'' மாமா கை நீட்டினார்.

அதைக்கொடுக்காமல், அவர்களை நிதானமாகப் பார்த்தபடி, 'எனக்குத் தாம்ஸன்ல வேலை கிடைச்சிருக்கு! அதுக்கான உத்தரவு இது! நாளைக்குச் சேரணும்!' சம்பளம் எண்ணூத்து நாப்பது ரூபா... ஸ்டெடினு வேலை!''

''எப்ப அப்ளை பண்ணினே? யாரைக் கேட்டுப் போட்டே?''

''யாரைக் கேக்கணும்?''

அதிர்ந்து போய்ப் பார்த்தார்கள் அவளை.

இன்னொரு யோசனை

சென்ற இதழில் பிரஷர் குக்கர் அடியிலுள்ள கறையைப் போக்க வழி என்ன என்று ஒரு பெண்மணி கேள்வி கேட்டதற்குச் சில முறைகளைச் சொல்லியிருந்தீர்கள். இதோ, நான் அனுபவத்தில் கண்ட மிகச் சுலபமான வழி. குக்கரின் அடியில் தண்ணீர் விடும்போது அதில், கறை நிறைய இருந்தால் அரை ஸ்பூனுக்கும் குறைவாக ஒரு சிட்டிகை ஸிட்ரிக் ஆஸிட் போட்டு விடுங்கள். இது போல ஒரு வாரம் செய்தால் புதுக் குக்கர் போல் 'பளிச்-' என்று ஆகிவிடும். பிறகு கறைக்குத் தகுந்தாற் போல் ஒரு சிட்டிகை போட்டால் போதும்.

— ராதா ராமகிருஷ்ணன்.

''நீ இந்த வீட்டு மருமவ். எங்க மகனோட பெண்டாட்டி. அவன் இல்லாத சமயத்துல, இஷ்டத்துக்கு ஊர் மேயப் போவேன்னு சொன்னா, கேக்காம, வாய் மூடியா இருக்க முடியும்?''

''என்ன சொன்னீங்க இப்ப? உங்க மகனோட மனைவியா? அப்படி ஒரு உறவு எனக்கு உண்டா இந்த வீட்ல?''

''என்னடீ உளர்றே?''

''இல்லை, இப்பத்தான் தெளிவா இருக்கேன். எனக்கும், என் புருஷனுக்கும் நடுவுல இருக்கிற பாலத்தை உடைக்கிற வேலை மும்முரமா இந்த வீட்ல நடக்கறது எனக்குத் தெரியும். அவர் சம்பாதிக்கற பத்தாயிரமும் எனக்கே வேணும்னு நா கேக்கலை. ஆனா எனக்கும் அதுல பாத்தியதை உண்டுன்னு சொல்றேன். அட, பணம் வேணாம். வர்ற லெட்டர் கூடவா நின்னு போகும். 'அன்புள்ள குப்பைத் தொட்டிக்கு'ன்னு அடுத்த லெட்டர்ல அவர் எழுதலாம். ஏன்னா எனக்கு அவர் எழுதறது 'அங்கதானே போவுது?''

''நிறுத்துடீ உன் நியாயத்தை! என்னடீ செய்வே?''

''சீறாதீங்க அத்தை. நான் உங்க அக்கிரமத்தைத் தடுக்கலை. ஆனால் நான் வேலைக்குப் போறதா முடிவு செஞ்சிட்டேன்!''

''எங்களை மீறிப் போனா, நீ இந்த வீட்லருந்து அதைச் செய்ய முடியாது.

இதையும் நான் எதிர்பார்த்ததுதான்!''

''என்ன செய்யப் போறே?''

''அது உங்களுக்கு அனாவசியம். இங்கே இருக்க வேணாம்னு சொல்ற வரைக்கும் தான் உங்க பங்கு. மீதியை நான் பார்த்துக்கறேன்.''

''இந்த நிமிஷமே வெளியே போடீ! நீ எங்களுக்கு மருமகளே இல்லை.''

தயாராக வைத்திருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு வாசலில் இறங்கினாள் ஊர்மிளா.

''அண்ணி, கோடு தாண்டின சீதை பட்ட அவஸ்தை தெரிந்தும் போறீங்க!'' மகேஷ்.

நின்று திரும்பிப் பார்த்தாள்.

''காலம் வரும்போது, இதுக்கு பதிலைச் சொல்றேன் தம்பி. இப்ப வேணாம்!''

இறங்கிச் சரசரவென நடந்தாள். எதிரே வந்த ஆட்டோவைக் கைதட்டி அழைத்து, அதில் நுழைந்து கொண்டாள்.

ஹெலன் வீட்டு முகவரியைச் சொன்னாள்.

6

''எழுதுடீ புவனா!''

அந்த புவனா, பேனாவும் பேப்பருமாகத் தயாராக அம்மாவின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்புள்ள வைத்திக்கு, அம்மா எழுதுவது. இதை எழுதும் நான் உயிரோடு இருக்

மிட்டாய் மன்னன் பாலில்தான் எத்தனை சுவை,
எவ்வளவு குதூகலம் என வியக்க வைக்கிறார்!



Parry's

கேரமில்க்



ஏடு நிறைந்த சுவையான பால்,
பொன்னிறமான கேரமல்.
இவற்றை பாரிஸ் ஒன்று சேர்த்து
இந்த மிருதுவான, சுவையான
மில்க் டாஃபியை உருவாக்குகிறது.

சுவைமிக்க பாரிஸ் மிட்டாய்கள்:

கேரமில்க் • ட்ரை-மி • சாக்லேர்ஸ்
சாக்லேட் எக்லேர்ஸ் • லாலி பாப்ஸ்
கோகனட் பன்ச் • கோகனட் கிரீம்
கோல்டன் பான் பான்

Parry's

இனிப்பு உலகில்
70 ஆண்டுகளுக்கு மேலாக
தரமான தயாரிப்பாளர்கள்

PCL 1591 K

கவே வெட்கப்படுகிறேன். ஊரில் தலைகாட்ட முடியவில்லை. உனக்கு எழுத வேண்டா மென்று நினைத்து மனது பொறுக்கவில்லை. நம் வீட்டுக் கௌரவம் தெருவில் நின்று சிரிக்கிறது.

உன் மனைவி ஊர்மிளா வேலைக்குப்போகத் தொடங்கி விட்டாள். நாங்கள் எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை. ஊர் சுற்ற வயிற்றுப் பிள்ளை இடைஞ்சல் என்று நினைத்து, நம்பரம்பரையைப்பத்தேநிமிடத்தில் கழுவித் துடைத்துவிட்டாள். காரணம் கேட்டபோது கண்டபடி பேசினாள். ஆறு வருடம் கழித்து வரப் போகும் புருஷனைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்கிறாள். அப்பாவுக்குக் கோபம் வந்தது. அதனால், எங்களை அவமானப்படுத்திவிட்டு வீட்டை விட்டே வெளியேறி விட்டாள். உனக்கு என் மேல் நம்பிக்கையில்லா விட்டால், வந்து பார்த்துக் கொள். ஆனால் நிலைமையை நேரில் நீ பார்த்தால், உயிரை மாய்த்துக்கொள்வாய். நீ காதலிக்கும் போதே கதறினோம். நீ கேட்கவில்லை. அவமானத்தைப் பார்த்தாயா?

விசுவாசமான மனைவியாக அவள் இருந்தால் ஏன் இன்றுவரை உனக்குக் கடிதம் போடவில்லை? வேறு யாருடனோ அவள் சுற்றுவதாகக் கேள்வி. எல்லாம் விதிப்படி நடக்கட்டும்... அபாக்கியவதி அம்மா.

''நம்புவானும்மா வைத்தி?'' புவனா சந்தேகத்துடன் கேட்க,

''இது ஆரம்பம்தானேம்மா! போகப் போக, நிறைய எழுதி படிப்படியா கரைச்சிடலாம். அவனுக்குக் கோபம் ஜாஸ்தி. நிதானமா யோசிக்காம, சட்டுனு முடிவுக்கு வந்துருவான். ரெண்டு பக்க நியாயங்களை அலசற குணமும், தெளிவும் அவனுக்கு எப்பவுமே கிடையாது. அவனோட இந்தக்குணம்தெரிஞ்சு தானே நான் முந்திக்கறேன். அடிக்க அடிக்க அம்மிகூட நகரும்மா... இந்த வைத்தி எந்த மூலைக்கு?''

நிஜம்தான். அசையத்தான் செய்தான் வைத்தி.

இவர்கள் வைத்த சந்தேகப் பொறி அவனிடம் பனிச்சென விழத்தான் செய்தது. முதலில் நம்ப முடியாமல் தத்தளித்தான்.

''நம் ஊர்மிளாவா?'' என்று சந்தேகப் பட்டான். மேலும், மேலும் வீட்டுக்குக் கடிதங்கள் எழுதினான். ஊர்மிளாவின் ஆபீஸ் முகவரி கேட்டான். வேறொரு பொய் முகவரி தரப்பட்டது. தம்பியின் மூலம் செட் அப் செய்யப்பட்ட விலாசம். அந்த ஆபீஸிலிருந்து ஒருவர் கடிதம் எழுதுவது போல செய்தி ஜோடிக்கப்பட்டது. அற்புதமான வார்த்தைகளும், அழகான சம்பவக் கோவைகளுமாகச் செய்திகளுக்குக் கண், மூக்கு ஒட்ட வைத்து, வைத்தியின் நெஞ்சில் படர்ந்திருந்த ஊர்மிளாவின் பிம்பம் அழிக்கப் பட்டது.

பனிச்சென்றிருந்த நிலை மாறி, கொஞ்சம் கொஞ்சமாக ஊர்மிளா மங்கத் தொடங்க,

மஞ்சள் நீரும், வேப்பிலையுமாக மாறி மாறி அடிக்கப்பட்டது. முற்றிலும் தன் வசமிழந்து வைத்தி தடுமாறும் சமயம், அபுதாபியிலிருந்து, குவெய்த்தில் ஒரு வாய்ப்பு வர, அவர்கள் அனுமதியோடு அந்தக் கான்ட்ராக்ட் ரத்து செய்யப்பட்டு இடம் மாறினான் வைத்தியநாதன். அவன் இடம் பெயர்ந்த நாலாம் நாள்... அந்த ஒரு வருடத்தில், ஊர்மிளா அவனுக்கு எழுதிய (பழைய விலாசத்துக்கு) 47 கண்ணீர்க் கடிதங்கள் தாமதமாகத் தரப்பட்டன. அதுவும் கேட்பாரற்று ஏதோ ஒரு மேசையின் இழுப்பறைக்குள் தஞ்சமடைய, ஊர்மிளாவின் அத்தனை முயற்சிகளும் ஊமையாகிப் போன போது முழுதாக ஒரு வருடம் முடிந்திருந்தது.

''டேவிட் சாப்பிட வர்றீங்களா?''

சொல்லிவிட்டுத் திரும்பிய போது டேவிட், தயாராக இருந்தான்.

தட்டை வைத்து, சாதத்தைப் போட்டாள் ஊர்மிளா. 'பிசைஞ்சுக்குங்க டேவிட். அப்பத் தானே குழம்பு ஊத்த முடியும்?''.

டேவிட்டின் கண்ணீர் சாதத்தில் விழுந்தது.

''என்னங்க டேவிட் இது? அழுகையா?''

''இல்லம்மா... எனக்கு ஏதுன்னு சொல்லத் தெரியலை. வாழ முடியாம போன எங்கக்கா ஹெலன், என் கூட இருந்தப்பக் கூட நான் இவ்வளவு வருத்தப்படலை. ஏன்னா அவளுக்கு புருஷன் இல்லை. உனக்கு இருந்தும், வாழ முடியலை. ஹெலனும் ஒரு நாள் இருதயம் திமர்னு நின்னுபோக, சுவாசிக்க மறந்து போன அந்த நாள்... ஓ... மூணு வருஷமாச்சு ஊர்மிளா!''

''ஆனா எனக்கொரு தன்னம்பிக்கையை ஊட்டிட்டுப் போன தெய்வம் ஹெலன். எந்த லெட்டருக்கும் பதில் வராம, ஒரு வருஷம் நான் புழுவாத் துடிச்சப்ப, என்னை விடத் தவிச்சது ஹெலன்தான். எனக்குக் குடுத்து வைக்கலை டேவிட்... சரி, பழசை மறங்க... சாப்பிடுங்க இப்ப!'' நான் இன்னிக்கு ஆபீஸ் போகலை... நீங்க போன் பண்ணி லீவு சொல்லிடுங்க!''

''எனக்கு ஆபீஸ் லீவு ஊர்மிளா...!''

''ஏன்?''

தேங்காய் வடை செய்யும் போது கடலைப்பருப்பு 2 பங்கும் உளுத்தம் பருப்பு 1/8 பங்கும் சேர்த்து ஊற வைத்துக் கரகரப்பாக அரைத்தெடுத்தால் வடைகள் மொரமொரப்பாயிருக்கும்.

— விசாலாட்சி


கோத்ரெஜ்
புதிய
மேகா
ஏ ஓ எஸ்* கொண்ட
நீல டிடர்ஜென்ட் கட்டி
என்ன
அருமையான
சலவை!
MEGA
Mudra: B:GS 4223 TAM
*ஏஓஎஸ், அதிக நுரையையும் அதிக சலவைத்
திறனையும் தரும் அற்புதமான மூலப்பொருள்.

''இன்னிக்கு மகாளய அமாவாசை!''

பிடித்திருந்த கரண்டி சரேலென கைநழுவியது.

அதே நாள்...

வைத்தி புறப்பட்டுப் போய், வாழ்வின் வசந்தத்தைப் பறித்துக் கொண்ட நாள்.

''இது என்ன வருஷம் டேவிட்?''

''எண்பத்தாறு!''

''மை குட்நஸ்! வைத்தி போய் ஆறு வருஷம் முடிஞ்சாச்சு! அப்படீன்னு... அப்படீன்னு, வைத்தி வரப் போற சமயமா இது? ஒருவேளை வந்தாச்சோ?''

''என்ன யோசனை ஊர்மிளா?''

''ஒண்ணுமில்லே டேவிட்!''

''வைத்தி பத்தித்தானே?''

அதிர்ந்தாள்.

''நாளைக்கு வர்றாராம். சாயங்காலம் நாலு மணி பிளேட்ல மெட்ராஸ் வர்றாராம்!''

''டேவிட்...?''

''எனக்குத் தெரியுமம்மா உன் தவிப்பு! ஹெலன் பெண். அதனாலே உங்கிட்ட நெருக்கமா ஒக்காந்து பேச முடிஞ்சுது. என்னாலே அது முடியலே. ஆனா அந்த ஸ்நேகிதம் முழுக்க என் நெஞ்சுல உண்டு ஊர்மிளா. வைத்தி கிட்ட உன்னை ஒப்படைக்கிற நாளை எதிர்பார்த்து தூங்காம நான் காத்துக்கிட்டு இருக்கேன்னு உனக்குத் தெரியுமா?''

சிலிர்ப்போடு அவனைப் பார்த்தாள்.

ஹெலன் மறைந்தும், இரண்டு வருடங்களுக்கும் மேலாக தனியாக இதே வீட்டில் டேவிட்டுடன் ஊர்மிளா இருக்கிறாள் என்றால் டேவிட்டைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

ஊர் ஆயிரம் சொன்னது!


தாலி கட்டாத குடித்தனம் என்று கேலி பேசியது.

அலட்சியப்படுத்திவிட்டு நடந்தாள் ஊர்மிளா.

கடிதங்கள் புறக்கணிக்கப்பட்ட போது, மௌனமாய் இருந்து விட்டாள்.

கண்டிப்பாக ஒருநாள் வைத்தி வருவான்.

அந்த நாள், தனக்கு வைக்கப்படும் அக்னிப் பரீட்சை என்பது அவளுக்கு எப்போதோ தெரியும்!



அதையும் சந்தித்து விடுவது என்றுதான் தைரியமாக இருந்தாள்.

'வைத்தி வரப்போகிறான் நாளைக்கு!'

என்றுமில்லாதவொரு சிலிர்ப்பும், படபடப்புமாக வருகிறது. இத்தனை நாள், இறுகிக் கிடந்த மனம், மெல்லக் கசிந்து, கண்ணீராகக் கொப்பளிக்கிறது.

ஒரு வருஷமாக ஏன் மௌனம் காத்தாய் என் கணவனே? ஏன் என் கடிதங்களை ஒதுக்கினாய்? இப்போது என் நிலையை நம்புவாயா?

'நாளைக்கு சாயங்காலம் நாலு மணிக்கு ஏர்—போர்ட்டுக்குப் போகலாமா ஊர்மிளா?''

உதட்டுச் சிரிப்பு உறைந்து யோசனை வந்தது.

''போகத்தான் வேண்டுமா? ஏன் போக வேண்டும்?''

ஒரு தவறும் செய்யாத எனக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. எழுதிய எந்தக் கடிதத்துக்கும் பதிலில்லை. ஒரு வருடக் குமுறலைக் கேட்கக் காதுகளே இல்லை. நான் ஏன் போக வேண்டும்?

தவறு செய்யாத நான் எதற்காக வைத்தியைப் பார்க்கப் போக வேண்டும். 'வைத்தியே இங்கு வரட்டும்!'

''போக வேணாம் டேவிட்!''

அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை டேவிட்டால். வைத்தி வரப் போகிறான் நாளைக்கு! தன் வெண்பட்டு சேலையை எடுத்து, இஸ்திரி போட மேஜைமேல் விரிக்கிறாள் ஊர்மிளா. ஜரிகைச் சுருக்கத்தைத் தண்ணீர் தொட்டு நீவி, சரிப்படுத்துகிறாள். விடியப் போகும் மறுநாளுக்காகக் கண்கள் சிவக்கச் சிவக்க விழித்திருக்கிறாள்.

''**நா**ங்க சொல்றது அத்தனையும் சத்தியம் வைத்தி. இதே ஊர்ல ஒரு கிறிஸ்தவனோட, கல்யாணம் செஞ்சுக்காம குடித்தனம் நடத்தறா. ஆறு வருட வசதிகளைப் பெற்ற அந்த அசுரர் கூட்டம் பிள்ளையின் காதில் ஓத, உடையைக் கூட மாற்றாமல் வாசல்படி இறங்குகிறான் வைத்தி.

''எதுக்காகப்பா போறே?''

''நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி நாலு கேள்வி அவளைக் கேட்க!''

''என்ன லாபம்?''

''வந்து சொல்றேன்!''

விருட்டென்று நடந்து வீதி முனையில் மறைகிறான்.

பவுடர் போடாத மஞ்சள் மினுமினுப்பு...

தலையில் ஆற்றுக்கட்டு...

இடையில் வெண்பட்டுப் புடைவை. கதவை அவள் திறந்ததும், ஓரிரு நிமிடம் அயர்ந்து போகும் வைத்தி.

"இவளா? இவளா எனக்குத் துரோகம் செய்வாள்?"

"உள்ளே வாங்க... ஞாபகம் இருக்கா என்னை?"

டேவிட் வெளியே வர.

"இவர் மிஸ்டர் டேவிட்..."

"ஏன் பாதில நிறுத்திட்ட? உன் தாலி கட்டாத புருஷன்னு முடிச்சிரு!"

டேவிட் பதறிபடி ஓரடி எடுத்து வைக்க, கையசைத்து அவனைக் கட்டுப்படுத்துகிறாள்.

"வேற என்னவெல்லாம் உங்களுக்கு என்னைப் பத்திச் சொல்லப்பட்டிருக்கு?"

"என்ன சொல்லணும்? ஊருக்கே தெரிஞ்சிருக்கே உன் ......த்தனம்!"

"நிறுத்துடா!" டேவிட் பாய,

"ஓஹோ, வப்பாட்டியைச் சொன்னா கோவம் பொத்துக்குதாக்கும்?"

"ஊர்மிளா எனக்கு அனுமதி தா... இவனை அப்படியே வகுந்திர்றேன்!"

"வேணாம் டேவிட். அது உங்களுக்கு அசிங்கம்!"

"பின்ன அஞ்சு வருஷ சோகத்தை அவருக்குப் புரியும்படியாச் சொல்லு ஊர்மிளா!"

"லாபமில்லே டேவிட்! பரவியிருந்தாக் கூட விஷத்தைப் பிரிக்க முயற்சிக்கலாம். முழுசா விஷமே வந்திருக்கும் போது?"

"என்னமா பத்தினி வேஷம்?"

"மரியாதையாப் பேசுங்க மிஸ்டர் வைத்தி!

அதிர்ந்தான்.

"பாதிக்கப்பட்டவ நான். என்னை வீதிக்குக் கொண்டு வந்தது உங்க குடும்பம். நமக்கு நடுவுல இருக்கற நூலை அறுத்தது உங்க தாயார். தொடர்பு கொள்ள விடாமல் தடுத்தது விதி. நான் நிரபராதின்னு சொன்னா அது உங்களை கன்வின்ஸ் பண்ற ஆசைல இல்லை. எதுக்குமே ரெண்டு பக்கம் உண்டுன்னு நீங்க யோசிக்கணும். கடிதமே வரலைன்னா ஏன்னு ஆலோசனை பண்ணியிருக்கணும்.

கூட வந்தவளைத் திடீர்னு காணலைன்னா நடந்து வந்த வழியில பள்ளம் இருந்திருக்கலாம். அதுல அவள் விழுந்திருக்கலாம். விட்டுட்டுப் போயிருப்பான்னு யோசிக்கறது கொச்சையான கற்பனை.

நான் ராமாயண ஊர்மிளா இல்லை. புருஷனுக்காக 14 வருஷம் வாய் பேசாம அயோத்தில அவ முடங்கிக் கிடந்தும், காவியத்துல இடமென்னவோ சீதைக்குத்தான். ஒரு சூர்ப்பனகைக்குக் கிடைச்ச எடம் கூட பாவம், இந்த அப்பாவி ஊர்மிளைக்குக் கிடைக்கலை. லட்சுமணன் மனைவி யார்னு கேட்டா இன்னமும் பல பேருக்குத் தெரியலை. காரணம் அவளோட மௌனம். அந்த ஊமைத்தனம்தான் ஊர்மிளையை ஒதுக்கிடுச்சு.

"நானும் அப்படியிருக்கத் தயாராயில்லை. எனக்கும் டேவிட்டுக்கும் என்ன உறவுன்னு இந்த ஊரும், உலகமும் ரொம்பக் கவலைப்படறது எனக்குத் தெரியும். அதோட புனிதம் எங்க ரெண்டு பேருக்கும் தெரியும். அக்னிப் பிரவேசம் செஞ்சு என்னை நிரூபிக்கற அளவுக்கு உங்களை நான் ராமனா நினைக்கலை. அந்த உறவும் எனக்குத் தேவையில்லை.

"ஆறு வருஷம் போல, இன்னும் சில ஆறுகளைத் தனியாவே கடக்க நான் தயார். குட்பை மிஸ்டர் வைத்தி! சாப்பிட வர்றீங்களா டேவிட்?"

புடவையை இழுத்துச் செருகிக் கொண்டு உள்ளே போகிறாள் ஊர்மிளா.

பால் பாயசம்
சுலபமான முறையில்

முன்போல் பால் பாயசத்திற்கு அடுப்பிலிட்டுக் கிளறிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

தேவையான பொருட்கள்:

பால் — 1 லிட்டர்.
அரிசி — 1 பிடி அளவு.
நெய் — 1 தேக்கரண்டி.
சர்க்கரை — 1 ஆழாக்கு,
ஏலக்காய், முந்திரிப்பருப்பு, பிஸ்தாப் பருப்பு — தேவையான அளவு.

செய்முறை:

அரிசியை நன்கு நெய்யை விட்டுச் சிவப்பாக வறுத்து 1 லிட்டர் பாலையும் விட்டுக் குக்கரில் ஒரு பாத்திரத்தில் வைத்துவிட வேண்டும். விசில் சத்தம் பெரிதாக வந்தவுடன் ஸிம்மில் 40 நிமிடங்கள் வைக்க வேண்டும். இறக்கியவுடன் அதில் சர்க்கரையையும் தேவையானால் ஒரு ஸ்பூன் மைதாவையும் சேர்த்துக் கலக்கிவிட்டு ஏலப் பொடியையும் போட வேண்டும்.

குக்கரில் வைப்பதால் பாயசத்தின் அளவு கொஞ்சமும் குறையாமல் நல்ல ரோஸ் கலரில் ரொம்ப வாசனையாக இருக்கும். சிரமமும் குறைவு.

— ஹேமமாலினி விஸ்வநாதன்.

இம்மாத இல்லத்தரசி



• கார்த்தி சாமி



• ஜோதி

முதல் பரிசு

ஜின்ஜர் பார்லி ஜூஸ்

தேவையான பொருட்கள்:

இஞ்சி — 100 கிராம்.
எலுமிச்சம்பழ ஜூஸ் — 1 கப் அளவு.
பார்லி பவுடர் — 1 டீஸ்பூன்.
தேன் — 100 கிராம்.
சர்க்கரை — 3 கப் அளவு.
பீட்ரூட் — 100 கிராம்.
தண்ணீர் — 3 பங்கு.
ராட்ஸ்பெர்ரி சிவப்பு — ¼ டீஸ்பூன்.

செய்முறை:

1. எலுமிச்சம்பழ ஜூஸில் அரை கப் அளவில் 1 கப் சர்க்கரை போட்டு ஒரு நாள் முழுவதும் வெயிலில் வெள்ளை பாட்டிலில் (வாயகன்றது) வைக்கவும். ஜூஸின் இயல்பான குணம், மணம் எத்தனை நாட்களானாலும் அப்படியே இருக்கச் சிறந்த முறை.

2. மறுநாள் தயாரிக்கலாம்., பீட்ரூட்டை அலம்பி காரட் துருவியில் துருவி நீரின்றி குக்கரில் வேக விடவும். வடிக்கட்டியில் கசக்கி அந்த பீட்ரூட் நீரை எடுக்கவும் அல்லது சிவலை மிக்ஸியில் அரைத்தும் எடுக்கலாம்.

3. பார்லி பவுடரை அரை கப் நீரில் கொதிக்கவிட்டுக் கஞ்சி எடுக்கவும்.

4. இஞ்சியை அலம்பிச் சீவி அரைத்து (அரை கப் நீர்விட்டு) வடிக்கட்டி, தெளிவதற்காக ஐந்து நிமிடம் வைக்கவும்.

5. பீட்ரூட் நீருடன் மிகுதி உள்ள தண்ணீரைச் சேர்த்து மீதி நீரைவிட்டுச் சர்க்கரையை நன்கு கரையவிட்டுக் கொஞ்சம் கொப்புளம் வந்ததும் இறக்கி நன்கு ஆற விடவும்.

6. முதல் நாள் வெயிலில் வைத்த எலுமிச்சம் ஜூஸில் பார்லி கஞ்சியைக் கரைக்கவும். (கஞ்சி என்றால் ஏதோ என்று நினைக்க வேண்டாம். பார்லி குளிர்ச்சி தருவது லேசான கெட்டிப் பதம்தான் கஞ்சி எனப் பெயர்.)

தென்னம்பாளையை விலக்கி விட்டு நோக்கினால் உள்ளே, அடர்த்தியாகச் சிறுசிறு பூப் போன்று இருக்கும் மொட்டுக்களை எடுத்துக் கொள்ளவும். இதை இடித்துச் சாறு எடுக்கவும். இச்சாற்றை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்துத் தண்ணீரில் கலந்து மூன்று வேளை சாப்பிட்டால் பெண்களுக்கு உண்டாகும் பெரும்பாடு என்னும் நோய் நீங்கிவிடும்.

— ''மணமுள்ள மலர்களிலே மருத்துவம்'' என்ற நூலிலிருந்து.

— ஆர். அரிகோபி

வீட்டைக் கட்டும்பொழுது செலவைப் பார்க்காமல் இரண்டு வாடர் டாங்க் கட்டவும். ஒன்று மாற்றி ஒன்றாக உபயோகிக்கலாம். வாடர் டாங்கைச் சுத்தம் செய்யும் பொழுதும் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும்.

— தெ[illegible]

7. இஞ்சிச் சாற்றைக் கலந்து தேனை விடவும்.

8. இந்தக் கலவையை, தயாரித்துள்ள சர்க்கரைப்பாகில்விட்டு,'ராட்ஸ்பெர்ரிரெட்' கலர் போட்டுக் கலக்கவும். எந்தவிதமான ரஸாயன பிரிசர்வேடிவும் தேவையில்லை. ஃபிரிட்ஜில், காற்றுப் புகாத பாட்டில்களில் வைத்தால் போதுமானது.

வெயில் காலத்தில் நீர்க்கடுப்பு, ஜீரண சம்பந்த வயிற்றுக் கோளாறு எல்லாவற்றுக்கும் இந்த ஜூஸ் நல்லது.

இந்த ஜூஸின் இயல்பான குணம் அப்படியே இருக்கும். வயிற்று உப்புசம் சமயத்தில் மிகவும் பலனளிக்கும்.

— டி. எஸ். லட்சுமி, நெடுந்தெரு.

இரண்டாம் பரிசு

விளாம்பழ ஜூஸ்

தேவையான பொருட்கள்:

முற்றிய விளாம்பழம் — 1.
சர்க்கரை — 6 மேஜைக் கரண்டி.
நீர் — $3\frac{1}{2}$ டம்ளர்.
உப்பு — $\frac{1}{4}$ தேக்கரண்டி.

செய்முறை:

விளாம்பழத்தை உடைத்து அதன் உள்ளீட்டைச் சுத்தமாக எடுத்து மிக்ஸியில் போட்டு அதனுடன் உப்பு, சர்க்கரை, ஒரு டம்ளர் நீர் சேர்த்து நன்றாக மசிய அடிக்க வேண்டும். பின் இக்கலவையுடன் மீதமுள்ள நீரையும் சேர்த்தால் ருசியானதும் வித்தியாசமானதுமான நான்கு டம்ளர் ஜூஸ் தயார். இது குழந்தைகளுக்கு ஏற்றது. மருத்துவத் தன்மையானது.

— கே. ஜோதிராணி, திருச்சி.

மூன்றாம் பரிசு

முருங்கைப்பூ காக்டெயில்

தேவையான பொருட்கள்:

முருங்கைப்பூ — 1 கப்.
பால் — $\frac{1}{2}$ லிட்டர்.
சர்க்கரை — 10 தேக்கரண்டி.
முந்திரிப் பருப்பு — 5 கிராம்.
பாதாம் பருப்பு — 5 கிராம்.
பிஸ்தா பருப்பு — 5 கிராம்.
ஏலக்காய் — 5 கிராம்.

செய்முறை:

முருங்கைப்பூவை அலசி சுத்தம் செய்து பாலில் வேக வைத்து, ஆறியவுடன் சர்க்கரை முந்திரி, பிஸ்தா, பாதாம் பருப்புகள், ஏலக்காய் முதலியவற்றுடன் மிக்ஸியில் அரைத்துக் குளிர் சாதனப் பெட்டியில் வைத்துக் குளிர்ந்தவுடன் பரிமாறவும். இது சத்துள்ள ஜூஸாகும்.

முக்கியமாகப் பெண்களுக்கு மிகவும் நல்லது. வெள்ளைப் போக்கைத் தடுக்கும்.

— தனலக்ஷ்மி சுப்பிரமணியன்,
சேலம் — 6.

ஆறுதல் பரிசு

க்ரீம் சப்போட்டா ஜூஸ்

தேவையான பொருட்கள்:

நன்றாகப் பழுத்த சப்போட்டாப் பழங்கள் — பெரியவை 2.
பால் — 2 கப்.
சர்க்கரை — $1\frac{1}{2}$ கப்.
சர்பத் பவுடர், — 1 சிட்டிகை.
நன்னாரி எசென்ஸ் — 2 துளி.

மேல் சாமான் கிரீம் நாம் தயாரிக்க வேண்டும்.

கிரீம் செய்யும் முறை:

அரை கப் பாலில் ஐஸ் கிரீம் பவுடர் சேர்த்துக் கலக்கி அத்துடன் எசன்ஸ் 1 சொட்டுவிட்டுக் கலக்கி முதல் நாளே ஃப்ரிட்ஜில் வைக்கவும்.

சப்போட்டா ஜூஸ்:

சப்போட்டாவை தோல், கொட்டை நீக்கி அத்துடன் காய்ச்சி ஆற வைத்த பால் ஊற்றி அத்துடன் சர்க்கரையையும் போட்டு மிக்ஸியில் நன்றாக அடிக்கவும். பின் அதை கண் அகல சல்லடையில் வடிகட்டி அத்துடன் எசென்ஸ் ஒரு துளிவிட்டு அதன்மேல் சர்பத் பவுடரைச் சுடுநீரில் கலக்கி ஆற வைத்து அதையும் ஊற்றி இந்தக் கலவையை கண்ணாடி டம்ளர்களில் நிரப்பி, அதன்மேல் கிரீமை ஒவ்வொரு ஸ்பூன் போட்டு அழகாகப் பரிமாறவும்.

இந்த ஜூஸை ஃப்ரிட்ஜில் வைத்தால் கெடாமல் அப்படியே இருக்கும்.


— ஏ. புகழேஸ்வரி, பொன்னமராவதி.



இம்மாத இல்லத்தரசி போட்டிக்கு நடுவர்களாக இருக்க விரும்பும் மாதர் சங்கங்கள் மங்கையர் மலருக்கு விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர்,
மங்கையர் மலர்,
28, 5 வது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை — 34.





ஆறுதல் பரிசு

சம்மர் கார்டியல்

கிரணி பழத் துண்டுகள் — 2 கோப்பை,
தர்பூசு பழத் துண்டுகள் — 2 கோப்பை,
கரும்பு ஜூஸ் — 2 கோப்பை,
சர்க்கரை (தூள்) — 1 கோப்பை,
ஏலக்காய்ப் பொடி — 1 டீஸ்பூன்,
எலுமிச்சம்பழம் ஜூஸ் — 2 டீஸ்பூன்,
இஞ்சிச் சாறு — 2 டீஸ்பூன்.

செய்முறை:

மிக்ஸியில் 'ட்ரை பிளேடை'ப் போட்டுப் பழத்துண்டுகள், ஜூஸ், சர்க்கரை முதலிய எல்லாவற்றையும் போட்டு நன்றாக அரைத்து எடுத்து ஃப்ரிட்ஜில் வைத்து விட்டால், ஒரு வாரம் வரை இயற்கை ருசி மாறாமல் இருக்கும். எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடலாம். நுங்கு கிடைத்தால் இரண்டு அல்லது மூன்று நுங்குகளையும் இந்த ஜூஸுடன் கலந்து உபயோகிக்கலாம். வெயிலுக்கேற்ற ஆரோக்கியமான ஜூஸ்.

— கார்த்தி சாரி, சென்னை — 90.

பீடா பாக்குத்தூள்

தேவையான பொருட்கள்:

பாக்கு — 100 கிராம்,
கசகசா — 500 கிராம்,
சிறிய கொப்பரை — 1,
சர்க்கரை — 300 கிராம்,
ஜாதிக்காய் — 1,
ஏலக்காய் — 5,
மெண்த்தால் — 5 கிராம்,
Pear Essence — 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

முதலில் பாக்கைச் சிறு தூளாக இடித்துக் கொள்ளவும். கொப்பரையைத் துருவி வைத்துக் கொள்ளவும். ஜாதிக் காயையும், ஏலக்காயையும் இடித்து வைக்கவும். ஓர் அகலமான பாத்திரத்தில் தூளாக்கிய பாக்குப் பொடியைப் போட்டு, அதோடு கசகசா, சர்க்கரை, ஏலக்காய், ஜாதிக்காய், கொப்பரை, மெண்த்தால் இவைகளைப் போட்டு நன்றாகக் கலக்கி, கடைசியாக எஸென்ஸையும் ஊற்றிக் கலந்து காற்றுப் புகாமல் எடுத்து வைக்கவும். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி, இந்த பீடா தூளில் இரண்டு அல்லது மூன்று ஸ்பூன் வைத்துப் போட்டுக் கொண்டால் வாய்க்கு ருசியாகவும், நல்ல நறுமணத்துடனும் இருக்கும்.

— வசுந்தரா.

உபநயனம் ஏன் 8 முதல் 16 வயதுக்குள் செய்ய வேண்டும்?

உள்ளம் வளர்ந்து வந்து கருத்தைக் கிரஹிக்கும் சக்தியைப் பெறுகின்ற பொழுதுதான் உபநயனம் என்னும் தீட்சையைச் செய்விக்க வேண்டும். எட்டு வயதிலிருந்து பதினாறு வயதுக்குள் உபநயன தீட்சை தந்துவிட வேண்டும். உள்ளம் வளர்ச்சி அடையும்பொழுது, அதில் காம உணர்ச்சி தலை எடுக்கிறது. காம உணர்ச்சி, உள்ளத்தில் புகுவதற்கு முன்பு உபநயன தீட்சை செய்துவிட வேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்வதின் அவசியம் என்ன? ஸந்தியா வேளை எத்தனை

இரண்டு வேளைகள் சந்திக்கும் நேரத்தை ஸந்தியா வேளை என்கிறோம்.

1. இரவு முடிந்து பகல் வரும்பொழுது பகலும் இரவும் சந்திக்கின்றன. அந்த காலை நேரம் ஒரு ஸந்தியா நேரமாகும்.
2. நண்பகலில் முற்பகலும் பிற்பகலும் சந்திக்கின்றன. அது ஒரு ஸந்தியா வேளை.
3. பகல் முடிந்து இரவு வருகின்ற மாலை வேளையும் ஒரு ஸந்தியா வேளை. அதில் இரவும் பகலும் சந்திக்கின்றன.
4. நள்ளிரவில் முன் இரவும் பின் இரவும் சந்திக்கின்றன. எனவே அதுவும் ஒரு ஸந்தியா வேளை.

இச்சந்தியா வேளைகளில் இயற்கையில் சத்துவ குணம் ஓங்கியிருக்கின்றது.

— எனவே, அவ்வேளைகள் வழிபாட்டுக்குப் பொருத்தமானவைகளாக இருக்கின்றன. அவ்வேளைகளில் நாம் செய்கின்ற வழிபாட்டுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

காலை நேரத்தையும், மாலை நேரத்தையும் நாம் வழிபாட்டுக்கு நன்கு பயன்படுத்தலாம். காலையிலும் மாலையிலும் நாம் செய்கின்ற வழிபாட்டுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

உள்ளத்தில் அன்பையும் அறிவையும் வளர்ப்பதற்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளைகளாவது ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

ஸந்தியாவந்தனம் செய்பவர் உடல் பிறப்புக்கும் மேலான ஞானப் பிறப்பைப் பெறுகின்றார். ஞானப் பிறப்பை எடுத்ததற்குப் புறச் சின்னமாக பூணூலையும் தலையின் உச்சியில் சிகையையும் வைத்துக் கொள்கின்றார். நூல் வேத மந்திரத்துச் சின்னமாகும். எனவேதான், ''நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்'' என்று கோட்பாடு வந்துள்ளது.

மந்திர உபதேசம் செய்வித்து மந்திரத்தை உச்சரிக்க கற்றுக் கொடுக்கும் செயலுக்கு உபநயனம் என்று பெயர். ''உப'' என்றால் பிரம்மத்துக்குச் சமீபத்தில் என்பது பொருள். ''நயனம்'' என்றால் ஆச்சாரியன் சிஷ்யனைப் பிரம்மத்துக்குச் சமீபத்தில் அழைத்துச் செல்கின்ற செயலுக்கு ''உபநயனம்'' என்று பெயர்.

ஸந்தியாவந்தனம் செய்வதின் மூலம் நம் உள்ளத்தைத் தூய தாக்கி உள்ளிருக்கும் ஆன்ம ஒளியை காண்கின்ற ஞானக் கண் பெறுகின்றோம். உயிர் வாழ்க்கைக்குச் சுவாசிப்பது எவ்வளவு அவசியமோ, மனத் தெளிவுக்கு ஸந்தியாவந்தனம் அவ்வளவு அவசியமாகும்.

ஸந்தியாவந்தன வழிபாட்டில் கீழ் வரும் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

அச்சுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:

பொருள்:

பெருநிலையிலிருக்கின்ற பேரறிவு வாய்ந்த அழிவில்லாத பொருளுக்கு வணக்கம் செலுத்துகின்றேன் என்பது மேற்கூறிய வணக்கத்துக்குப் பொருள்.

கேசவ நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர.

— என்று உம்மைப் பன்னிரு திருநாமங்களால் போற்றி என் இந்த்ரியங்களையும் மனத்தையும் உம்மிடம் ஒப்படைப்பேனாக.

அடுத்து கணபதியைத் தியானிக்க வேண்டும். கணபதியை தியானிப்பதற்குரிய மந்திரம் வருமாறு:

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே

— இதன் பொருள், வெண்மையான ஆடை உடுத்தவரும், நிலவு போன்ற ஒளியுள்ளவரும், நான்கு கையுள்ளவரும், ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தையுடையவரும் ஆகிய கணபதி எல்லா இடையூறுகளையும் விலக்கிச் சாந்தியை உண்டாக்குவாராக.

அடுத்துப் பிரம்ம காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். காயத்ரீ மந்திரம் வருமாறு:

ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத்

— இதன் பொருள், யார் நம் அறிவைத் துண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் மேலாம் ஒளியைத் தியானிப்போமாக.

இம்முறையில் ஸந்தியாவந்தனம் தினந்தோறும் ஸந்தியா வேளைகளில் செய்துவந்தால், நம்மிடமுள்ள தெய்வத்தன்மை வெளிப்பட்டு, நாம் பரிபூரணர்களாவது திண்ணம். ஆற்றலை வளர்ப்பதும், அறிவைத் தீட்டுவதும், அன்பைப் பெருக்குவதும், மானுட வாழ்வின் லக்ஷியமாகும். ஸந்தியாவந்தனம் செய்வதன் மூலம் மனிதன் அப்பெருநிலையை அடையலாம். எனவே நாம் பெருநிலை அடைவதற்கு ஸந்தியாவந்தனம் அவசியமாகிறது.

ஆதாரம்: தர்ம சக்கரம் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்



1



2



3



7



4

செய்திகளைப் பார்க்கலாம்

1. தேசிய அளவில் சிறந்த நடிகராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் இவரை யாரென்று தெரிகிறதா? இவர் தேர்ந்தெடுக்கப்படக் காரணமாக இருந்த படத்தின் பெயரென்ன?

2. பிஜி தீவில் ராணுவப் புரட்சி ஏற்பட்டு அரசு கவிழ்க்கப்பட்டது. கர்னல் சிதிலேணி ரபுகா என்பவர் பத்து சிப்பாய்களுடன் பாராளுமன்றத்தில் புகுந்து பிரதமர் உள்பட பலரைக் கைது செய்துள்ளார். இப்போது பிரதமர் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். சட்டரீதியாக சுப்ரீம் கோர்ட்டின் உதவியை நாடியுள்ள இந்த முன்னாள் பிரதமரின் பெயரென்ன?

3. மேற்கு ஜெர்மனி போர்க் கப்பல் இது. இதன் முக்கியத்துவம் என்ன?

4. இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரியான இவர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு மே மாதம் மரணமடைந்தார். லோக்தள கட்சியின் தலைவரான இவரின் பெயரென்ன? இவரை எரியூட்டிய டெல்லி மயான பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

5. குடமுழுக்கு நடைபெறும் இந்த நடராஜர் சிலையின் முக்கியத்துவம் என்ன?

6. சொல்லொணு கொடுமைகளினுல் தவித்து, பஞ்சம் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் இலங்கை யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு 'நம்பிக்கை ஒளி'யாகத் திகழ்ந்தது இந்த விமானம். இந்தியாவிலிருந்து அரிசி, மருந்து முதலான பொருட்களை ஏற்றிச் சென்று அவர்களுக்குப் போட்ட இந்த அற்புதமான நிகழ்ச்சிக்கு என்ன பெயர் கொடுத்திருந்தார்கள்?

7. இங்கிலாந்து பாராளுமன்ற வரலாற்றிலேயே இல்லாத வகையில் தொடர்ந்து மூன்ருவது முறையாகப் பிரதமர் பதவியில் வெற்றி பெற்றுள்ள திருமதி தாட்சரை என்னவென்று அழைப்பார்கள்?

8. தொடர்ந்து பதிமூன்று ஆண்டுகளாக வெளிநாட்டு மந்திரியாக பதவியேற்று உலகில் புதிய சாதனை செய்துள்ள இவரை யாரென்று தெரிகிறதா? இவருக்கு இவருடைய ஆதரவாளர்கள் கொடுக்கும் வேடிக்கையான பரிசு என்னவென்று தெரிகிறதா?

9. போலீஸ்காரர்கள் செய்யும் சோதனையான இதை என்னவென்று யூகிக்க முடிகிறதா?



புக் ஷெல்ஃப்

கர்ப்பமாக இருக்கும் போது கவனிக்க வேண்டியவை

ஆசிரியர் தமிழ்வாணன் விலை ரூ. 7.00

செட்டிநாட்டுச் சமையல்

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு விலை ரூ. 3.75

முக அழகைப் பாதுகாப்பது எப்படி?

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு விலை ரூ. 4.75

குறைந்த செலவில் சிறந்த பூந்தோட்டம்

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு விலை ரூ. 7.75

வகை வகையான கோலங்கள்: பாகம்—2

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு விலை ரூ. 6.00

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் — மணிமேகலைப் பிரசுரம், த./பெ. எண் 1447, 4, தணிகாசலம் செட்டி ரோடு, தி. நகர், சென்னை — 17.)

ஆசாரிய சுவாமிகள் அருள்வாக்கு

மூலம்: ஏ. எஸ். இராமன் விலை ரூ. 3.00

சந்தித்தேன், சிந்தித்தேன்...

தான் சந்தித்த முக்கியப் பிரமுகர்களைப் பற்றி எழுதியுள்ளார் கவிஞர் கண்ணதாசன். விலை ரூ. 16.00

எதிலும் முதன்மை பெறுவது எப்படி?

மனநலக் கட்டுரைகள். ஆசிரியர் பி. சி. கணேசன். விலை ரூ. 5.00

அறிஞர்களின் பொன்மொழிகள்

தொகுப்பு: கவிஞர் தே. ப. பெருமாள் விலை ரூ. 10.00

அம்மா பிள்ளை

சிவசங்கரியின் நாவல் விலை ரூ. 15.00

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17.)

இந்து மதமும், விஞ்ஞானமும்

இந்து மதத்தில் விஞ்ஞானக் கருத்துக்கள் பிணைந்துள்ள விந்தையைக் கூறுபவர் பி. எஸ். நாராயணன். விலை ரூ. 10.50

ஸ்ரீ ராகவேந்திரர் புகழ் மாலை

தொகுப்பு: அம்மன் சத்தியநாதன் விலை ரூ. 10.00

மனோ வலிமையே வாழ்க்கைக்கு வளமை

மனநல நூல். ஆசிரியர் டாக்டர் குரு. ஷண்முகம். விலை ரூ. 12.00

ஸ்ரீ ராகவேந்திரர் ஸ்தோத்திர மாலை

தொகுப்பு: அம்மன் சத்தியநாதன். விலை ரூ. 2.25

(நான்கு புத்தகங்களின் பதிப்பாளர்: அம்மன் பதிப்பகம், 39, வி. எம். தெரு, ராயப்பேட்டை, சென்னை — 14.)

பச்சை விழிகள்

கலாதரின் மர்ம நாவல் விலை ரூ. 10.00

விக்ரம்

சுஜாதாவின் விஞ்ஞான நாவல் விலை ரூ. 11.00

ஏழாவது தாலி

பி. வி. ஆரின் குடும்ப நாவல் விலை ரூ. 10.00

(மூன்று புத்தகங்களின் பதிப்பாளர்: குமரிப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் — 611 001.)

பழரசம், ஜாம், ஜெல்லி, ஐஸ்கிரீம் செய்யும் முறை

ஆசிரியர்—சீதாலக்ஷ்மி விலை ரூ. 3.50

(பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை — 17.)

கர்ஜனை

தேசபக்திச் செம்மல்களைப் பற்றிய கவிதை நூல். ஆசிரியர்: வேம்பத்தூர் கிருஷ்ணன். விலை ரூ. 10.00


(சுடர்மணி பதிப்பகம், 19, பஜனை கோயில் முதல் தெரு, சூளைமேடு, சென்னை — 94.)

ஸ்ரீ துர்க்கா பூஜை

துர்க்கா பூஜை பற்றிய விளக்கங்களைத் தருபவர்: ஸ்ரீ துர்க்கைச் சித்தர். விலை ரூ. 5.00

(பைலட் பப்ளிகேஷன்ஸ், த./பெ. எண் 1545, 30[illegible] லிங்கி [illegible] சென்னை —

சொல்ல விரும்புகிறோம்



* முருகப் பெருமானின் பிறந்த நாள் படக் கதை மிகவும் அருமையாக இருந்தது.
விருத்தாசலம், தங்க கார்த்திகை ராஜா.

* ''முருகப்பெருமானின் பிறந்த நாள்'' என்ற சித்திரக்கதையில் குறிப்பிட்டதைப் போல் சூரபதுமனின் தம்பி பானுகோபன் அல்லன். சிங்கமுகாசுரன்.

(பானுகோபன், சூரபதுமனின் மகன். பதுமகோமளைக்குப் பிறந்தவன்.)
சித்தூர், எஸ். முருகன்.

* கொளுத்தும் இந்தக் கோடைக்கும், வாட்டும் இந்தத் தண்ணீர்ப் பஞ்சத்துக்கும் இடையில் 'மஞ்சள் காமாலை' ஊர் எங்கும் பவனி வரும் தருணத்தில் உங்கள் கட்டுரை படு எச்சரிக்கை செய்து எல்லோரையும் விழித்துக் கொள்ளச் செய்திருக்கிறது!
மதுரை, சுகந்தி நாராயண்.

* 'இந்த மாதம் எப்படி?' பகுதி மீண்டும் இடம் பெறத் துவங்கியிருப்பது மகிழ்ச்சிக் குரிய செய்தி.
தஞ்சாவூர், முரளீதர்.

* 'இந்தமாதம்எப்படி?' என்னைப்போன்ற பெயர் உள்ளவர்களுக்கு ஒத்து வரவில்லை. வி. பகவதி என்று எழுதிப் பெயர் எண்ணைக் கூட்டினால் 27 வருகிறது 2 + 7 = 9. எனது பிறந்த தேதி 17. எண் 8 வருபவர்களுக்குத் தான் பிறந்த தேதி 17 என்று எழுதியிருக் கிறது. ஆக இந்த மாதம் எப்படி? என்னைப் பொறுத்தவரை ஒத்துவராத மாதமோ?
திருச்சி — 3, வே. பகவதி.

(இந்த மாதப் பவனின் இறுதிப் பகுதி யைப் படிக்கவும்.)

* ஏன் இந்த அதிருப்தி? அருமையான கட் டுரை 'இன்பம் நமக்குள்ளேயேதான் இருக் கிறது. அதை வெளி உலகில் தேடுவதில் பயனில்லை' என்ற வரிகள் அழுத்தமான, ஆழமான ஒன்று.
சென்னை — 83, வித்யா.

* சியாமளாவின் ஜீவநதிகள் தெள்ளத் தெளிவான நடையில் விறுவிறுப்புடன் செல்ல ஆரம்பித்து இருக்கின்றது!
நீடாமங்கலம், சந்திரா.

* கலைக்க விரும்பாத வேஷம் குறுநாவலை மிகச் சிறப்பாக எழுதியுள்ளார் ரத்னா. வித்யா... தன்னை திவ்யாவாக மாற்றிக் கொண்டு வாழாமல், தன்னையே தியாகம் செய்து கொண்டது மிகச் சிறப்பாக இருந் தது... நிரஞ்சன் பாகம், ஐயோ பாவம்.. என எண்ண வைக்கிறது.
திருச்சி — 18, ராஜிராதா.

* ''என் அக்காவுக்கு அடுத்த மாதம் கல் யாணம். பட்டுப் புடைவைகளைப் பற்றிய சிறப்புத் தகவல்களை அறிய மிகவும் ஆவலா யுள்ளாள். எப்போது வரும் ஜூலை மாதம் என ஏங்குகிறாள்.''
கோட்டாத்தூர், கவிநிலா.

தங்கம் விலை ஏறியது ஏன் பேட்டி எங்க ளுடைய நெடுநாளைய ஐயத்தைப் போக்கும் வகையில் அமைந்திருந்தது. அட்டைப்படம் அருமை.
சென்னை — 33, எஸ். எம். மூர்த்தி.

* 'சமுதாய உணர்வு வேண்டும்' கலந்துரை யாடல். பல நல்ல கருத்துக்களை அறிந்து கொள்ள உதவியாய் இருந்தது.
திருச்சி — 1, ரதிபாரதி.

* 'செல்லப் பிள்ளை பள்ளிச் செல்ல சில யோசனைகள்' கட்டுரைப் படித்தேன். அருமை யான கட்டுரை பாராட்டுக்கள்.
ஆர். அருணாசலம், திருவண்ணாமலை — 1.

இதற்கு என்ன செய்வது?



. . . . சென்னை

நான் விவாகரத்து செய்து, மறுமணம் செய்து கொண்டவள். இந்தத் திருமணத்தில் எனக்குக் குழந்தைகள் இல்லை. முதல் திருமணத்தில் இரண்டு குழந்தைகள். என்னுடன் இருக்கிறார்கள். என்னுடைய ஒரு குழந்தையை என்னுடைய கணவருக்குத் 'தத்து' அளிக்க விரும்புகிறேன்.

வக்கீலைக் கேட்டதில் குழந்தையின் தகப்பனார் ஒப்புதலின்றி தத்து கொடுக்க இயலாது என கூறுகிறார். குழந்தையின் தகப்பனார் மிகவும் பொல்லாதவர். அவரிடமிருந்து நான் விடுபட்டதே,பெரியகதை.என்னுடைய கணவர் தற்சமயம் அரசின் உயர் பதவியில் இருக்கிறார். அவரது சேமிப்பு, பிற பணங்களுக்கு என்னுடைய மகனை வாரிசுதாரராக்க விரும்புகிறார். சட்டபூர்வமாக இருந்தால் நல்லது என நினைக்கிறோம். மேலும் குழந்தையின் இனிஷியல் மாற்றம் செய்ய விரும்புகிறோம்.

உங்களுடைய கணவர் தன்னுடைய சேமிப்பு பிற பணங்களுக்கு வாரிசுதாரராக உங்கள் குழந்தைகளைத் தாராளமாக நியமிக்கலாம். அதற்குத் தத்துதான் எடுக்க வேண்டும் என்பதில்லை.

இனிஷியல் மாற்றம் வேண்டுமானால் நீங்கள் விவாகரத்துப் பெற்றவர் என்ற முறையில், குழந்தைகளுக்கு கார்டியனாக உங்களை நியமிக்கக் கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்ய வேண்டும். சட்டப்படி நீங்கள் கார்டியன் ஆன பிறகு உங்கள் கணவருக்குத் தத்து கொடுக்கலாம்.

என். ருக்மணி சென்னை

என் உறவினர் ஒருவர் சில மாதங்களுக்கு முன் ப்ளாட் வாங்கினார். இரண்டு கிரவுண்டு நிலத்தில் ஆறு பேருக்கு பிரிக்கப்படாத பாகத்தில் பங்கிட்டுவிட்டுக் காண்டிராக்டர் ஆறு ப்ளாட் கட்டுவதற்குப் பதில் ஏழு ப்ளாட் கட்டித் தனக்கு ஒரு ப்ளாட் வைத்துக் கொண்டு குடியேறிவிட்டார். சட்டப்படி இது செல்லுமா? இந்த ப்ளாட்டில் நுழையவும் அதைவசப்படுத்திக்கொள்ளவும் சட்டம் இடம் கொடுக்குமா?

நீங்கள் சொல்வது போல 'ஃப்ளாட்' களின் சொந்தக்காரர் ஏழாவது ஃப்ளாட்டை வசப்படுத்திக் கொண்டது தவறுதான். ஆனால் நம்முடைய நாட்டில் 'அபார்ட்மெண்ட் ஓனர்ஷிப் ஆக்ட்' நடைமுறையில் இல்லை. அதனால் நீங்கள் அங்கு நுழைந்து வசப்படுத்திக் கொள்ள முடியாது.

. . . . ஸ்ரீவில்லிபுத்தூர்

நாங்கள் இருவரும் ஒரே வீட்டு மருமகள்கள். நாங்கள் சிறிதளவுதான் படித்தவர்கள். ஆனால் எங்கள் கணவர்கள் வியாபாரத்தின் நிமித்தம் வெளியூர் சென்று விடுகிறார்கள். மாதத்தில் இரண்டு நாட்கள்தான் வருவார்கள். எங்கள் இருவருக்கும் குழந்தைகள் வேறு கிடையாது. எங்கள் மாமியாரின் கொடுமைகள் அதிகமாக உள்ளது. இதற்கு என்ன செய்வது?

நீங்கள் விவரமாக எழுதியுள்ள கடிதத்தின் மற்ற பகுதிகளின்படி பார்க்கும்போது, நீங்கள் இருவரும் மனோதைரியம் பெற வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. மாமியாரிடம் இதைப் பற்றி வெளிப்படையாகவே பேசலாம். கணவரிடம் அன்பாக நல்ல முறையில் இதைப் பற்றிக் கூறலாம். குழந்தைகள் பிறந்தால் குடும்பத்தில் எல்லோருக்குமே ஓர் ஒட்டுறவு ஏற்படும். மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டுமே தவிர ஒரே வீட்டிற்குள் ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொண்டு இல்லறத்தை நரகமாக்கிக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை.

தி.ச. ருக்மணி தருமபுரி

எனது தந்தையார் 1963 டிசம்பரில் காலமாகிவிட்டார். எனக்கும் அதே வருஷம் 1963 செப்டம்பரில் திருமணம் ஆனது. என் உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து மொத்தம் எட்டு பேர்கள். என் தந்தையாருக்கு இரு தாரங்கள் (மனைவிகள்) 1954—ல் என் தந்தையார் உயிருடன் இருந்தபொழுதே முதல் மனைவிக்கும் அவர் பிள்ளைகளுக்கும் (நால்வர்) பொதுச் சொத்துக்களைப் பாகப்

பிரிவினை செய்துவிட்டார். என் தந்தையாருக்கு பாகப் பிரிவினைக்கு பின்பு வந்த சொத்துக்களில் ஆறு ஏக்கர் நிலமும், போட்டோ சாமான்கள் மொத்த வியாபாரமும் ஆகும். (ரூ 20,000/—முதலீடு) ஆனால் என் கணவருக்கும், என் தாயாருக்கும் சிலருடைய தலையீட்டின் பேரில் ஒருவருக்கொருவர் பகை. அதனால் நான் என் தாய் வீட்டுக்குப் போவது தடைப்பட்டது. இந்த நிலையில் 1980 வருடம் எனது தாயாரும் மற்ற அனைத்து பிள்ளைகளும் (என்னைத் தவிர) ஒன்று சேர்ந்து எனக்குத் தெரியாமல் ஆறு ஏக்கர் நிலத்தினை விற்றுவிட்டார்கள். (ரூ 50,000/—க்கு விற்பனை) அதில், விற்பனை பத்திரத்தில் என்னைத் தவிர மற்ற அனைவரும் கையெழுத்து போட்டு விற்றார்கள். என்னை இது சம்பந்தமாக ஒருவரும் அணுகவில்லை. எனக்கு இந்த விஷயம் இரண்டு வருடமாகத் தான் தெரியும்.

முதலில் என் பாகத்துக்குரிய தொகையை வங்கியில்என் பெயரில்டிபாசிட் செய்திருப்பதாகச் சொன்னார்கள். பின்பு அதுவும் இல்லை எனக் கேள்விப்பட்டேன். இந்த நிலையில் மேற்படி விற்பனை செல்லுமா? எனக்குரிய பங்கினை எப்படிப் பெறுவது? சட்டப்படி யார் பேரில் வழக்கு தொடுத்தால் பலன் உண்டு? மேற்படி நில விற்பனை மூலம் வந்த பணத்தை வேறு நிலம் ஒன்றை வாங்கி என் தம்பிப் பெயரில் எழுதி வைத்துள்ளார்கள்.

உங்கள் தந்தை சுயசம்பாத்திய சொத்தில் உங்களுக்கும் பங்கு உண்டு. விற்பனைப் பத்திரத்தில் யார் யார் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களோ, அவர்களை எதிர் பார்ட்டியாக ஆக்கி வழக்குப் போடலாம். உங்கள் தம்பியின் பேரில் நிலம் வாங்கப்பட்டது என எழுதியுள்ளீர்கள். அவர் நிலம் வாங்கிய சமயத்தில், அவர் அந்த அளவிற்குச் சுயமாக சம்பாதித்து நிலம் வாங்கியிருக்க முடியாது என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமானால் அதையும் உங்கள் வழக்கில் சேர்த்துக் கொள்ளலாம்.

. . . . சென்னை

என் கணவர் முதல் தாரத்தை கோர்ட் மூலம் விவாகரத்து பெற்று என்னை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் நடந்த ஓராண்டில், எனது மாமியார் மற்றும் உள்ள குடும்பத்தினர் என்னைக் காரணமின்றி சித்திரவதை செய்து அன்ன ஆகாரமின்றிப் பதினைந்து நாட்கள் தனி அறையில் பூட்டி விட்டனர். குடிக்கவோ சாப்பிடவோ கேட்டால் தண்ணீர் மற்றும் கழுநீர் ஊற்றி உதைப்பார்கள். இவர்களது சித்திரவதை பொறுக்காமல் வீட்டை விட்டுத் தப்பி வந்துவிட்டேன். இப்பொழுது தெரிந்தவர்கள் வீட்டில் சென்னையில் அடைக்கலமாக இருக்கிறேன். என் மண விழாவுக்கு போடப்பட்ட நகைகள் மற்றும் வெள்ளி பாத்திரங்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டுவிட்டார்கள்.

என் கணவரிடமிருந்து நான் ஜீவனாம்சம் பெற முடியுமா? அப்படி அவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டுமானால், நான் தற்பொழுது உள்ள ஊரிலேயே வழக்குத் தொடர முடியுமா?

உங்களுக்குத் திருமணம் நடந்த ஊர், அல்லது கடைசியாகச் சேர்ந்து வாழ்ந்த ஊரில் தான் வழக்குத் தொடர முடியும். நீங்கள் ஜீவனாம்சம் கோரலாம்.

தொகுப்பு: டி. ஆர். ரமேஷ்

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: 'உருண்டை' வகைகள் கடைசித் தேதி: 15.7.'87

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



திருமண மலர்

* விசாக நட்சத்திரம் இந்து சைவ வேளாளர் பொருளாதார இளநிலை தனியார் நிறுவன வேலை 27 வயது முடிந்த சென்னை வாழ் பெண்ணுக்கு மத்திய, மாநில, பொது நிறுவன நிரந்தர வேலை பார்க்கும் அதே இனத்தைச் சேர்ந்த சைவ பழக்கப் பண்புகள் நிறைந்த மணமகன் தேவை. விண்ணப்பிக்க பெட்டி எண்: 5005.

* மிருக சீரிஷம் நட்சத்திரம் இந்து சைவ வேளாளர் 9—ம் வகுப்பு முடித்து குடும்பச் சூழ்நிலை காரணமாக இதுவரை திருமணமாகாத 38 வயது நிரம்பிய குடும்பப் பழக்கமுள்ள சென்னை வாழ் பெண்ணுக்கு 40/45 வயது மணமகன் தேவை. விண்ணப்பிக்க பெட்டி எண்: 5006.

* வாணிய செட்டியார் கார்லிய மகாரிஷி கோத்திரம் வயது 21 உள்ள பெண்ணுக்கு அதே ஜாதி படித்த பட்டதாரி வேலையில் அல்லது சொந்தமாகத் தொழில் புரியும் மணமகன் தேவை. பாம்பேயில் இருந்தாலும் பரவாயில்லை. பெட்டி எண்: 5007.

* வாணியச் செட்டியார் கார்லிய மகாரிஷி கோத்திரகாரருக்கு 27 வயது 5' 3'' உயரம் சொந்தமாகத் தொழில் புரியும் அதே ஜாதி அழகும் குணமும் குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5008.

* கௌசிக கோத்திரம், சுவாதி நட்சத்திரம் வடமாள் 27 வயது, 5' 7'' நல்ல அழகு படிப்பு எம். எஸ்ஸி உள்ள பெண்ணிற்கு, நல்ல வேலையும், படிப்பும் உள்ள வரன் தேவை. உட்பிரிவுசம்மதம். தயவு செய்து ஜாதகத்துடன் எழுதவும். பெண்தற்சமயம்வேலைக்குப் போகவில்லை. (போன்: 846922) பெட்டி எண்: 5009.

* துளுவ வெள்ளாளர், 29 வயது, எம்.டெக். காரைக்குடி என்ஜினியரிங் கல்லூரியில் அஸிஸ்டெண்ட் புரொபசராக பணிபுரியும் வாலிபருக்கும், அவருடைய தங்கை, பி.எஸ்ஸி படித்த, 23 வயது பெண்ணிற்கும் மணமகன் தேவை. பெட்டி எண்: 5010.

* காசியபம், வடமாள்ஸ்மார்த்த தமிழ் பிராமணன் வடார்காடு, உத்திரம் 4 ம் பாதம், உயரம் 5' 2'' சிவப்பு நிறம், தனியார் துறையில் சம்பளம் ரூ 450/— மணமகளுக்கு அரசாங்கம், தனியார் துறை கம்பெனி, பேக்டரியில் நிரந்தர வேலையில் உள்ள 35/40 வயது, பிராமண மணமகன் தேவை. ஐயரில் எந்த உட்பிரிவும் சம்மதம். குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5011.

* Alliance invited for Smartha Iyer Haritha Uthirattathi Boy D.M.E. 33/5' 1" Central Government employee at Visakhapatnam. Also his unemployed Graduate Sister Kettai 25/5' 2" Typewriting, Shorthand passed, domestically trained. Box No. 5012.

* Wanted Iyer Brides Graduate fair employed/unemployed from non-Naithruba Kashyaba for Vadama Brothers Chadhayam, 30/5' 8"/1500 Central Govt. Ranchi, Aswini 26/5' 7"/2500 Bank Officer Kerala. Contact with Horoscope to Box No. 5013.

* Alliance invited for Iyer Vadamal Boy aged 31 yrs employed in Bank at Bhopal. Girl should be employed and transferable. Please write with Horoscope and family details to Box No. 5014.

* Alliance invited for Srivatsava Vadama Vishakam 29/5' 7" very fair Graduate/Material Management. Boy Purchase Executive in reputed Pharmaceuticals at Chandigarh. Girl main consideration. Preference to residents Delhi/Bombay. Contact S. Saradha, No. 1898, Sec. 34 D, Chandigarh.

விரைவில் திருமணம் நடைபெற வாழ்த்துக்கள்!

* விவாகரத்து பெற்ற முற்றிலும் குடும்பப்பாங்கான வீட்டிலிருக்கும் என் தங்கைக்கு வரன் தேவை. என் மாதச் சம்பளம் 3000. வயது 30. எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு. சாதாரண தோற்றம். மாநிறம். வீடு, மனை உள்ளது. கம்ம நாயுடு. ஜாதகம் தேவை. இரண்டாம் தாரமாகவும் ஒரு குழந்தையும் இருக்கலாம். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுடன் மிலிட்டரி சர்வீஸிலிருந்து திரும்பி வந்தவர்களாகவும் இருக்கலாம். சென்னை, திருத்தணி, வேலூர், குடியாத்தம் வட்டங்களில் உள்ளவர்கள் அணுகலாம். கம்மவார் வகுப்பில் உட்பிரிவுகள் இருக்கலாம். பெட்டி எண்:5015

* ஹரித கோத்திரம் மூலம், வயது 29 உயரம் 5' 4'' பி.ஏ. படித்து மாதம் ரூ 4 000 வருமானம் பம்பாயில் சொந்த பிளாட் உள்ள ஐயர் வாலிபருக்கு அழகான பட்டதாரியான குடும்பப்பாங்கான, வேலைக்குச் செல்லாத 25 வயதுக்குட்பட்ட ஐயர் பெண் தேவை. மணமகன் திருமணமான ஒரே வருஷத்தில் விவாகரத்துப் பெற்றவர். குழந்தைகள் இல்லை. ஜாதகம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5016.

* வடமாள், பாரத்வாஜ கோத்ரம், திருவாதிரை நட்சத்திரம், 25 வயதுள்ள எம். ஏ. படித்துள்ள, ஹிந்தி எழுதப் படிக்கத் தெரிந்த வேலையில்லாத குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அரசு/தனியார் துறையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5017.

* கோயமுத்தூர் தெலுங்கு தேவாங்க செட்டியார் குலம் குரம் கோத்திரம் சுப்ரம்ம மஹரிஷி, வயது 36, அரசு வேலை. மணமகனுக்கு மணமகள் தேவை. வயது 25, 27 மணமகளுக்கு மாப்பிள்ளைகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5018.

* ஸ்ரீவத்ஸ கோத்ரம், கேட்டை அய்யர் வங்கி ஆபீஸர் 28/170/2800. விரல்களிலும் உதட்டிலும் சிறிது வெண்மை நிறம். வரதட்சணை இல்லை. எளிய திருமணம். குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஏழைப் பெண்கள் ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 5019.

* ஆயில்ய நட்சத்திரம், வயது 26, நல்ல உயரம், சிவப்பு, பெண்ணிற்கு (காசிப கோத்திரம்) மாப்பிள்ளை தேவை. தனியார் கம்பெனியில் பெண்ணிற்கு வேலை. படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. (சகோதரிகள் கலப்பு மணம் செய்தவர்கள்) பிராமணர் மட்டும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5020.

* வயது 27, உயரம் 5' க்கு குறைவு. கரு நிறம், களையான முகம், நக்ஷத்திரம் மூலம், சுத்த ஜாதகம் பலிஜா நாயுடு, பி.ஏ. பட்டம், நடுத்தர குடும்ப பெண்ணுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தகப்பனார் இல்லாதவரன் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்கள் எழுதவும். பெட்டி எண். 5021.

* ஹிந்து (பலிஜா) நாயுடு, வயது 22, உயரம் 148 செ.மீ. சுமாரான நிறம். குடும்பப்பாங்கும் குணநலமும் வாய்ந்த பெண்ணுக்கு நிரந்தர வருவாயும் நற்குணமும் வாய்ந்த மணமகன் தேவை. நாயுடு வகுப்பில் உட்பிரிவுகளும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5022.

* Parents of Iyer Kaushika goodlooking Girl B. Tech (I.I.T.) studying now M.S. in U.S. versed in Veena, 22/155, seek alliance from Ph.D. studying Boys in U.S. Box No. 5023.

* Alliance for Ayangar Girl, Vadoolam, Vadagalai Barani, 28/160 cms, fair, Graduate, Bank employed, 1600 Rs. slight eye defect but no glasses. Send Horoscope Boy below 34 to Box No. 5024.

* Alliance invited from respectable cultured Reddy family for very fair Post-Graduate Boy employed in Public Sector undertaking drawing four figure salary and for fair good-looking Post Graduate Girl working as School Teacher. Separate alliance also welcome. Please reply to Box No. 5025.

* Alliance invited from good Medical/Engg. Graduates of decent vegetarian families, Chettiars/Pillai/Gounders for a good Chettiar Girl 22/5'3" studying Final Architecture Degree. Reply with details and Horoscope to Box No. 5026.

* சோழ பிராமண குடும்பத்தைச் சேர்ந்த 26 வயது பட்டதாரி உத்ராடம் நட்சத்திரம், கௌசிகம் 5' 4'' உயரம் உள்ள பெண்ணுக்கு தக்க வரன் தேவை. பெட்டி எண்: 5027.

* ஸ்ரீவத்ஸ கோத்ரம் சதய நட்சத்திரம் சென்னையில் தனியார் கம்பெனியில் பணிபுரியும், மாதம் ரூ 300 சம்பளம் வாங்கும் லட்சணமுள்ள, குடும்பப்பாங்கான 29 வயது பெண்ணிற்கு முற்போக்கு எண்ணங்கள் கொண்ட பிராமண இளைஞர்கள் தேவை. குழந்தைகள் இல்லாத மனைவியை இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5028.

* கௌண்டின்ய கோத்ரம் வடமாள் 29 வயது அழகும் நல்ல குணமும் மிகுந்த குடும்பப் பொறுப்புள்ள பெண்ணிற்கு அதே இனத்தில் வரன் தேவை. பெண் படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. பையன் அரசு அலுவலகத்திலோ, கம்பெனியிலோ நிரந்தர வேலையில் இருத்தல் வேண்டும். தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த மிராசுதாரராகவும் இருக்கலாம். திருமணம் சிறப்பான முறையில் செய்துத் தரப்படும். ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 5029.

* வேட்டுவ கவுண்டர் வகுப்பை சேர்ந்த 28 வயதுடைய படித்த எம்.ஏ.எம்.எட் (பி.எட்.) ஆசிரியை வேலை பார்க்கும் பெண்ணுக்கு இணையாக படித்த அரசு உத்தியோகத்தில் அல்லது சொந்தத்தில் தொழில் செய்யும் மணமகன் தேவை. ரேவதி நட்சத்திரம், மீனம் ராசி, தனுசு லக்கினம், செவ்வாய் தோஷம், ஜாதகம் உள்ளது. பெரியார் மாவட்ட வாசியாக இருந்தால் நல்லது. பெட்டி எண்: 5030.

* ஷடமர்ஷண கோத்ரம், வடகலை, அனுஷ நக்ஷத்திரம் கூடிய 8 வது வரை படித்துள்ள 28 வயது 5' 1'' குடும்பப்பாங்கான நல்ல பெண்ணிற்கு அதே பிரிவில் 30—35 வயதிற்குள் நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5031.

* சைவ வெள்ளாளர் இனம், தமிழ்நாட்டில் சென்ட்ரல் ஸ்கூலில் போஸ்ட் கிராஜுவேட் டீச்சராகப் (சம்பளம் 2000/—) பணியாற்றும் 30 வயது பெண்ணிற்கு, அதே இனத்தைச் சேர்ந்த வரன் தேவை. வரனின் வேலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5032.

* துளுவ வேளாளர், 26 வயது, 5' 3'' கேட்டை நட்சத்திரம், எஸ்.எஸ்.எல்.சி./ரூ 1300 சம்பளம், ஸ்டெனோவாக அரசாங்க நிறுவனத்தில் பணிபுரியும் வரனுக்கு அழகும் குணமும் உள்ள பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5033.

* அஷ்ட சகஸ்ரம், ஸ்ரீவத்ஸ கோத்ரம், சித்திரை நட்சத்திரம், எஸ்.எஸ்.எல்.சி. டைப்ரைட்டிங் ஹையர் கிரேட் பாஸ் செய்துள்ள பி.காம் தபாலில் பயிலும் பள்ளி ஆசிரியையாக உள்ள ரூ 350/— பெறும் 25 வயது குடும்பப்பாங்கான பெண்ணுக்கு நல்ல பணியிலுள்ள மணமகன் தேவை. ஜாத

சுத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 5034.

* காசியப கோத்ரம்; அஷ்ட சகஸ்ரம், பூரம், தமிழ்நாடு அரசு நிறுவனம் அஸிஸ்டெண்ட், கேரள அய்யர், சென்னையில் சொந்த வீடுள்ள ஒரே மகனுக்கு பி.எஸ்ஸி/30/165/ரூ 1100; 8—ல் செவ்வாய் (சுமார் ஒரு தோஷம்) நல்ல குணமுள்ள குடும்பப் பாங்கான படித்த வேலைக்குப் போகின்ற/போகாத 27 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் குடும்ப விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 5035.

* இந்து வள்ளுவர் 28 வயது பி.எஸ்ஸி வேலையில் உள்ள வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு 30 வயதிற்கு மேற்பட்ட பட்டதாரி மணமகன் தேவை. இந்துக்கள் எப்பிரிவினரும் சம்மதம். குழந்தைகள் அற்ற தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5036.

* வடமான், நைத்துருப காசிப கோத்ரம், ஆயில்யம், 31 வயது, 5 அடி உயரம் எஸ்.எஸ்.எல்.சி. & டைப்ரைட்டிங் பாஸ் செய்த மாநிறமான, நல்ல களையான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு நல்ல வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 5037.

* தென்னாற்காடு மாவட்டம் தெலுங்கு தேவாங்க செட்டியார் சித்திரை நட்சத்திரம் கன்னி ராசி வயது 28/157 செ.மீ. P & T யில் பணிபுரியும் பெண்ணிற்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம், உத்தியோகம் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5038.

* வன்னிய கவுண்டர், 33 வயது பட்டப்படிப்பு அரசாங்க அலுவலகத்தில் ஜூனியர் அஸிஸ்டெண்டாக பணியாற்றும் மணமகனுக்கு, நல்ல நிறம், அழகும், வசதியும் மற்றும் செவ்வாய் தோஷமுள்ள மணமகள் தேவை. உட்பிரிவு எதுவானாலும் சம்மதம். தொடர்பு கொள்க. மோகன் ராஜ், Y 130, பிளாக் 29, நெய்வேலி—607 807.

* Alliance invited for Brahmin Girl, divorcee, no issues, age 34, medium complexion, studied P.U.C. Box No. 5039.

* Alliance for Velnadu Bharadwaja Boy M.Com., Anusham 27/170/2000 Reserve Bank. Parents of well educated, employed preferably in Bank/LIC/Govt. transferable to Bangalore. Correspond with family details and Horoscope to Box No. 5040.

* Accomplished Bride for Tamil Iyer Kousika Vadma fair Graduate Uthirattadhi Bachelor 25/5' 5"/3000 Business Pondicherry Suddha Horoscope. Box No. 5041.

* கன்னட சைனிகர் செட்டியார் சமூகம், சிவ மதம் சுமார் 31 வயது, உயரம் 5' 6" டிப்ளமா (எலெக்ட்ரானிக்) தனியார் துறை கம்பெனியில் வேலை பார்க்கும் நல்லசிவப்பு நிறம் அழகிய வாலிபனுக்கு வரன் தேவை. படித்த பெண்ணாகவும் அழகாகவும் நல்ல பெர்ஸனாலிடி உள்ளவராகவும், வேலையில் அமர்ந்தும்/வேலையில் இல்லாமலும் இருக்கலாம். உட்பிரிவுகள் சம்மதமே. கோத்திரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5042.

* தென்கலை ஐயங்கார், கௌசிக கோத்ரம், 25 வயது உத்திரம் நட்சத்திரம் பி.யு.சி. படித்த பெண்ணிற்கு நிரந்தர உத்யோகத்தில் உள்ள, செவ்வாய் 7, 8ல் உள்ள வரன் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5043.

* கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பொருளாதார வசதியில் தன்னிறைவு பெற்ற E.S.L.C. படிப்புள்ள, வாதூல கோத்ரம், வடமாள், ரோகிணி வயது சுமார் 50, பார்ப்பதற்கு 40 வயது தோற்றமுள்ள வரனுக்கு ஏதேனும் ஒரு கைத்தொழில் தெரிந்த 30 வயதிற்கு மேற்பட்ட குடும்பப் பாங்கான மணமகள் தேவை. காஞ்சி காமகோடி மடத்தில் வேலை பார்க்கிறார். உட்பிரிவினரும் விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5044.

* மாத்வ தேசிஸ்த மராத்தி பேசும் சித்திரை நட்சத்திரம் 27 வயது, காஸ்யப கோத்திரம், நல்ல தோற்றமும் குடும்பப்பாங்கான மாநில அரசில் ரூ 700/— ஊதியம் பெறும் பெண்ணிற்கு மராத்தி/கன்னடம் பேசும் நல்ல வேலையுடன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. பெட்டி எண்: 5045.

* Wanted Bridegroom for Vadama, Haritha Gothram, Palghat Iyer Girl, age 27, B.Com., star Bharani. Horoscope not essential. Box No. 5046.

* Unencumbered tall Brahmin match North settled within Thirty Five for double Post Graduate wheatish fair goodlooking Vadakalai Bharadwaja Anusham, innocent divorcee 27/165 unencumbered employed Bhopal. Box No. 5047.

* சௌராஷ்டிரா குலம் 5' 2" பி.காம், சி.ஏ.ஐ.ஐ.பி. 32 வயது சம்பளம் 2400. தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வேலை பார்க்கும் பையனுக்கு (சொந்த ஊர் கும்பகோணம்) வேலையில் உள்ள (அல்லது) வேலையில் இல்லாத சௌராஷ்டிரா பட்டதாரி பெண் தேவை. ஜாதகம் மற்றும் முழு குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5048

* பிரஹசரணம், கௌண்டின்ய கோத்ரம், புனர்பூசம், பி.ஏ. படித்து நர்ஸரி டீச்சராக உள்ள நல்ல சிவப்பான 34 வயது 5' 1" உயரமுள்ள பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள பட்டதாரி வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 5049.

* வடமான் பாரத்வாஜ கோத்திரம் பூரம் வயது 34, எஸ்.எஸ்.எல்.சி. படித்த குடும்பப்பாங்கான அழகிய நல்ல நிறம் உள்ள பெண்ணுக்கு அதே வடமாள் பிரிவைச் சார்ந்த நல்ல வேலையில் உள்ள 36—39 வயதில் வரன் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 5050.

* திருநெல்வேலி சைவ வேளாளப் பிள்ளை வயது 24, உயரம் 5' + 2 படித்த தமிழ், ஆங்கிலம் டைப்பிங் ஹையர் முடித்த நல்ல அழகும் முக லட்சணமும் உள்ள பெண்ணிற்கு வங்கி/மத்திய மாநில அரசு/பொதுப் பணி தனியார்த் துறைகளில் நல்ல உத்யோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. உத்யோக, குடும்ப விவரங்களுடன் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண்: 5051.

* சௌராஷ்டிரா/ஸ்யவன கோத்திரம்/மிருக சீரிஷம்/எஸ்.எஸ்.எல்.சி./கம்பெனி வேலை/25

வயது/சிவப்பான லக்ஷணமான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு. நிரந்தர வேலை/வருமானம் உள்ள பையனும் அவனது அண்ணன் எஸ்.எஸ்.எல்.சி./ஐ.டி.ஐ./ 27 வயது/ரூ 1000/— சென்னையில் வேலையில் உள்ள குடும்பப்பாங்கான பெண்ணும் தேவை. பெட்டி எண்: 5052.

• Thuluva Vellala, M.A., M.Ed., 30/168 Bridegroom working in Higher Secondary School, drawing Rs. 1800/- wants a Graduate/Post Graduate Bride. Sub-sects accepted. Box No. 5053.

• Alliance from Vadama Brahmin Graduate employed below 42 years with Horoscope for very fair Brahmin Graduate Vathoola Bride, 37, height 150cm, employed in Bank drawing salary Rs. 2500. Reply to Box No. 5054.

• Wanted educated Brides of Saurashtra community below 26, of Tamilnadu settled for Bank employed, Post Graduate, professionally qualified Saurashtra Bridegroom 30/156/2400, Bharatwaja Gothram, Purattathi with Sevvai Dosham. Apply with Horoscope and family details to Box No. 5055.

• Alliance for Hindu Girl 28 Graduate Central Govt. Madras good-looking fair complexion intercaste parents earning with no other encumberance, own house. Caste no bar. Box No.5056

• Alliance invited for Kashyapa Gothram Iyer Boy 35 partially blind having monthly income Rs. 4000/- from parents of accommodative Girls upto 30 desiring permanently settling in Bombay. Simple marriage. Apply Box No. 5057.

• Wanted employed/Industrial/Business/Agriculturist Grooms for 38 years rick fair Nydrupakasyapa Vadama Iyer Girl 155 cms, S.S.L.C., unemployed well trained in domestic work god fearing home loving, star Avittam mars in Seventh Place. Decent marriage. Widower, sub-sects no bar. Horoscope to Krishnamurthi, No. 7, Kalaivanar Street, Arakkonam 631 001.

• Hindu Kshatriya Nadar 53 non-veg, S.S.L.C., divorced lonesome well settled at Madras (3 children all above 25) seeks suitable alliance below 45 minimum S.S.L.C. no bar, healthy, brainy good looking lady issueless divorcee and widows may contact in own hand with complete Bio-Data to Box No. 5058.

• பத்ம வெள்ளை நாயுடு கவாரி 30 வயது 5' 4'' எம்.ஏ. பாஸ் செய்து மத்திய அரசில் பணியாற்றும் மாதம் ரூ 1500/— பெறும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு அதே வகுப்பைச் சேர்ந்த எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம். காம்., பாஸ் செய்த மத்திய/மாநில அரசில்/வங்கியில் ரூ 2000/—க்குக் குறையாமல் மாதச் சம்பளம் பெறும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 34—35க்குள் வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். விவரங்களுக்கு பெட்டி எண்: 5059.

• தனியார் கம்பெனி ஒன்றில் மாதம் 1000—க்கு மேல் சம்பளம் வாங்கும் பி.ஏ. படித்த 25 வயது ஐயர் பெண்ணுக்கு நல்ல நிரந்தர வேலையில் இருக்கும் ஐயர் வரன் தேவை. கோத்திரம் பாரத்வாஜம். நக்ஷத்திரம் உத்திரம். உயரம் 5' 2''. பெட்டி எண்: 5060.

• Sowrashtra for 32/165/2200 Central Govt. employed and good looking and fair, seeks good looking and Graduate Bride may or may not employed from any part of Tamilnadu. Please apply with Horoscope to Box No. 5061.

• துளுவ வேளாளர் (முதலியார்) வகுப்பைச் சேர்ந்த, மிருகசீரிட நக்ஷத்திரம், 26 வயது, 160 செ.மீ. எஸ்.எஸ்.எல்.சி. தேறிய லட்சணமான குடும்பப்பாங்கான பெண்ணுக்கு, மணமகன் அதே வகுப்பைச் சேர்ந்த மத்திய, மாநில அரசு தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலையுள்ள படித்த மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5062.

• மூல நட்சத்திரம், 24 வயது, +2, அழகான குடும்ப வேலைகளில் பயிற்சி பெற்ற பெண்ணுக்கு ஏற்ற நிரந்தர வேலையிலுள்ள வாணிய செட்டியார் வரன் தேவை. எளிய திருமணம். பெட்டி எண்: 5063.

• மத்திய அரசில் நிரந்தர வேலை, வெள்ளாளர், மாத வருமானம் ரூ 1750/— மனைவி இறந்து இரண்டு சிறிய குழந்தைகள், எனக்கு 35 வயதுக்குள் உத்தி யோகம் பார்க்கும் பெண் தேவை. விதவை, குழந்தை பெற முடியாதவர்களும் விண்ணப்பிக்கலாம். இடது காலில் சிறிய ஊனம் (நிரந்தரமில்லை.) ஜாதி, மதம், வயது பேதமில்லை. பெட்டி எண்: 5064.

• வடமாள், கௌசிக கோத்ரம், உத்திரட்டாதி வயது 34. சென்னை கஸ்டம்ஸ் சம்பளம் ரூ 1500/— நிரந்தர வேலையுள்ள இருகாலேயும் இழந்த செயற்கை கால் பொருத்தப்பட்ட பையனுக்கு 10—வது வரை படித்த குடும்பப்பாங்கான வேலைக்குச் செல்லாத பெண் தேவை. ஜாதகம் குடும்பப் பின்னணியுடன் எழுதவும். பெட்டி எண்: 5065.

• தமிழக அரசுப் பள்ளியில் எழுத்தரான வயது 27 அழகான சிவப்பு நிறமுள்ள கௌசிக கோத்திரம் வடகலைப் பெண்ணிற்கு தந்தையில்லை. தாய் பென்ஷனில் ஜீவித்திருக்கிறாள். சீர் வரிசை செய்ய வசதியின்மையால் இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்படவும் பெரிய குடும்பத்தை நிர்வகிக்கவும் விருப்பமுடையவள். முழு விவரங்களுடன் ஜாதகமும் அனுப்பி வைத்தால் மற்றைய விஷயங்களை தாய் வழி சித்தப்பா கவனிப்பார். பிராமணர்கள் விண்ணப்பிக்கவும் பெட்டி எண்: 5066

• தெலுங்கு பிராமண முலகநாடு பாரத்வாஜ கோத்ரம், பெரிய தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் 29 வயது கொண்ட பட்டதாரி பையனுக்கு அதே அல்லது மற்ற பிரிவுகளிலுள்ள வயது 27 க்கு உட்பட்ட பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண்: 5067.

• Alliance invited from parents of suitable Girls for Sankrithi Gothram Brahacharanam Boy M.Sc., aged 29. Employed as an Officer in Bank in Gujarat drawing Rs. 3500/- Girls employed in Bank/LIC/Central Govt. preferred. Sub-sects no bar. Horoscope optional. Girl's family background only consideration. Reply to Box No. 5068.

• Alliance invited for a Roman Catholic A.D. Nurse Rs. 1600/- age 38 in Govt. Service, from C.S.I. or Roman Catholic Tamilians or Keralite Graduates, Post-Graduates employed Grooms, widower with one or two children also invited. Box No. 5069.

• எம். காம்., மாநில அரசுப் பணி ரூ 1800/— கத்தோலிக்க கிறிஸ்தவ, ஆதி திராவிடர், 5½ மணமகனுக்கு, 30 வயதுக்குள் சிவப்பு நிறமும் நல்ல அழகும் நிறைந்த பெண் தேவை. ஜாதி, மதம், மொழி, வரதட்சணை தடை இல்லை. பெட்டி எண்: 5070.

• இளமைத் தோற்றமும் நல்ல ஆரோக்கியமும் உள்ள இந்து முதலியார் 49 வயது 169 செ.மீ. ரூ 2500 (மாதம்) ஆபீசருக்கு சேவத்தில் வசிக்கும் வாழ்க்கைத் துணைவி தேவை. ஜாதி மத பேதமில்லை. குழந்தைகளில்லா விதவை, மணவிலக்கு பெற்றவரும் சம்மதம். பெட்டி எண்: 5071.

• அகமுடையார் (முக்குலத்தோர்) இனத்தைச் சேர்ந்த திருச்சியில் அரசுக் கல்லூரி அலுவலகத்தில் பணிபுரியும் வயது 24, உயரம் 157 செ.மீ. மாநிறம், பட்டதாரிப் பெண்ணுக்கும் பொறியியல் மேற்பட்டம் பெற்று சென்னையில் அரசுத் துறையில் பொறியாளராகப் பணியாற்றும் வயது 29, உயரம் 160 செ.மீ. ஒரே சகோதரருக்கும் தகுந்த மணமகன்/மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்:5072

• ஐயர் வடமாள், வாதூல கோத்ரம், ரேவதி நட்சத்திரம் மத்திய அரசில் வேலை ரூ 1500/– பி.ஏ. படித்த 32 வயது மணமகனுக்கு மாற்றல் கிடைக்கக் கூடிய வேலையில் இருக்கும் பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்:5073

• சென்னை மாநில அரசில் பணிபுரியும் ஆதி திராவிடர் இனம், மாதம் ரூ 1050/– சம்பளம் பி.ஏ. படித்த 27 வயதுள்ள 5' அடி உயரமான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, நல்ல குணமுள்ள நிரந்தர உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5074.

• சோழிய வேளாளர் பிள்ளை இனத்தைச் சார்ந்த தொலைபேசித் துறையில் கடைநிலை ஊழியராக 1000 ரூபாய் சம்பளத்தில் பணியாற்றும் 29 வயது 5.5 அடி உயரமுள்ள மணமகனுக்கு அதே இனத்தைச் சார்ந்த அரசு நிறுவனத்தில் பணியாற்றும் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5075.

• Wanted for Srivatsa Vadama, Iyer Girl, domestically well trained Girl with Sevvai Dhosham. Age 32 years, Groom within 38 years well settled, sect no bar, widower/divorcee no bar. Send reply with Horoscope to Box No. 5076.

• Alliance invited from well settled Grooms for Telungani Telugu Brahmin Bharatwaja Rohini Girl studying for B.A. 22/150. Sub-sects no bar. Decent early marriage. Box No. 5077.

• Alliance from well settled vegetarian Brahmin Executives 32-37, for Poosam, Sandilya Iyengar 31, 5'2" fair Graduate trained Teacher, decent family, doing B. Lit., Bombay. No Horoscope. Box No. 5078.

• Alliance invited for Haritha Gothra Pooram Graduate Iyer Boy 32/170/1500 Central Govt. Service Madras from city employed or transferable service Girls domestically well trained and capable of fitting into a joint family. Box No. 5079.

• Alliance invited from working Girls in Bank/Central Government for Hindu Kondayam Kottar (Thevar) Boy, pure vegetarian, 30 years, B. Com., drawing Rs. 1500/- per month in a Public Limited Company at Bombay. Sub-sect no bar. Reply to Box No. 5080.

• Alliance for a smartha, desistha, Marathi speaking Girl age 29yrs, height 5feet, B.A. Graduate Please send Horoscope and family details to Box No. 5081.

• Wanted Brahmin Boys/Boys of Parents either of one should be a Brahmin, 26 to 31 years, having Executive position, for daughter, smart 22/160 cms, B.Com., of Tamilian Mudaliar-father, Iyer- Mother. Early marriage. Apply with Horoscope to Box No. 5082.

• Alliance invited from Hindu Brahmin Iyer Boys for a medium faired 5' 3" tall, Visharad passed Girl star Visakam, Gouthama Gothram and date of Birth 8.9.1959. Box No. 5083.

• Alliance invited for Smartha Vadama Girl 32, Pooram, Bharadwaja Gothram, 5' height medium complexion employed in a Private Firm, Bangalore drawing Rs. 1200/- p.m. not transferable job. Sub-sects no bar. Apply to Box No. 5084.

• Alliance for Kerala Srivatsa Girl, 32 years, Visakam, SSC passed, Carnatic Music Diploma holder, height 153 cms, medium complexion, goodlooking, Keralites preferred. Apply to Box No. 5085.

• இந்து காஜிலு பலிஜா. அரசுத் துறையில் வடாற்காடு மாவட்டத்தில் தட்டச்சராகப் பணியாற்றும் 33 வயதுள்ள பெண்ணிற்குத் தனியார்/அரசுத் துறையில் பணியாற்றும் 35 அல்லது 36 வயதில் சிறிய பண்புகளுடைய மணமகன் தேவை. சொந்த தொழில் செய்பவரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5086.

• Alliance from Tamil Yadava Girl for Yadava Boy Diploma Refrigeration employed 31/160/700 backed by savings. Fair Bangalore based decent family. Send Horoscope and details to Box No. 5087.

• ஆற்காடு முதலியார் வகுப்பைச் சேர்ந்த வயது 25, பி.யு.சி. வீட்டு வேலைகளில் தேர்ச்சி பெற்ற அழகிய பெண்ணுக்கு மத்திய, மாநில அரசியல் உத்தியோகம் அல்லது வியாபாரம் செய்யும் இதே வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். முகவரி: கோகுலகிருஷ்ணன், 696/B, அரவிந்த நகர், குந்தக்கல் 515 801.

• ஐயர், பிரஹசரணம், ஹரித கோத்ரம், பூசம் நக்ஷத்திரம். வயது 28, பி.எஸ்ஸி, டிப்ளமா இன் ஜர்னலிஸம் படித்து வீட்டு வேலை நன்கு தெரிந்த மிக அழகான, குடும்பப்பாங்கான பெண்ணிற்கு படித்து நிரந்தர வேலையில் உள்ள மணமகன் தேவை. (உட்பிரிவுகள் சம்மதம்.) ஜாதகம் இல்லாதவர்களும் (மனப்பொருத்தம் போதும்) விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5088.

• **Decent mutual alliance for Lower middle class இந்து** சௌராஷ்டிரா 29 வயது ஸ்கூல் ஃபைனல், குடும்பப்பாங்கான கடவுள் பக்தி கொண்ட பெண்ணிற்கும், அவர் சகோதரர் 27/பி.காம், டைப்பிஸ்ட் (தனியார்)800/–க்கும். ஜாதி தடையில்லை. வரதட்சணை கிடையாது. எளிய திருமணம். பெட்டி எண்: 5089.

• State Government employed Veterinarian aged 29/160 belonging to Hindu Nadar community seeks alliance from fair and good looking Medical Graduate Bride of the same caste. Interested candidates can apply to Box No. :5090

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாகப் பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர்: வி. முரளி. துணை ஆசிரியர்: மஞ்சுளா ரமேஷ்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543, 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 36/–; வெளிநாடு: விமானத் தபால்: ரூ 250/–; கப்பல் தபால்: ரூ 100/–.


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
250 கிராம்
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின்– அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
AS RIN 115 2417 TM

Registered No. TNMS (S) 231.

Registered as a Newspaper in Sri Lanka



இப்போது உங்கள் குடும்பத்தினருக்குச் சிறந்ததைத் தருவதற்கு, அதிகமாகச் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை.

உங்கள் குடும்பத்திற்கு அபார சுவை மிக்கதொன்றைக் கொடுங்கள்; உங்கள் பரிவை வெளிப்படுத்தும் சுவை; அது சூர்யா தரும் சுவை.

சூர்யா அதிக போஷாக்கு தருவது. குறைந்த கொழுப்புச் சத்து கொண்டது. சக்தி தரும் முக்கியப் பொருள்களான லினோலெனிக் அமிலமும், டோகோஃபெராலும் இதில் உள்ளன.

சூர்யா லேசான எண்ணெய்; விலை குறைவானது; நீண்ட நாட்கள் உபயோகத்திற்கு வரக்கூடியது. இதில் பொறிக்கப்படும் உணவு வகைகளிலிருந்து எண்ணெய் சொட்டுவதோ, கசிவதோ இல்லை.

சூர்யா நாட்டின் மிகப் பெரிய உயர்நுட்ப சோயாபீன் உற்பத்தி நிறுவனத்தார் அளிக்கும் 100 சதவிகித சுத்தமான தாவர எண்ணெய்.

இப்பொழுது தென்னிந்தியாவில் இதை அறிமுகம் செய்கிறோம்.



குறைவான விலையில், நிறைவான நலம் தரும் நல்ல சுவை.

Mudra : D : SAL 2684 TAM